வாரப் பதிப்பு விலை சதம் 25

தமைலே தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

மில்க்வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்




புத்தகம் 20—திருவள்ளுவர் ஆண்டு 1997 ஆடி திங்கள் 30-ம் நாள் (15—8—1966) திங்கட்கிழமை ரபி: ஆகேர் 27 | இதழ் 11

# தீவுப் பகுதி தண்ணீர்ப் பஞ்சம் தீரும்

## எம். பி., அமைச்சர் எடுக்கும் நடவடிக்கை

தீவுப் பகுதி மக்களின் தண்ணீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர பரிகாரம்காணும் முயற்சியில் தீவுப்பகுதிப் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம் அவர்களும் உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம் அவர்களும்தீவிரமாக இறங்கியுள்ளார்கள். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மூன்று திட்டங்கள் இருப்பதாகவும் இதில் எது சாத்தியமாக இருக்கும் என்பதைப் பரிசோதனை மூலமே முடிவு செய்யலாம் என்றும் அமைச்சர் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.



அணுசக்தி முறையில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டம். இந்திட்டம் கைகூடின் நன்னீர் கிடைப்பதுடன், வேறு தொழில் விருத்திக்கும் இடமேற்படும்.

இஸ்ரேல் நிபுணர்களின் ஆழக்கிணறு திட்டத்தைப் பரிசோதனை செய்து பார்ப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்று ஒரு செய்தி கூறுகிறது. இத்திட்டம் உரிய பயனைக் கொடுக்குமெனில் தீவுப்பகுதிகளில் உடனடியாக ஆழக்கிணறு தோண்டும் முயற்சிகள் ஆரம்பமாகலாம் என்று தெரிகிறது.

கிழக்கு ஜெர்மனியில் ஒரு புதுவகை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும், கடல் நீரை பெரிய தொட்டிகளில் நிரப்பி இம்மாத்திரைகளின் துணையுடன் நன்னீராக்க முடியுமென்று இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனையும் பரிசோதித்துப் பார்க்க ஒழுங்குகள் நடைபெறுகிறதாம்.

இம்மாதம் வடபகுதி செல்லும் இராசாங்க அமைச்சரைத் தீவுப் பகுதிக்கு அழைத்துச் சென்று நிலைமையை நேரில் எடுத்து விளக்கிக்கூறுவதென்று திரு. நவரத்தினம் முடிவு செய்திருக்கிறார்.



சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த சென்னை மாநகராட்சி மன்றத்தலைவரும் தி. மு. கழகப் பிரமுகருமாகிய திரு. மைனர்மோசஸ் தமிழரசுத் தந்தையைச் சந்தித்து தமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

படம்: ராஜப்பன்

## 'தங்கம் எங்கே?'

'அந்தத்தங்கம் எங்கே?' என்ற கேள்வி கடந்த 8, 9-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பரவலாக பலராலும் கேட்கப்பட்டது. ஐ. நா. சபை சென்று திரும்பிய திரு. பொன்னம்பலத்திற்கு யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் 65 தங்கப்பவுணிலான மாலை ஒன்று அணிவிக்கப்பட்டது. திரு. பொன்னம்பலம் அதற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மற்றவர்களைப் போன்று தான் இந்த மாலையைப் பூட்டி வைக்கப் போவதில்லை என்றும், அதனை முதலாகக்கொண்டு ஒரு தொழிற்சாலையை ஆரம்

(7-ம் பக்கம் பார்க்க)

## கல்முனை கூட்டத்திலும் இது சிறியதாம்!

"யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுவதற்காகப் பிரதமமந்திரி மேடைக்கு வந்ததும், அவரைப்பார்ப்பதற்காக ஆங்கு வந்திருந்தவர்களில் ஒரு பகுதியினர் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

"பிரதமர் கல்முனைக்குச் சென்ற போது அங்கு கூடியிருந்த கூட்டம் அளவுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மக்கள் கூடியிருக்கவில்லை என்று நடுநிலைமையாளர்கள் பலர் கூறுகின்றனர். தமிழரசு வாதிகள் பிரதமரை நேரில் பார்த்து கொண்டனரெனினும் கூட்டத்தில் கலந்து கொள்ளாமலிருப்பதில் கவனமாக இருந்தனர்"

— ஜனதின (12-8-66)

## மத்திய வங்கியில் பழிவாங்கு படலம்

இலங்கை மத்திய வங்கித் தமிழ் ஊழியர்கள் சிலரைப் பழிவாங்கும் முயற்சியில் வங்கி நிர்வாகம் இறங்கியிருப்பதாக நம்பகரமான வட்டாரத்திலிருந்து நமக்கு தகவல் கிடைத்திருக்கிறது. வங்கிப் பெயர்ப் பிரச்சினையில் உயர் அதிகாரிகளுக்கு ஏற்பட்ட தோல்வியின் விளைவே இதற்குக் காரணம் என்றும் தெரிய வந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கிப் பெயர்ப்பிரச்சினையில் முன்னின்று உழைத்த தமிழ் பேசும் ஊழியர்களைப் பழிவாங்க மத்திய வங்கி நிர்வாகிகள் முயன்று வருகிறார்கள். உயர் மட்ட அதிகாரிகளின் முடிவுக்கு மாறாக பெயர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டதனால் ஏற்பட்ட அவமானத்தைப் போக்கவே இம் முயற்சியில் அவர்கள் முனைந்திருக்கிறார்கள் என்று நம்பப்படுகிறது.

வங்கி மொழி பெயர்ப்புக் கிளையில் கடமை யாற்றிய ஒருவரை அவர் இதுவரை செய்து வந்த தொழிலுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு பகுதிக்கு மாற்றம் செய்திருக்கிறார்கள் இதே போன்று வேறு சிலரும் இவ்வாரத்தில் மாற்றம் செய்யப்படலாம் என்று தெரிகிறது.

இதற்கிடையில் தமிழ் மொழி விசேட சட்ட விதிகளின் மூன்றும் சரத்தின் பிரகாரம் சகல சுற்று நிருபங்களும் தமிழ் மொழியிலும் விநியோகிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் படி வங்கித் தமிழ் ஊழியர்கள் உட்துறை சுற்று நிருபங்களுக்கு தமிழ் மொழி பெயர்ப்பு கேட்டிருக்கிறார்களாம். தமிழ் ஊழியர்களின் வேண்டுகோளுக்கு நிர்வாகத்தினர் இற்றைவரை எவ்வித பதிலும் கொடுக்கவில்லையென்று தெரிகிறது.

தமிழ்ச் சுற்று நிருபங்கள் வேண்டுமென்று கோருபவர்களையும் பழிவாங்க அதிகாரிகள் திட்டமிட்டிருக்கிறார்களாம். ஆனால், தமிழ் ஊழியர்களின் கோரிக்கையை நிர்வாகத்தினர்சுலபமாக தட்டிக் கழித்துவிட முடியாது: சட்டவிதிகள் தமிழ் பேசும் ஊழியர்களின் கோரிக்கைக்குச் சாதகமாகவே இருப்பதனால் எப்படியும் சுற்று நிருபங்களுக்கு தமிழ் மொழி பெயர்ப்புக் கொடுத்தேயாக வேண்டியிருக்கிறது.

தேசிய அரசாங்கம் உருவான காலம் முதல் மத்திய வங்கி பிரச்சினைகளின் பிறப்பிடமாக இருப்பதையிட்டு நிதி அமைச்சு காரியாலயத்தைச் சேர்ந்த உயர்தர சிங்கள அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் 'மத்திய வங்கி உயர் மட்டத்தில் உடன்களையெடுப்பு நடைபெறுவிட்டால் வங்கி பிரச்சினைகளால் முடிமறைக்கப் பட்டுவிடும். அதே நேரத்தில் கீழ்மட்ட ஊழியர்கள்டமும் பணிவு இருக்க வேண்டும்' என்று அவர் கூறினார்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

அடுத்த இதழ் வெளியூரில் 22-8-66 காலை தலை நகரில் 21-8-66 மாலை கிடைக்கும்

## உயிர் வாழும் காலம்

நூறு ஆண்டுகள் வாழ்ந்தவரை நாம் போற்றுகின்றோம். ஆனால் எதிலும் நிதானம் என்று பெயர் பெற்ற ஆமை உயிர் துறப்பதிலும் நிதானம் காட்டுகின்றது. அதன் ஆயுட் காலம் 300 முதல் 400 ஆண்டுகள் வரை!

யானைகள் சாதாரணமாக நூறு ஆண்டுகள் வரை உயிர் வாழும். முதலைகளை அவற்றின் இஷ்டப்படிவிட்டால் முன்னூறு ஆண்டுகள் வரை வாழும், கழுகுகள் இரு நூறு ஆண்டுகள் உயிர் வாழுகின்றன. திமிங்கிலங்களின் ஆயுட்காலம் நம்மை பிரமிக்க வைத்து விடும்! திமிங்கிலங்கள் சாதாரணமாக ஐந்நூறு முதல் ஆயிரம் ஆண்டுகள் வரை ஜீவிக்குமாம்.

—சி. சண்முகலிங்கம்.




# வங்கம் தந்த சிங்கம்

இந்திய சுதந்திரப் போராட்டச் சரித்திரத்தில் முதலிடம் பெற்ற தலைவர்களுள் ஒருவரான நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் தேசபக்தியும் தியாகமும் வீரமும் மிகவும் போற்றுவதற்குரியவை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இந்திய மண்ணிலும் வெளி நாட்டிலும் சிறிதும் சலிக்காமல் இறுதி மூச்சு உள்ளவரையில் அவர் போராடினார். "நேதாஜியின் பெயர் என்றும் நினைவில் இருக்க வேண்டிய ஒன்று. தேசபக்தியில் அவர் யாருக்கும் சளைத்தவர் அல்ல. அவருடைய செயல்கள் ஒவ்வொன்றிலும் வீரம் பளிச்சிட்டது" என்று காந்திஜியே பாராட்டியிருக்கிறார்.

செல்வம் மிக்க வங்காளக் குடும்பம் ஒன்றில் 1897-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 23-ம் தேதி சுபாஸ்சந்திர போஸ் ஒன்பதாவது குழந்தையாகப் பிறந்தார். சிறி ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் ஆகிய இரு பெரியோரின் வாக்குகளையும் படித்து, ஆன்மிக நெறியைத் தழுவ எண்ணங் கொண்டு, தம்முடைய பதினேழாவது வயதில் இமய மலையை நோக்கிச் சுபாஷ் சென்றுவிட்டார்.

பின்பு மீண்டும் திரும்பி வந்து கல்வி பயின்றார்; இங்கிலாந்துக்குச் சென்று ஐ. ஸி. எஸ். பரீட்சையிலும் வெற்றி பெற்றார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்துமூன்று. 1921-ம் ஆண்டில் இந்தியா திரும்பிய சுபாஷ்சந்திர போஸ், விடுதலைப் போராட்டத்தின் தீவிரத்தைக் கண்டு, ஐ. ஸி. எஸ். பதவியைத் துறந்து அரசியலில் முழு மூச்சுடன் குதித்தார். அந்த நாளில் மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கம் நடந்து கொண்டிருந்தது. காந்திஜியைச் சுபாஷ் சந்தித்தார்; அந்தச் சந்திப்பு அவருடைய வாழ்க்கையையே மாற்றியது.

1938-ம் ஆண்டிலும் 1939-ம் ஆண்டிலும் காங்கிரஸுக்குச் சுபாஷே தலைமை வகித்தார். போஸின் தீவிரக் கொள்கைகளைக் கண்டு வாலிபர்கள் பலரும் அவரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டார்கள். சுபாஷைப் பிரிட்டிஷ் சர்க்கார் பல முறை சிறையில் அடைத்தது.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது கைதாகிச் சிறையில் இருந்த சுபாஷ் சந்திர போஸ், கல்கத்தாவிலிருந்து ரகசியமாகத் தப்பி, ஆப்கனிஸ்தானம் வழியாக ஜெர்மனிக்குச் சென்றுவிட்டார். அங்கிருந்து ஜப்பானுக்கு ஸப்மரீன் கப்பலில் பிரயாணம் செய்தார். அன்று ஜப்பான் பிடித்திருந்த மலேயாவை அடைந்தார். சிங்கப்பூரில் இந்திய தேசிய ராணுவத்தையும் தொடங்கினார். அங்கே இருந்த பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்தார்கள்.

'டில்லி சலோ!' 'ஜய் ஹிந்த்!' என்ற அவருடைய கோஷங்கள் இந்தியர்களின் மனத்தைக் கவர்ந்தன. 'ஆஜாத் ஹிந்த் சர்க்கார்' என்று ஒரு சர்க்காரைப் பிரிட்டிஷ் பிடியிலிருந்து விடுதலை செய்யத் திட்டமிட்டார். இந்தச் சமயத்தில் 'ஆஜாத் ஹிந்த் சர்க்கார்'ருக்காகச் சில விசேஷத் தபால் தலைகளை நேதாஜி வெளியிட்டார். இப்பொழுது அந்தத் தபால் தலைகள் கிடைப்பது மிகவும் அருமை. அவற்றில் ஒரு ரூபாய் மதிப்புள்ள தபால் தலைக்கு ஐம்பது ரூபாய் வரையில் கொடுக்கப் பலர் தயாராக இருக்கிறார்கள். ஆனால் கிடைப்பது தான் இல்லை.

'சலோ டில்லி' என்னும் சுலோகம் பொறித்த இரண்டு தபால் தலைகள் நூற்றைம்பது ரூபாய் விலைக்குப் போகும் என்றால், ஆச்சரியமாகத்தான் இருக்கும். அவ்வளவு விலை கொடுத்தாலும் அது கிடைத்தால் கிடைப்பவருக்கு அதிர்ஷ்டமே!

ஃபார்மோஸா தீவுக்கு அருகே விமான விபத்தில் நேதாஜி இறந்து போய்விட்டார் என்ற செய்தியைப் பல ஆண்டுகள் வரையில் யாருமே நம்பவில்லை.

இந்திய மக்களின் உள்ளத்தில் என்றும் குடிகொண்டிக்கும் வீரர் திலகமான நேதாஜி சுபாஷ், சந்திர போஸ் காட்டிய வீரம் இலங்கைத் தமிழர்கள் பின்பற்ற வேண்டியது ஒன்றும்

# ஓடிப்போனவன்

நவசோதி

## (3) பாச வெள்ளம்

பேய்க் காற்று வேகமாக வீசியது.

பயங்கரமாகத் தீ எரிந்தது. 'நெருப்பு... நெருப்பு' என்ற கூக்குரல் எங்கும் எழுந்தது.

கரும்புகையை வானத்தில் கண்டவர்களும், கூக்குரலைக் கேட்டவர்களும் விரைந்து வந்தனர். தீயின் கொடூரப் பிடியில் ஒரு வீடு எரிந்து கொண்டிருப்பதைக் கண்டனர். அதுதான் வசந்தனும் அவனது அன்னையும் வசித்து வந்த சின்னஞ் சிறியவீடு.

பலர் தீயை அணைக்க தம்மால் முடிந்ததை எல்லாம் விரைந்து செய்தாலும், காற்றின் அணைவிலாலே நோக்கி தீ எழுந்து எரிந்தது.

எரியும் வீட்டினுள் யாராவது இருக்கின்றனரா என்பது எவருக்குமே தெரியவில்லை. சிலர், வசந்தனின் அன்னை இருக்கவேணும் என்றனர்! வசந்தனும் இருக்க வேண்டும் என்றனர் இன்னும் சிலர். ஆனால் தீயின் அகோரத்தினால் ஒருவருக்காவது வீட்டினுள் செல்லத் துணிவு பிறக்கவில்லை. அப்பொழுது - பதட்டத்துடன் அங்கு ஓடி வந்தாள் வசந்தனின் அன்னை.

எரியும் வீட்டினுள் வசந்தனும் இருக்க வேணும் என்ற பேச்சு பட்டதுதான் தாமதம். "ஐயோ ... வசந்தா ... என்ரை மகனே" என்று அலறிக் கொண்டே எரியும் வீட்டினுள் பாய்ந்தாள் அவள்.

இதனை எவருமே எதிர்பார்க்கவில்லை. இதைக் கண்டு பிரமித்து நின்ற கூட்டத்திற்கு அவளைத் தடுக்கக் கூடத் துணிவு பிறக்கவில்லை. ஆனால், தடுத்திருக்கலாம், என்று பேசிக் கொண்டனர்.

அவளைக் காணவில்லை. அவளின் குரல்கூட கேட்கவில்லை அது எரிந்து பொசுங்கியிருக்க வேண்டும்.

"நான் வாழ்வது என் ஆசை மகன் வசந்தனுக்காகவேதான் அவனில்லாவிட்டால் எனக்கேன் இந்த உயிரை' —

வசந்தனின் அன்னை உலகிலே வாழ்ந்து வருவதன் குறிக்கோளே இதுதான். பிள்ளைப் பாசத்திற்கு முன்னால் எரியும் வீட்டினைத் தச்சமாகவே மதித்தாள். பலர் தங்களால் முடிந்த அளவு பாத்திரங்களில் தண்ணீர் கொண்டுவந்து வீட்டின் மீது வீசினர். சிலர் ஒன்றுமே செய்யத் துணிவு பெறாது வசந்தனின் அன்னையை எண்ணிப்பதறினர். வீடு பாதிக்கு மேல் எரிந்து முடிந்த நிலையில் தீயணைக்கும் படையினர் வந்துமிகுதியையும் அணைக்க ஆரம்பித்தனர். தீயின் கொடுமை, வெளியே தூக்கி வரப்பட்ட அன்னையின் உடலைப் பார்க்க முடியாதவாறு பயங்கரமாக்கி விட்டது.

பேச்சு மூச்சற்றிருந்த அவளைத் தாங்கிய வண்டி ஆஸ்பத்திரிக்கு விரைந்தது. அம்பியூலன்ஸ்வண்டி. எரிந்த வீடு சோதனையிடப்பட்டது. வசந்தனைக் காணவில்லை. 'வசந்தன் எங்கே... வசந்தன் எங்கே' என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டனர்.

அப்பொழுது. 'ஐயோ... அம்மா' என்று ஒலித்த அலறலைக் கேட்டு குரல் வந்த திக்கை அனைவரும் நோக்கினார். அங்கு கால்தெறிக்க ஓடிவந்தான் வசந்தன். அவன் வந்த வேகத்தில் வீட்டினுள் பாய்ந்திருப்பான். ஆனால் அடுத்தகணம்-மயக்கமடைந்து தரையிலே விழுந்தான் அவன். அவனைத் தூக்கி எதிர் வீட்டில் ஒரு கட்டிலில் படுக்க வைத்தனர். பத்து நிமிடங்களின் பின் மயக்கம் தெளிந்து எழுந்த வசந்தன் "நான் என்ரை அம்மாட்டைப் போகணும்... என்னை விடுங்கோ..." என்று விடாப்பிடியாய் நின்றான். அவனுக்காகக் கொண்டுவரப்பட்ட கோப்பியையும் அவன் குடிக்க மறுத்தான்.

அங்குவந்த வேலுப்பிள்ளை வாத்தியாரைக் கண்டதும் அவரைக் கட்டிப்பிடித்து அழ ஆரம்பித்தான் வசந்தன். அவருக்குக்கூட கண்கள் நீரை மல்கின. 'பயப்படாதை வசந்தா, அம்மாவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போவோம் நீ முதலிலே கோப்பியைக்குடி' என்று கெஞ்சினார் ஆசிரியர்.

'என்ன ஸேர் நீங்களுமா இப்படிச் சொல்றியள். எனக்குக் கோப்பி வேண்டாம். நான் முதலிலை என்ரை அம்மாவை பாக்கணும்' வசந்தன் கூறியதைக் கேட்ட அங்கிருந்தவர்களுக்கு கண்கள் கலங்கி விட்டன.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் வேலுப்பிள்ளை வாத்தியார்.

'நீங்க கூட்டிட்டுப் போகாட்டா நானே போயிடுறன்' தாய்ப் பாசம் அவனுக்குத் துணிவைக் கொடுத்தது.


'அப்படிச் சொல்லாதை வசந்தா. நானே உன்னை கூட்டிட்டுப் போறேன்' வசந்தனை அணைத்துக் கொண்டார் ஆசிரியர்.

ஆசிரியரின் கண்ணீர் வசந்தனின் கையில் விழுந்து தெறித்தது. அதைக் கண்ட வசந்தனும் தாங்கமுடியாத துயரினால் ஓ வென்று சத்தமிட்டு அழுதான்.

அடக்க முடியாத நிலையில் ஆசிரியரும் வாய் விட்டே அழுதார். எதிர்வீட்டு மாமாவும் ஆசிரியரும் வசந்தனை அழைத்துக் கொண்டு டாக்ஸியிலே ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர்.

அன்னையின் நினைவு வசந்தனின் நெஞ்சைக் கிழித்தது.

கார் செல்லும் சத்தத்தினூடேயும் அவனின் விக்கல் ஒலை சப்தமாக ஒலித்தது.




## பேனா திருடிய பிரதமர்

—மட்டுநகர் மூர்த்தி—

இந்த நூற்றாண்டில் வாழ்ந்த அதிசய மனிதர்களில் ஜவஹர்லால் நேருவும் ஒருவராவர். இவர் இந்திய நாட்டுச் சுதந்திரத்திற்காக காந்தியடிகளுடன் சேர்ந்து கொண்டு சுதந்திரத்திற்காக அயராது பாடுபட்டார். அதன் பொருட்டு பலனும் கிடைத்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற 1947 முதல் முதலாவது பிரதமராக தொடர்ந்து 16 வருடங்கள் ஆண்டு வந்தார். ஐக்கிய இந்தியாவை உருவாக்குவதற்கு பஞ்சசீலத்தை ஆதரித்தார். உலோகாயத வாதிகளையும், நாடுகளையும், சமய தத்துவத்தில் நம்பிக்கை வளர்ப்பிப்பதற்காக தானே உலோகாயதன் ஆனார். சில காலம் வாழ்ந்திருந்தால் சிறந்த சமய தத்துவ ஞானத்தை உலகிற்கு போதித்திருப்பார். அப்படிப்பட்ட உத்தமர் நேருஜி அவர்களின் வாழ்வில் நடந்த ஒரு சிறு சம்பவம் தான் இது.

நேருவின் தந்தை ஒரு தனவந்தராவர். இவர் ஒரு நாள் தனது பேனாவை எழுதிவிட்டு வழமையாக வைக்குமிடத்தில் வைத்து விட்டு வெளியே போய்விட்டார். தந்தையின் பேனாவை மகன் (நேரு) திருடிவிட்டான். தனவந்தர் வந்து பார்த்தார். தனது பேனாவை காணவில்லை. வீட்டில் உள்ளவர்களையெல்லாம் விசாரித்தார். கிடைக்கவில்லை. ஈற்றில் தன் மகன் விழித்துக் கொண்டிருந்தான், மகனே திருடியிருக்கவேண்டுமென்று ஊகித்து விட்டார் பின்னர் மகனைக் கூப்பிட்டு விசாரித்ததின்பின் அவனே திருடியதாக அறிந்தார். திருட்டுப் பழக்கம் பொல்லாத பழக்கம் எனவே மகனென்றும் பார்க்காமல் அவனைத் தண்டித்தார். சொல்லாமல் எடுத்ததினால் தனக்கு ஏற்பட்ட நிலையை அப்போதுதான் உணர்ந்தார் நேரு. இச் சம்பவம் நேரு அவர்களின் இளமைப் பருவத்தில் நடந்தது.

## தமிழறிவுப் போட்டி

### சரியான விடை

நூலின் பெயர்:— திருக்குறள்.

ஆசிரியரின் பெயர்:— திருவள்ளுவர்.

வெண்பா (1)—

"உறுபசியுமோவாப்பிணியுஞ் செறுபகையுஞ்
சேராதியல்வது நாடு."

வெண்பா (2)—

"உட்கப்படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட் காதல் கொண்டொழுகுவார்."

சரியான விடை அனுப்பிய 600 மருமக்களில் ரூபா. 5/- பெறும் அதிர்ஷ்டசாலி.

செல்வன். பிலேந்திரம் குசைராசா,
போயிட்டி, இளவாலை.




த. புஸ்பராசா,
கைதடி.

கே: வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ள தற்சமயத்தில் வேலைகொடுப்பதற்கு தேசிய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

ப: தனியார் துறையை நம்பாமல் பொதுத்துறையிலேயே வேலைவாய்ப்புகளை சிருஷ்டித்தல்.

கே: மாவட்டசபைகள் அமைப்பதற்கு பொ. கட்சியினர் எதிர்ப்புத் தெரிவிப்பதன் மர்மம் என்ன?

ப: எதற்கும் முதலில் எதிர்ப்பு தெரிவிப்பது அவர்களின் அரசியலாக இருந்து வருவதே காரணம்.

கே: தேசிய அரசாங்கத்திலே பல துறைகளிலும் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. இதனால் அரசாங்கம் நஷ்டமடையாதா?

ப: நஷ்டமே ஆயினும் வேலை நிறுத்தங்களுக்கு விட்டுக்கொடுத்தால் மென்மேலும் வேலைநிறுத்தங்கள் ஏற்பட ஊக்கமளிப்பதாகும் என்பது ஆட்சியாளர் கருத்தாம்!

ஃ

'மகா'
கொழும்பு

கே: பொ. வின் சில கட்டுப்பாட்டுக்கு பணிந்து பிரதமர் ஏன் யாழ் சென்றார்? தமது பயணத்தை ரத்து செய்திருக்கலாமே!

ப: பிரதமருக்குக் கட்டுப்பாடு விதிக்கும் நிலையில் திரு. பொ. இல்லை. அவர் அழைத்தவர்; அழைத்தவரின் விருந்தினராகவே அழைக்கப்படுகிறவர் இருக்க முடியும். அழைத்தவர் செய்யும் வரவேற்பு ஏற்பாடுகளை மீறிச் சென்றால் பிரதமரை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் அப்படிச் செய்வது நியாயமாகாது என்று பிரதமர் எண்ணினார். அது பிரதமரின் பெருந்தன்மையையே காட்டுகிறது. அவரது பெருந்தன்மைக்கு மதிப்பளித்து எல்லா வரவேற்புகளுக்கும் இடமளித்தால் அஃது அழைத்தவரின் பெருந்தன்மையைக் காட்டியிருக்கும். ஆனால் அதுதான் பூஜ்யம் அழைத்தவரிடம்.

கே: சேர் பொன். இராமநாதவின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று கூறும் திரு. பொன்னம்பலம் அதை இப்பொழுதுதானா யோசித்தார்?

ப: தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தை எதிர்க்க அந்த பெரியாரின் நிழலில் ஒதுங்கப் பார்க்கிறார்.

ஃ

எஸ். வி. பொன்கலன்,
கரவெட்டி.

கே: கூட்டரசாங்கம் ஆட்சியில் இருக்கும்பொழுது தோட்டத் தொழிலாளருக்கு ரூபா 17-50 பஞ்சப்படி கோராத என். எம். பெரேராவும், பீட்டர்கெனமனும் இப்பொழுது ஐ. தே. கட்சி ஆட்சி பீடத்தில் இருக்கும்பொழுது வலுக்கட்டாயமாக அதைக்கோருவதேன்?

ப: ஐ. தே. கட்சி தொழிலாளர்பால் அனுதாபம் கொண்டிருப்பதால் அந்தக் கோரிக்கையைச் சுலபமாகப் பெற்றுத்தந்து தங்களின் போராட்டத்தின் மூலமே அது கிடைத்துள்ளதாகப் பெருமை அடித்துக்கொள்ளலாம் என்ற எண்ணமிருக்கலாம். இல்லையேல் தொழில் மந்திரி கூறுவதைப்போல அரசாங்கத்துக்குச் சங்கடம் ஏற்படுத்துவதற்காக அக் கோரிக்கையை விடுத்திருக்கலாம்.

ஃ

க. பரமநாதன்,
வெள்ளவத்தை.

கே: பொன்னர் கட்சியின் ஆங்கிலப் பெயரின்படி (T. C.) தமிழ் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிவிட்டதாமே. உண்மையா?

ப: மாஜி இடதுசாரிகள் அதில் சரணடைவதால் அப்படி உருமாறுவது சாத்தியமே.

கே: குடையும் கையுமாகத் திரிந்த வாத்திமார் இப்போ முருங்கைக்காயும் கையுமாகத் திரிவதேனோ?

ப: குடை அளவுக்கு முருங்கைக்காய் விலை உயர்ந்துவிட்டதால், முருங்கைக்காயை அவர்கள் பயன்படுத்தலாம். அதனால் வேறு பிரயோசனமும் உண்டல்லவா?

ஃ

......கமலம்,
பதுளை.

கே: ஆசிரியர்கள் பாடசாலை விடுமுறையின்போதுதான் கலியாணம் செய்யவேண்டுமென்று கல்வி இலாகா கூறுகிறதாமே! ஆச்சரியமாயிருக்கிறதே!

ப: இதிலென்ன ஆச்சரியத்தைக் கண்டுவிட்டீர்? ஆசிரியைகள் தங்களின் பேறு காலத்தையும் விடுமுறையிற்றான் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கல்வி இலாகா உத்தரவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையே!

ஃ

ஏ. சண்முகானந்தராசா,
பதுளை

கே: பதுளை மாநகரசபையால் தமிழ் மக்களுக்கு எழுதப்படும் கடிதங்கள் சிங்களத்தில் வருகின்றனவே இதற்கு என்ன செய்யலாம்?

ப: கடிதங்களை திருப்பி அனுப்பி தமிழில் எழுதும்படி வற்புறுத்துங்கள். கூட்டங்கள் கூட்டி தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பி வையுங்கள்.

ஃ

எஸ். எஸ். மிக்கேல்,
முல்லைத்திவு

கே: வெங்காயச் சருகுச் சேலை கட்டி வெளியில் நடமாடும் பெண்களைக் கண்டவுடன் மின்னொளி போன்ற உணர்ச்சி உண்டாவதின் காரணம் என்ன!

ப: காரணம், வெங்காயச் சருகுச் சேலையால் அங்கங்களை மறைக்க முடியாமலிருப்பதுதான்;

ஃ

நா. வடிவேலு,
பரந்தன்

கே: யாழ் நகரில் 21-வது தமிழ்க் காங்கிரசின் மாநாடு நடைபெற்றது. மற்ற இருபது மாநாடுகளும் எங்கே எப்பொழுது நடந்தது?

ப: கற்பனையில்! கற்பனை மாநாடுகளுக்கு திகதியும் இடமும் தேவையில்லை.

கே: தமிழரசுக் கட்சி 29-வது சரத்தை நீக்கக் கூடாது. என்று பல போராட்டம் நடத்தியிருக்கிறது. வெற்றியும் கண்டிருக்கிறது. பொ. கட்சியினர். இப்போது அச் சரத்தை நீக்க 'அனுமதியோம்' என்று கூறுவதின் மர்மம் என்ன?

ப: அது இலகுவாக இருப்பதுதான் மர்மம். பிறரின் விளக்கில் வெளிச்சம் பார்ப்பதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது?

கே: இ. போ. ச. பஸ்களில் புகைக்கக்கூடாது என்று விளம்பரப்படுத்தியும், புகைப்பவர்களை தண்டியாததேனோ?

ப: புகைப்பவர்களைத் தண்டிப்பதாக விளம்பரப்படுத்தாததால்.

ஃ

செல்வி ரஜனி சச்சிதானந்தம்,
கொழும்பு-12.

கே: எதிர்க்கட்சியினரின் ஏகமொழிக் கொள்கை காரணமாக வட்ட மேசை மகாநாடு கூட்டுவது சாத்தியமில்லை என்று கூறும் திரு. பொன்னம்பலம் அதே நேரத்தில் சர்வ கட்சி மகாநாட்டின் மூலமே மொழிப் பிரச்னைக்கு முடிவு கட்ட வேண்டும் என்கிறாரே இவர் பேச்சு முன்னுக்குப் பின் முரண்படுகிறதே!

ப: முரண்படாவிட்டால் அது அவர் பேச்சாக இருக்க முடியாதே!

கே: திரு. பொ. யாழ்ப்பாணத்தில் நிறுவ கோரும் இந்துப் பல்கலைக் கழகம் அகில இலங்கையிலும் வாழும் சகல தமிழ் பேசும் மக்களுக்கும் பொதுவானதா?

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1181
> கொழும்பு-12.
>
> ● இந்த அடையாளத்தை யுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிறார்.

ப: அப்படி அவர் கருதுவதாகத் தெரியவில்லை.

ஃ

கமலக் கண்ணன்,
கொற்றுவத்தை

● கே: 'தொண்டமான்' தமிழ்க் காங்கிரஸ் மகாநாட்டில் கலந்து கொண்டதால் திரு. பொ. வுக்கு இனிமேல் மலையக மக்கள் மாநாடுகளில் கலந்து கொள்ளும் துணிவு ஏற்படுமா?

ப: கடந்த தோட்டப் பொது வேலை நிறுத்தத்துக்குப் பின்னர் திரு. தொ. வே மலையகத்தில் தலை காட்ட முடியாத நிலை உருவாகியிருக்கும் போது, திரு. பொ. எப்படித் தலை காட்ட முடியும்?

ஃ

ப. தனபாலசிங்கம்,
வெல்லம்பிட்டி

கே: தந்தை செல்வா சமஷ்டி என்றால் திரு. பொன்னம்பலம் தனியாட்சி. சத்தியாக்கிரகம் என்றால் வட்ட மேசை. கறுப்புக் கொடியென்றால் வரவேற்பு, கடையடைப்பு என்றால் கடை திறப்பு. தமிழ் பல்கலைக் கழகம் என்றால், இந்து பல்கலைக் கழகம்; இவை எதைக் காட்டுகின்றன.

ப: ஏட்டிக்குப் போட்டியே தவிர தனக்கென ஒரு கொள்கை கிடையாது என்பதைக் காட்டுகிறது.

ஃ

எஸ். வி. கே. குழந்தைவேலு,
கண்டாவளை

கே: முதலாளியால் தொழிலாளி உயருகிறானா? அல்லது தொழிலாளியால் முதலாளி உயருகிறானா?

ப: நெய்க்குத் தொன்னை ஆதாரம் தொன்னைக்கு......

கே: பெண்கள் தலையில் மலர் சூடுவது ஏன்?

ப: போலி (சவுரி) முடியை மறைப்பதற்கு.

ஃ

வ. வர்ணகுலசிங்கம்,
அல்வாய்

கே: சிங்கள ஆசிரியர்களைத் தமிழ் பகுதிகளுக்கு அனுப்பும் விஷயத்தைத் தமிழரசாருடன் ஆலோசித்துத் தான் செய்வேன் என்று பிரதமர் பார்லிமென்டில் கூறியதைக்கேட்ட பொ. கட்சியினர் என்ன நினைத்திருப்பார்கள்?

ப: தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழரசார் என்பதை அரசாங்கம் அங்கீகரித்துவிட்டதே என்று ஏங்கியிருப்பார்கள்

ஃ

எஸ். எஸ். நாதன்,
ஏறாவூர்-4

கே: தென்னாட்டுத் தமிழ் படங்கள் இலங்கையில் திரையிடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றவர்கள். ஆபாசமான ஆங்கிலப் படங்களை அனுமதிப்பது சரியா?


ப: ஆபாசமென்றாலும் ஆங்கிலமல்லவா? அந்த அளவுக்கு ஆங்கில மோகம் நம் நாட்டில் அநேகருக்கு.

ஃ

'காப்பாளர்',
கிளிநொச்சி

கே: தமிழ்க் காங்கிரஸ் மாநாடு என்ன காரணத்துக்காக, யாழ்நகரில் மட்டும் நடக்கின்றது; வேறு ஒரு நகரத்தில் நடத்தினாலென்ன?

ப: அது தலைவரின் தொகுதி. அடுத்துவரும் பொதுத் தேர்தலில் அத் தொகுதி பறிபோய்விடுமோ என்ற பயம் ஏற்பட்டுள்ளது; அதைத் தடுக்கவே இப்பொழுதிருந்தே இந்த ஏற்பாடுகள்!




பிளக்கும் தலைவலி, பல்வலி, தடிமல், காய்ச்சல், உடல்வலி, மாதவிடாய் முதலியவற்றால் அவஸ்தைப்படும்போது டிஸ்பிரினை பாவியுங்கள். டிஸ்பிரின் வேதனையைத் தணித்து உடன் நிவாரணமளிக்கும்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபார்சு செய்கிறார்கள்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். வில்லையை விழுங்கி விடலாம் அல்லது தண்ணீரில் கரைத்துக் குடிக்கலாம்.



றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

JWT R.C.104

# சமஷ்டி ஆட்சி நிறுவும் அத்திவாரமே

## தொழில் இலாகாவின் ஆதிக்கம் தமிழரசு கையில்

"கடந்த ஓராண்டில் தமிழரசுக்கட்சி நடத்திய போராட்டத்தின் விளைவாக தொழில் திணைக்களத்தின் முழு ஆதிக்கமும் அவர்களின் கைக்குச் சென்று விட்டது.

'எல்லா இலாகாக்களிலும் முப்படைகளிலும் உயர்பதவிகளைத் தமிழர்களிடமும் கத்தோலிக்கர்களிடமும் கையளிக்கும் அந்தரங்க இயக்கத்தின் விளைவாகவே தொழில் திணைக்களத்தின் உயர் பதவிகள் தமிழர்களின் கைக்குச் சென்று விட்டன.

'எம். மதியாபரணம் (உப தொழில் கமிஷனர்), எஸ். எப். பிலிப்பையா (உதவித் தொழில் கமிஷனர்), பி. நவரத்தினம் (தற்காலிக உபதொழில்கமிஷனர்), டி. பாலசிங்கம் (வேலை தேடித்தரும் பகுதியின் பொறுப்பை ஏற்றுள்ள உதவித் தொழில் கமிஷனர்) பி. திருநாவுக்கரசு (தற்காலிக உபதொழிற் கமிசனர்), வி. சர்வநாயகம் (தற்காலிக உபதொழிற் கமிஷனர்) சி. எஸ். குணரத்தினம் (சேமநல நிதியின் பொறுப்பை ஏற்றுள்ள உதவிக் கமிஷனர்) இந்த நியமனங்களுக்குப்பின்னர் திணைக்களத்தின் எல்லா நடவடிக்கைகளும் ஆங்கிலத்திலும் தமிழிலும் செய்யப்படுவதுடன், தமிழ் கமிஷனர்களின் வசதிக்காக அங்கு அனைவரும் ஆங்கிலத்தில் கடமையாற்ற வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

'முன்பு இந்தப் பதவிகளை வகித்த பௌத்த அதிகாரிகள் அகற்றப்பட்டு தமிழர்களுக்கு அப்பதவி வழங்கப்பட்டிருக்கிறது''

— ஜனதின (11-8-66)

### இராணுவத்தின் அதிகாரம் குறைந்தது

''வடக்குக்கே கள்ளக் குடியேற்ற வேட்டையை வெற்றிகரமாக நடத்தி வந்த இராணுவத்தினரின் அதிகாரங்கள் அண்மையில் குறைக்கப்பட்டு விட்டதால், கள்ளக் குடியேற்றக்காரர்களைக் கைது செய்யும் வேலை குற்றுயிராக்கப்பட்டுள்ளது.

'வடக்கே அரசியல் வாதிகளும் இதர செல்வாக்குள்ளவர்களும் இந்த இராணுவத்தினருக்கெதிராக நடத்தப்பட்ட இயக்கத்தின் விளைவாக இராணுவத்தின் அதிகாரம் குறைக்கப்பட்டது. தற்போதைய கட்டளையின்படி இராணுவத்தினர் ஒரு கள்ளக் குடியேற்றக்காரரைக் கைது செய்தவுடன் போலிஸாரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். இதனால் அவர்கள் விடுதலை பெற வழி பிறக்கிறது.

## மாவட்டசபை

## 'மொழிப் போரில் தமிழரசு வெற்றி'

### சிங்களத் தினசரியின் செய்தி

"டட்லி — செல்வநாயகம் ஒப்பந்தத்தின் ஒரு சரத்தின்படி மாவட்டசபை அமைக்கப்படுவதற்கான எல்லா நடவடிக்கைகளும் தமிழரசுக் கட்சியின் பொறுப்பில் விடப்பட்டிருப்பதால், உள்ளூராட்சி அமைச்சின் அதிகாரிகள் மட்டுமின்றி அரசாங்கக் கட்சியில் சிங்களப் பிரதிநிதிகளும் கலவரமடைந்துள்ளனர்'' என்று ஜனதின (11-8-66) ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

''அமைச்சர் திருச்செல்வமும், தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகமும் மாவட்டசபை மசோதா பற்றி விவாதித்து அதன் எல்லாசரத்துகளுக்கும் தமிழரசுக்கட்சியின் அங்கீகாரத்தை அளித்துள்ளனர்.

'மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்பு அரசாங்கக் கட்சியில் சமர்ப்பிக்க வேண்டுமென்று அரசாங்ககட்சி சிங்கள எம். பிகள் பிரதமரைக் கேட்டுக் கொண்டிருப்பதுடன், தற்போதுள்ள நிலைமையில் தாங்கள் சிங்களமக்களிடம் போக முடியாதிருப்பதால், திரு. ஆர். பிரேமதாசாவை உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளனர்.

'மொழிப் போராட்டத்தில் வெற்றிபெற்றுள்ள தமிழரசுக் கட்சி மாவட்ட சபையின் மூலம் தங்களின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் நிலை தோன்றியிருப்பதால், அரசாங்கக்கட்சி எம். பிகளின் கிளர்ச்சியை தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கலாமென்று பிரதமர் யோசித்துக் கொண்டிருக்கிறார்.

'புதிதாக நிறைவேற்றப் படவிருக்கும் மாவட்டசபை மசோதாவின்படிவட,கிழக்கு மாகாணங்களின் எல்லா நிர்வாகப் பொறுப்பும் மத்திய அரசாங்கத்திடமிருந்து அகற்றி அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களிடம் அளிக்கப்படும்.

'இதன்படி வட, கிழக்கு மாகாணங்களில் தமிழரசு நிறுவும் அத்திவாரம் அமைக்கப்பட்டு விடும் என்று உள்ளூராட்சி அமைச்சின் உயர்தர அதிகாரிகள் கூறுகின்றனர்'' இவ்வாறு 'ஜனதின' செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

### தமிழர்களின் சிங்களக் கோஷங்கள்

''திக்விஜயம் செய்து திரும்பிய மன்னரைப் போல பிரதமர் டட்லி சேனநாயக்கா யாழ்ப்பாணத்தில் வரவேற்கப்பட்டார். பிரதமரை அழைத்துச் சென்ற ஊர்வலத்திலே தமிழர்கள் சிங்களத்தில் கோஷங்கள் எழுப்பியது பிரதமரை திருப்திப்படுத்தவோ, உள்நோக்கமொன்றினை அடையவோ அன்று. அவ்வேளையில் அவர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட உத்வேகமும், சரித்திர காலந்தொட்டு சிங்கள மக்களுடன் அவர்கள் கொண்டுள்ள நட்புறவினின்று உதித்த உணர்ச்சியுமே அவர்கள் சிங்களத்தில் கோஷங்களை எழுப்பியதற்கு காரணமாகும். சாதாரணத் தமிழ் மக்களிடம் இயற்கையாகவே காணப்படும் இந்தக் குணநிசயத்தை அவர்களின் அரசியல் வாதிகள் சிலகாலமாக அடக்கிவைத்திருந்தனர்.''

- லங்காதீப்ப தலையங்கம் (11-8-66)

### சிங்கள இதழ்களில் . . .

கள்ளக் குடியேற்ற வாசிகள் ஒரு வீட்டில் மறைந்திருப்பதாகத் தகவல் கிடைத்தது இராணுவ அதிகாரிகள் அந்த வீட்டுக்குச் சென்று விசாரணை செய்தால், அவ்வீட்டுப் பெண்ணை பலவந்தம் செய்ய முயன்றதாக பொலிசுக்கு புகார் செய்வது புதிய தந்திரமாகியுள்ளது'

— ரிவிரெஷ (8-8-66)

### இரத்மலானையில் தமிழரசாம்

''இரத்மலான றெயில்வே தொழிற்சாலை இப்பொழுது முழுவதும் ஒரு தமிழரசாக மாறியுள்ளது.

உயர்தர அதிகாரிகளில் அநேகர் தமிழர்கள். போர்மன்கள் மத்தியிலும் தீவிர தமிழரசுவாதிகள் 15 பேர் இருக்கின்றனர். இதனால் அப்பாவிகளான தொழிலாளர்களுக்கும் முற்போக்குக் கொள்கையுள்ள சிங்களத் தொழிலாளர்களுக்கும் பலவிதமான கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன.''

— ஜனதின (22-7-66)

## இலங்கையில் முஸ்லிம் லீக் தலைவர்


இந்திய துணைக்கண்ட முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் அல்காஜ் எப். முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்களும், சென்னை மாநகர முஸ்லிம்லீக் தலைவர் ஜனாப் அப்துஸ் சமது எம். பி. ஆகிய இருவரும் இவ்வார முழுவதும் இலங்கையில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்வார்கள் என்று தெரிகிறது. மலேசியா சென்றிருக்கும் இவர்கள் தாயகம் திரும்பும் வழியில் இலங்கையிலும் ஒரு வாரத்தைக் கழிக்க விரும்புகிறார்கள் என்று இலங்கை முஸ்லிம் லீக் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் தங்கியிருக்கும் நாளில் திருக்குர் ஆன் மாநாட்டில் கலந்து கொள்வதுடன் ஆங்காங்கே அன்புநெறிக் கூட்டங்களிலும் கலந்துகொள்வார்கள்.


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்
14,டாம் வீதி, கொழும்பு-12.







பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
நெ. 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி: 3597-6522
தந்தி: தாமரை

## உள்ளூராட்சி அமைச்சரின் நம்பிக்கை

# சிங்கள மக்களின் சம்மதத்துடன் சமஷ்டி அமைப்பை நிறுவியே தீருவோம்

## அரியணை உரை விவாதத்தில் திருச்செல்வம் முழக்கம்

(ஸ்)

**"எங்கள் லட்சியம் இந்த நாட்டில் ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பை நிறுவுவதே. இந்த நோக்கத்திலிருந்து நாம் என்றும் விலகிச் செல்லப் போவதில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட இன மக்கள் வாழும் நாட்டிற்கு சமஷ்டி அமைப்பே உகந்தது. இந்த உண்மையைச் சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூறி அவர்களின் சம்மதத்துடனும் நல்லெண்ணத்துடனும் இந்த நாட்டில் சமஷ்டி அமைப்பு முறையை நிறுவியே தீருவோம். இது சாத்தியமானது என்பதை நாம் திடமாக நம்புகிறோம்" என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு மு. திருச்செல்வம் அவர்கள் அரியணை உரை மீது மூதவையில் பேசுகையில் குறிப்பிட்டார்.**

எதிர்க் கட்சியினரின் குதர்க்க வாதங்களுக்கு சுடச் சுட பதில் கொடுத்த அவர் பல பிரச்சினைகளையும் எடுத்து விளக்கினார். அவரின் பேச்சின் சுருக்கம் வருமாறு:

"இலங்கையின் சரித்திரத்தில் நாம் எல்லோரும் முன்னெப்பொழுதுமில்லாதவாறு ஐக்கியப்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில்,— இலங்கையின் சரித்திரத்தில் இலங்கை மக்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ள, இன்றைய சந்தர்ப்பத்தில்' இந்த நாட்டில் பல் வேறு சமுகங்களிடையேயும் நிரந்தர சமாதானமும், ஒற்றுமையும், அமைதியும் ஏற்பட இன்றைய அரசாங்கம்தான் அடிக்கல் நாட்டியுள்ளதென்று நாம் நம்புகின்றோம்.

'செனட்டர் கரனகொட அவர்களது தகுதியான கருத்துக்களை ஆராய முன்பு, துரதிர்ஷ்டவசமாக தற்பொழுது இச் சபையில் காணப்படாத எனது அருமை நண்பர் செனட்டர் சிறீவர்த்தன, செனட்டர் ஹமீம் ஆகியோரது பேச்சுக்கள் பற்றி குறிப்பிட தயவு செய்து அனுமதியுங்கள்! செனட்டர் ஹமீம் பற்றி நான் இதைத்தான் சொல்ல விரும்புகிறேன். தேசிய அரசாங்கத்தை ஆதரிக்க விரும்பும் முஸ்லிம் சமுகத்தில் அவர் ஒருவர் தான் தனியே விலகி நிற்கிறார். மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட எல்லா முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் மூதூர் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினரைத் தவிர— தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கின்றனர். இந்தச் சபையில் தேசிய அரசை ஆதரிக்காத ஒரேயொரு முஸ்லிம் செனட்டர் ஹமீம் அவர்களே, அத்துடன் இந்நாட்டில் தமிழை உபயோகிக்க வழி செய்யும் விதிகளுக்கு எதிராக வாக்களித்த இரு சபைகளையும் சேர்ந்த ஒரேயொரு முஸ்லிம் உறுப்பினரும் அவரே என்பதை எதிர்காலச் சரித்திரம் எடுத்துக் கூறும்,!

### முஸ்லிம்களும் தேசிய அரசும்

"அவர் ஒரு நிரந்தரமற்றவராக காணப்படுகிறார். அவரது கருத்துக்களுக்கு ஒருவர் அதிகமுக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை.

எந்தக்கட்சியும் எதிர்க்கட்சியில இருக்க நேர்ந்தால் எப்படியிருக்குமோ, அது போல தமிழரசுக்கட்சி உறுப்பினர்களாகிய நாங்களும் எதிர் வரிசையில் இருந்த போது முன்னேடிகளாக இருந்தோம்.

"தேசிய அரசு முஸ்லிம்களின் எதிரி என்று கூறுகிறார். நான் அவருக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்— இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதிகளாக, நல்ல, திறமை வாய்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் தேசிய அரசில் நிறைந்த நம்பிக்கை கொண்டுள்ளனர்.

### மூதூர்த் தேர்தல்

1960ம் ஆண்டுக்கு முன் பின்னாக, மூதூர் தொகுதியின் 1வது பிரதிநிதி திடீரென காலஞ் சென்ற காரணத்தால் ஏற்பட்டிருந்த காலியான இடத்துக்கு, தகுயான ஒரு வேட்பாளரை நியமனம் செய்ய வேண்டிய நிலைமை தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டது. அந்தத் தொகுதியிலுள்ள பெரும்பான்மையான வாக்காளர்கள் தமிழ் சமூகத்தினர். இந் நாட்டின் ஒரு குடிமகனும், தனித்தன்மை கொண்ட ஒரு தமிழ்ப் பிரமுகரும்' இலங்கை அரசின் முன்னைய அமைச்சருமான ஒருவர்— அவரது அரசியல் கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்வதில்லை— கௌரவமும், பெருமையும், கீர்த்தியும் உடைய பேராசிரியர் சுந்தரலிங்கத்தைத் தான் குறிப்பிடுகிறேன்— அவர் அத் தொகுதியின் வேட்பாளராகப் போட்டியிட்டார், அந்த நேரத்தில் மூதூர் தமிழ் வாக்காளர்களை கட்சியையும் கொள்கையையும் முதலாவதாகவும்' சமுகத்தை அதன் பின்பும் வைத்து எண்ணிப் பார்த்து முகம்மதலிக்கே வாக்குகளை அளிக்கும் படி வேண்டிக் கொண்டோம். இது தான், அவர் பாராளுமன்றத்துக்கு மீண்டும் வந்ததற்கு காரணம். சென்ற தேர்தலின் போது, தமிழரசுக் கட்சி வேட்பாளர் தெரிவுக்குழுவில் நானும் ஒரு உறுப்பினனாக இருந்தேன். முஸ்லிம் வேட்பாளருக்கு பதிலாக ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டுமென பலர் எங்களுக்கு வலியுறுத்த முயற்சியெடுத்தனர் நாம் சொன்னோம். 'இல்லை அது முகம்மதலி தான் .மூதூரில் உள்ள தமிழ் மக்கள் ஜனப் முகம்மதலிக்கே வாக்களிக்கும் படி எங்களால் வழி நடத்தப் பட்டனர்

மூதூர் தமிழர்கள் எல்லோரும் ஒரு சேர முகம்மதலிக்கே வாக்களித்தார்கள். அதன் பயனாக தமிழ் வேட்பாளர் கட்டுப் பணத்தை இழந்தார். இதுமாதிரியான கண்டனங்கள், இச்சபையில், இந்த விவாதத்தில் நாம் காப்பாற்றிக் கொள்ள நினைக்கும உயர்ந்த பண்பைப் பிரதிபலிப்பனவாக இல்லை.

செனட்டர் ஹமீம்:- 'திரு. பொன்னம்பலத்தை நீர் ஒரு துரோகி யென்று கூறினீர்.

### ஜி. ஜி. யுடன் உடன்பாடு

திருச்செல்வம் :- எனக்கும் திரு. பொனம்பலத்துக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், தேசிய அரசைப் பொறுத்தவரை அதை ஆதரிப்பதில் ஒற்றுமையாக இருக்கிறோம். செனட்டர் ஹமீம் போன்ற பிரிவினைச் சக்திகளுக்கு எதிராக நாம் ஒன்று பட்டிருக்கிறோம்.

'கடைசி விவாதத்தின் போது, செனட்டர் சிறீவர்தன சமர்ப்பித்திருந்த அறிக்கைகளுக்கு தகுந்த ஆதாரம் காட்டும் படி அவருக்கு நான் சவால் விட்டிருந்தேன். கடைசி நிகழ்ச்சியின போது அவர் பிழை விட்டிருந்தாரானல், ஒருவர் அவரை மன்னிக்க முடியாது. இச்சபையில் நாங்கள் பேசும் பொழுது தேவையான ஆதாரங்களையும் புள்ளி விபரங்களையும், தங்களுக்கு முன்னால் சமர்ப்பித்தல் அவசியமானது 1931ம் ஆண்டு நடைபெற்ற வாலிபர் காங்கிரஸின் பகிஷ்கரிப்பு சம்பந்தமாக இந்தச் சபையில் குறிப்பிட்ட செனட்டா சிறிவர்த்தன அவர்கள், அது சம்பந்தப்பட்ட விபரங்கள், முழுவதையும் இச் சபையில் சமர்பிக்கத் தவறிவிட்டார் என்பதை வருத்தத்துடன் தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

### வரலாற்று மீட்பு

'சாதி, இனம், பற்றிய விடயங்களையிட்டு நான் இங்கு பேச விரும்பவில்லையெனினும், அது தவிர்க்க முடியாததாகியிருக்கிறது. நான் அரியணை உரையின் ஏனைய விடயங்கள் பற்றி பேச முன்பு, செனட்டர் கரனகொடவின் பேச்சில் குறிப்பிட்ட ஒரு விஷயத்தை இப்பொழுது ஆராய்கிறேன்.

'செனட்டர் கரனகொட, தமது திறமைமிக்க பேச்சில் கடந்த காலச் சம்பவங்கள் பற்றி பல குறிப்புக்களை சொன்னார். குருநாகலையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசிய அரசாங்கம் எல்லாளனுக்கு ஒரு இடம் அளித்தது பற்றியும் குறிப்பிட்டார்.

'நான் அவருக்கும், இந்தச் சபைக்கும், இந்நாட்டு மக்களுக்கும் நினைவூட்டுகிறேன். எல்லாளன், நீதியுடன், எல்லா மக்களையும் சமமாகப் பாவித்து 40 வருடங்களுக்கு மேல் இலங்கையை ஆட்சி செய்தான். அரசர்களுக்குள் அவன் ஒரு உதாரண புருஷனாக கணிக்கப்பட்டான் அது மட்டுமன்றி, துட்டகைமுனு வினதும் எல்லாளனதும் பெரும் படைகள் அனுராதபுரத்தில் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் எழுபது வயது நிரம்பிய எல்லாள மன்னன் வீர சம்பிரதாயத்தின் படி துட்டகைமுனுவுடன் நேரடியாகப் போரிட்டான். அப்பொழுது எல்லாளன் தோற்கடிக்கப்பட்டு இறந்தான். அப்பொழுது வெற்றிபெற்றவன் இறந்தவரின் உடலை என்ன செய்தான்? இதற்கான பதிலை நான் மாவம்சத்திலிருந்து படித்துக் காண்பிக்க விரும்புகிறேன். மாவம்சம் 175 ம் பக்கத்திலிருந்து காண்பிக்கிறேன்.

'அவன் போரில் வெற்றி பெற்று இலங்கையை ஒன்று படுத்தியதும் தனது வீரர்களுடன் தலை நகருள் நுழைந்தான். நகரில் முரசறைந்து மக்களைக் கூட்டிய பின்னர் இறந்த மன்னரின் மரணச் சடங்குகளை நடத்த முற்பட்டான். எல்லாளனின் உடல் சரிந்த இடத்தில் அவ்வுடலை எரித்துவிட்டு அவ்விடத்தில் ஒரு நினைவுச்சிலையை எழுப்பி அதனை வணங்கும் வண்ணம் கட்டளையிட்டான். இன்று வரை இலங்கையின் இளவரசர்கள் அவ்விடத்தினை அண்மியதும் தங்கள் பரிவார ஓசைகளை நிறுத்தி அவ்வீரனுக்கு அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டனர்."

### இருவருக்கும் அஞ்சலி

'இது வரலாற்றின் தீர்ப்பு.

'ஒரு தமிழன் என்ற முறையில் எழுபது வயது நிரம்பிய எல்லாளன் அன்றைய வீர சம்பிரதாயத்தை ஏற்று நேரடிப் போருக்கு சம்மதம் தெரிவித்ததையிட்டுப் பெருமைப் படுகிறேன்! அந்த வீரனின் சடலம் அடக்கம் செய்யப் பட்ட இடத்தை அஞ்சலி செலுத்தப்பட வேண்டிய கௌரவமான புனித ஸ்தலமாக்கிய மன்னனுக்கு அவன் நினைவாக நான் இவ்விடத்தில் அஞ்சலி செலுத்திக் கொள்ள விரும்புகிறேன். 2300 வருட காலத்தின் பின்னரும் நாட்டில் இன்னும் ஆங்காங்கே நிலவும் வகுப்புவாத உணர்வுக் கிடையில் தேசிய அரசாங்கம் அப்பெரிய எல்லாள மன்னனுக்கு அஞ்சலி செலுத்துகிறது. அதற்காகவும் இந்நாட்டு மக்களுக்கு நான் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'இந்த நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக நாம் அனைவரும் சேர்ந்து சுதந்திர நாளைக் கொண்டாடுகையில் மக்கள் எல்லான மன்னலுக்கு மரியாதை செலுத்துவதை தவறு என்று எதிர்க்கட்சி உறுப்பினர் கரனகொட கூறியது தவறு, நீதியானது அல்ல என்று இச்சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

'திரு. குசாவும், திரு. சிறீவர்த்தனவும் நான் தமிழர்களுக்கு பிறப்பு வழி வாழ்விடம் உண்டு என்று கூறியதை எங்கே இருக்கிறது? எப்படி வந்தது? எப்பொழுது வந்தது? என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். டச்சுக்காரர்கள் திருமலையில் வந்திறங்கிய நேரத்தில் அவர்களை வரவேற்றது கண்டியரசனே. இது வரலாற்று உண்மை. ஆனல் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் யார்? திருமலையும் இந் நாட்டின் வேறு பல பகுதிகளும் சிங்கள மன்னர்களாலும், தமிழ் மன்னர்களாலும் மாறி மாறி ஆளப்பட்டிருக்கிறது.

எதிர் பாராத முறையில் நம்மை போத்துக்கீசர், டச்சுக்காரர், பிரிட்டிஷ்காரர் ஆண்டிருக்கிறார்கள். இப்பொழுது கேள்வி என்னவென்றல் எங்கே இந்தத் தமிழர்களின் மரபு வழிப் பிறப்பிடம் என்பது தான். இதற்கும் நான் ஒரு வரலாற்று நூலையே துணைக்கு

(11-ம் பக்கம் பார்க்க)

மாணவ ஆசிரியர்
தெரிவுப் பரீட்சை
பயிற்சிக் கோவைகள்
ரூபா
தமிழ் பாஷை 5-00
பொது அறிவு 5-00
பொதுவிவேகம் 5-00
சர்வகலாசாலை
போதன கழகம்,
540, மருதானை வீதி,
த. பெ. 1079.
கொழும்பு-10.

T. K. அமிர்தா
ஜீரண சக்தி லேகியம்
மனிதருக்கு நோய்கள் அண்டாமலிருக்க தினசரி மலப் பிரவர்த்தி யாதொரு தடையின்றி வெளியாகி குடல் சுத்தம் ஏற்படவேண்டும். அது இல்லாதிருக்குமானல், அதுவே சகல நோய்களுக்கும் காரணமாகி விடுகிறது. மலம் சரியாக தினசரி வெளியாகாதிருந்தால் உண்டாகும் வாதம், மூலநோய்கள், அஜீரணம், வயிற்றுப் பொருமல், வலி, உஷ்ண ரோகங்கள், தாது நஷ்டம், சொறி சிரங்கு, முதலிய நோய்களுக்கு பலன் கொடுக்கும் சிறந்த மருந்து. பத்தியமின்றி உபயோகிக்கலாம்.
குறிப்பு: மூல இரத்தப்போக்கு, குடல்வாயு, இடுப்புவலி: இவைகளுக்கு ஒருதின உபயோகத்திலேயே குணம்செய்யும்.
அமிர்தா
ஜீரண சக்தி லேகியம்
சிறிய புட்டி ஒன்றுக்கு ரூபா 3-00
பெரிய புட்டி ஒன்றுக்கு ரூபா 5-50
தபால் சிலவு வேறு.
விபரங்களுக்கு:
செல்லராஜா அன்கோ
பாக்கியலெட்சுமி வைத்தியசாலை
170, செட்டியார் தெரு. கொழும்பு-11.

# சுதந்திரன்
SUTANTIRAN

1966 ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 8411 த. பெ. 1188


## அலட்சியம் செய்யுங்கள்!

தமிழ்க் காங்கிரசும் ஒரு மாநாட்டை நடத்தியுள்ளது. பிரதம மந்திரி யாழ்ப்பாணம் விஜயம் செய்திருக்காவிட்டால் இக்காங்கிரசுக்கு மாநாடு ஒன்று தேவைப்பட்டிருக்காது — மாநாடும் நடைபெற்றிராது. எனவே பிரதமரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து, அதன்மூலம் தமது அரசியல் நிலையை பலப்படுத்த வேண்டுமானல், பிரதமரை அழைப்பதற்கு ஒரு காரணம் வேண்டுமல்லவா? அந்தக் காரணமே இந்த மாநாடு! அதாவது: பிரதமரின் விஜயத்துக்காக மாநாடேயன்றி; மாநாட்டுக்காகப் பிரதமர் விஜயமல்ல.

ஐக்கிய இலங்கை, ஒற்றையாட்சி, வட்டமேசை மாநாடு என்றெல்லாம அக்கட்சித் தலைவர் அடிக்கடி மேடையில் பேசுவதுண்டு. அவற்றை மாநாட்டில் தீர்மானங்களாகவும் நிறைவேற்றிவைத்துள்ளார்.

இநநாட்டில் இருபெரும் தேசிய இனங்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டுமென்பதில் இருவித கருத்துக்களுக்கு இடம் கிடையாது. ஆனல் அந்த ஒற்றுமை நிரந்தரமானதாக இருத்தல் வேண்டும். தற்காலிகமான ஒற்றுமையால் நிரந்தரமான நன்மைகள் ஏற்படா.

ஒற்றையாட்சியில் இன ஒற்றுமை ஏற்படுவது சாத்தியமே. அந்த ஒற்றுமைதான் இன்று உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆனல் ஒற்றையாட்சித் திட்டத்தின்கீழ் இன ஒற்றுமை நிரந்தரமாக நிலைத்து நீடிக்காது. ஆட்சிபீடம் கைமாறும்போது — இன ஒற்றுமையில் நம்பிக்கையில்லாதவர்கள் ஆட்சிக்கு வரும்போது — இன ஒற்றுமை சிதைந்துபடும்.

இது ஏற்கனவே இந்நாட்டில் நிகழ்ந்துள்ள சம்பவமாகும். 1956க்குப் பின் ஆட்சியை நடத்தியவர்கள் அதற்கு முன்பு நிலவிய இனஒற்றுமைக்கு உலை வைத்தார்கள். ஆட்சியாளர் மாறியதும் மீண்டும் இன்று ஒற்றுமை உருவாகிறது. மறுபடியும் ஆட்சி கைமாறினல், இன்று நிலவும் இன ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படுமென்பதில ஐயமில்லை. இதற்காக யாரைக் குற்றம் கூறியும் பயனில்லை ஏனெனில், இது ஒற்றையாட்சியின் தவிர்க்க முடியாத இலட்சணமே இது தான். ஒற்றையாட்சி இருக்கும்வரை இந்த ஆபத்து நீங்காது.

இந்த அப்பட்டமான அரசியல் உண்மையைப் பார்க்கவோ, உணரவோ, சிந்திக்கவோ மறுப்பவர்கள் ஒன்று, அரசியல் அறிவிலிகளாக இருத்தல் வேண்டும், இல்லையேல் உண்மையை மறைத்து அரசியல்இலாபம் பெறுவதையே நோக்கமாகக் கொண்ட தந்திரசாலிகளாக இருத்தல் வேண்டும்.

அப்படியானல், இன்று உருவாக்கப்படும் இன ஒற்றுமை நிரந்தரமாக நிலைத்து நீடிப்பதற்கு வழி என்ன? அவ்வழி தான் சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகளிலே சமஷ்டி ஆட்சி முறையின் மூலமே இன ஒற்றுமை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இனங்களிடையே சரிநிகர் சமானமான சமத்துவ நிலையை ஏற்படுத்தவும், ஏற்பட்ட அத்தகைய சமத்துவ நிலையை நிரந்தரமாகப் பாதுகாக்கவும் சமஷ்டி ஆட்சியில் மட்டுமே சாத்தியமாகும்.

தேசிய அரசாங்கத்தின் கீழ் இன்று தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்படும் உரிமைகள், நாளை மாற்றுக் கட்சியினர் ஆட்சிக்கு வந்தால் அபகரித்துவிடுவார்கள் என்று மிரட்டுகிருர் திரு பொன்னம்பலம். ஒற்றை ஆட்சியின் கீழ்த்தான் அத்தகைய ஆபத்து ஏற்பட முடியுமென்பதை அவர் முன்யோசனையின்றி மூடிமறைத்துவிடுகிருர்.

சமஷ்டி ஆட்சியின் கீழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை எந்தக் கட்சியும் அபகரித்துவிட முடியாது அவர்களின் உரிமைகளுக்கு நிரந்தரமான பாதுகாப்பு அளிக்கக்கூடியது சமஷ்டி ஆட்சி மட்டுமே, இந்நாட்டில் ஒரு சமஷ்டி ஆட்சி ஏற்படும் வரை சிறுபான்மை மக்கள் தங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தொடர்ந்து போராடிக்கொண்டுதான் இருக்க வேண்டும். ஒற்றையாட்சியின் கீழ் இது தவிர்க்க முடியாத ஒரு நிலையாகும்.

வட்டமேசை மாநாடு பற்றி மீண்டும் பேசியிருக்கிருர் திரு. பொன்னம்பலம். தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளைப் பெறவும், அவற்றை நிரந்தரமாகப் பாதுகாக்கவும் அவர் கண்டு பிடித்துள்ள இலகுவான ஒரு குறுக்கு வழி இது.

இது செயல் படுத்த முடியாத, தற்போதைய நிலைக்கு ஒவ்வாத, செயல் படுத்தினலும் வெற்றிபெற முடியாத, உறுதியற்ற, இராஜதந்திரமற்ற, சிறுபான்மை மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும், தீர்க்கதரிசனமற்ற ஒரு குருட்டு யோசனையாகும், இத்தகைய மூடத்தனமான யோசனையைப் பற்றி மக்கள் சிந்திக்க வேண்டிய அவசியமே கிடையாது.

1965 மார்ச் தேர்தலுக்குப் பின்னர் அரசியல் நிலைமை பெருமபாலும் மாறியுள்ளது. அரசியல் கட்சிகளெல்லாம் இரு முகாம்களில் அணிவகுத்துநிற்கின்றன. ஒன்று அரசாங்கக் கட்சி. மற்றது எதிர்க்கட்சி எந்தக் கட்சியும் தனித்து நிற்கவில்லை. எனவே இன்று வட்டமேசை மாநாடு என்பது அரசாங்கக் கட்சி எதிர்க்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதே

எதிர்க் கட்சியுடன் பேசுவதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. எந்தப் பிரச்சினையைத் தீர்க்கவும் அரசாங்கக் கட்சிக்கு ஆதரவளிக்க எதிர்க்கட்சி தயாரில்லை என்றும், "பிரச்சினைகளைத் தீர்க்க முடியாவிட்டால் அரசாங்கக் கட்சி வெளியேறட்டும், நாங்கள் அரசாங்கத்தை ஏற்று அவற்றைத் தீர்க்கத் தயாராயிருக்கிறோம்" என்றும் எதிர்க் கட்சியினர் பன்முறை கூறிவிட்டனர்.

இந்த நிலையில் பிரச்சனைகளைத் தீர்க்க அவர்கள் எப்படி அரசாங்கக் கட்சிக்கு உதவுவார்கள்? எந்தத் திட்டத்தையும் அமுல் நடத்தும் அதிகாரமும் பெரும் பான்மை பலமும் அரசாங்கக் கட்சியிடம் இருக்கும் போது எதிர்க் கட்சியின் உதவியை நாடுவது கேலிக்கு உரியதல்லவா?

இந் நிலையில் "வட்ட மேசை" மாநாடு நிச்சயம் தோல்வி அடையும். தமிழ்ப் பேசும் மக்கள் இன்று அரசாங்கத் தரப்பில் இருப்பதால் தற்போதைய சுமுக நிலைமையைப் பாழ்படுத்தி நாட்டில் குழப்பநிலைமையை உண்டாக்கி, அரசாங்கக் கட்சிகளுக்குள் பிளவை ஏற்படுத்தி தேசிய ஐக்கியத்தைச் சிதைத்து தேசிய அரசாங்கம் வீழ்ச்சியடையும் ஓர் அபாயகரமான நிலைமையையும் உருவாக்கி விடுமே.

பொறுப்புள்ள ஓர் அரசியல் வாதியென்றால் திரு. பொன்னம்பலம் இந்த பயங்கர விளைவு பற்றி சிந்தித்திருக்க வேண்டாமா?

வட்ட மேசை மகா நாட்டில் ஒரு தீர்மானத்துக்கு எதிர்க் கட்சி சம்மதமளித்தாலும், எதிர்க் கட்சி ஆட்சிக்கு வந்ததும் அத் தீர்மானத்தை மீறுவதென்பதற்கு என்ன உத்தரவாதமிருக்கிறது?

ஆதலின், தமிழ் பேசும் மக்கள் திரு. பொன்னம்பலத்தின் பேச்சையோ, அவரது கட்சியின் தீர்மானங்களையோ பொறுப்புள்ளவைகளாகக் கருதாமல், அவற்றை அலட்சியம் செய்து விட வேண்டும்.

# பொ. கட்சிக் கூட்டங்களும் இ. தொ. கா. தலைவர் பேச்சும்

பிரதமரின் யாழ்ப்பாண விஜயம் ஓரளவு திருப்தியாக முடிந்துவிட்டது. பிரதமரின் விஜயத்தைப் பயன் படுத்தி பொ. கட்சியினரும் சில கூட்டங்களை நடாத்தி முடித்து விட்டார்கள் பிரதமரைப் பார்க்க, அவரின் பேச்சைக் கேட்க திரண்ட சனக்கூட்டத்தை பொ. கட்சியினர் 'நல்ல முறை'யில் பயன்படுத்தியிருக்கிருர்கள்.

பொ. கட்சித் தலைவரின் அரசியல் வாழ்க்கையில் முதல் தடவையாகக் கண்ட மாபெரும் சனக்கூட்டத்தின் முன் வழமையான புழுகு மூட்டை அவிழ்த்து விடப்பட்டிருப்பதுடன் தேசிய அரசாங்கத்தின் இரண்டாவது பெரும் கட்சியான தமிழரசுக்கட்சி மீதும் வசைபாடப் பட்டிருக்கிறது. மேடையில் அமர்ந்திருந்த பிரதமர் உட்பட ஏனைய அமைச்சர்கள் இவர்களின் தமிழ்ப்பேச்சை சரியான முறையில் புரிந்திருந்தால் அந்த நிமிடமே மேடையை விட்டு இறங்கி கொழும்பை நோக்கி புறப்பட்டிருப்பார்கள். பொ. கட்சிப் பரமுகர்களின் பேச்சை அரைகுறையாக விளங்கிக் கொண்ட பிரதமர் கல்முனையில் தமிழரசார் நடந்து கொண்ட முறையையும், யாழ்ப்பாணத்தில் பொ. கட்சியாளர் நடந்து கொண்ட முறையையும் நிச்சயம் எடை போட்டுப் பார்த்திருப்பார் என்பதில் எத்தகைய சந்தேகமுமில்லை.

### இதுதான் தேசிய ஒற்றுமையா?

ஐக்கிய இலங்கை, தேசிய ஒற்றுமை என்று தீர்மானம் நிறை வேற்றியவர்கள் எத்தனை கீழ்த்தரமான முறையில் பிரதேசவேறுபாடு பேசினர்கள் என்பதை தமிழ்த் தினசரிகளின்மொழிபெயர்ப்பிலிருந்தாவது பிரதமர் நிச்சயம் தெரிந்து கொண்டிருப்பார். தமிழரசுக் கட்சியின் மீது தவறு காண முடியாதவர்கள் கேவலம் பிரதேச வேறுபாடு பேசி ஒன்று பட்டிருக்கும் தமிழர்களை மீண்டும் பிளவு படுத்த முற்பட்டிருக்கிருர்கள்.

'தமிழரசுக் கட்சி இன்று வடபகுதியில் தனது கவனத்தைச் செலுத்துவது குறைந்து வருகிறது. கிழக்கு மாகாணத்திலேயே அது தனது முழுக் கவனத்தைச் செலுத்தி வருகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தை கிழக்கு மாகாணத்திலேயே நிறுவுவதற்கு தமிழரசுக்கட்சி முயலுகிறது' (தினகரன் 9-8-66) என்று ஒருவர் பேசியிருக்கிருர். தேசிய ஒற்றுமை ஐக்கியம் பற்றிப் பேசுகிறவர்கள் ஏன் தான் தமிழர்கள் வாழும் கிழக்கு மாகாணத்தின் மீது இத்தனை கோபம் கொண்டிருக்கிருர்களோ தெரியவில்லை.

கிழக்கு மாகாணம் ஓரளவு பின் தங்கிய பகுதி. அதன் முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டியது தமிழ்ப் பேசும் மக்களின் கடமை. அதைச் செய்வது பொ. கட்சியினருக்கு வெறுப்பை ஏற்படுத்துகிறது.

திருமலை தமிழர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்பதை சாதாரண கல்வியறிவு அற்றவர்களே உணருவார்கள். திருமலையைக் காப்பாற்ற அமரர் வன்னியசிங்கம் பட்ட கஷ்டங்கள் பல. இதனையெல்லாம் எங்கே பொ. கட்சியினரால் உணர முடியும், அன்று மலையகத் தமிழர்களை நட்டாற்றில் கைவிட்டவர் அல்லவா திரு ஜீ.ஜீ அப்பிரச்சினையைப் பற்றியும் பிரதமரையும் திரு. தொண்டமானையும் மேடையில் வைத்துக் கொண்டு திரு. ஜீ. ஜீ. பேசியிருக்கிருராம்.

### ஜீ. ஜீ. கேள்வியும் தொ. பதிலும்

'நான் மலையகத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்தேன் என்று சமஷ்டிக் கட்சியினர் கூறுகிருர்கள், அப்படியானல் இன்று திரு. தொண்டமான் எனது கூட்டத்திற்கு வந்திருப்பாரா? அவரே இப்பிரச்சினைக்குப் பதில் கூறுவார்' என்று திரு. ஜீ. ஜீ. தனது பேச்சில் குறிப்பிட்டிருக்கிருர். இதற்கு திரு. தொண்டமான் பதில் கூறுகையில் 'போனது போகட்டும்'' என்று மட்டும் கூறித் தப்பித்துக் கொண்டாராம். ஆனல் திரு. தொண்டமா

சுதந்திரன் அரசியல் நிருபர்

வின் நிலையில் 1947 ம் ஆண்டு யூலை மாதம் 16-ம் திகதியன்று திரு. ஜீ. ஜீ. எழுதிக் கொடுத்த உடன்படிக்கை மின்னலிட்டு மறைந்திருக்கும். உடன் படிக்கையின் நினைவும், அதைத் தொடர்ந்து திரு. ஜீ ஜீ. நடந்து கொண்ட துரோகத்தனமும் மின்னலிட்டதும் சமாதானம் கூற வகையறியாத திரு. தொண்டமான் 'போனது போகட்டும்' என்று கூறி தனது நிலையைக் காப்பாற்றியிருக்கிருர்.

### திரு. தொண்டமான் நிலை

திரு. தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் கழகம் பற்றி இக்கூட்டத்தில் பிரஸ்தாபித்திருக்கிருர். மலையகத்தில் கூற வேண்டிய கருத்தை யாழ்ப்பாணத்தில் கூறியிருக்கிருர். அவர் இன்று மலையகத்தில் கூட்டம் போட முடியாத நிலையில் இருக்கிருர். எனவே மன உழைச்சலைக் கிடைத்த இடத்தில் கொட்டித் தீர்க்க வேண்டியது தானே?

பொ. கட்சி மேடையில் நின்று திரு. தொண்டமான் சாத்திரி — சிறிமா உடன் படிக்கை பற்றியும், கட்டாய நாடு கடத்தலுக்கு இடம் கொடுக்கமாட்டேன் என்றும் கர்ச்சித்திருக்கிருர். பாவம் அந்த மேடையில் நின்று கேட்கவேண்டியதைக் கேட்க மறந்து விட்டார். சாத்திரி - சிறிமா உடன் படிக்கை உருவான நாளில் திரு. ஜீ. ஜீ. மக்கள் மத்தியிலிருந்து மறைந்திருந்த காரணத்தினல் அது பற்றி கருத்துத் தெரிவிக்கவில்லை. பின்னர் தேர்தலில் தலை காட்டியதும் இந்த உடன்படிக்கை பற்றி கருத்துக்கூறும் வண்ணம் பலரும் திரு ஜீ ஜீ யைக் கேட்டார்கள். 'அது பற்றி தலைக்குக் கவலையில்லை' என்று அப்பொழுது கூறி விட்டார்.

### புதிய நண்பரின் கருத்தென்ன?

இப்பொழுது திரு. ஜீ ஜீ. தேசிய அரசாங்கத்தின் உறுப்பினர். இத்தலைக்கும் மேலாக திரு. தொண்டமானின் புதிய நண்பர். எனவே அவரிடம் இந்த உடன்படிக்கை பற்றி ஒரு தெளிவான கருத்தைக் கூறும் வண்ணம் பிரதமர் முன்னிலையில் திரு தொண்டமான் கேட்டிருக்கவேண்டும். ஏனெனில் 'மலைநாட்டுத் தமிழர்களையெல்லாம் கலைத்துப் பிடித்து உடனடியாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும்' என்று திரு. ஜீ ஜீ. ஒரு பெரிய ஓட்டலில் நடைபெற்ற விருந்தின் போது கூறியதாக ஒரு வதந்தி உலாவுகிறது. அவர் கூறியது உண்மையாக இருந்து அங்ஙனம் 'கலைத்துப்பிடித்து' அனுப்பி விட்டால் திரு. தொண்டமானும் தமது அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது தான். தனது நிலையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது திரு தொண்டமான் உண்மையை அறிய முயன்றிருக்க வேண்டும்.

### இதுதான் ஒற்றுமை


திரு. தொண்டமான் இக்கூட்டத்தில் ஒற்றுமை பற்றியும் வலியுறுத்தியிருக்கிருர். யார் யாருக்கு ஒற்றுமையைப் பற்றி வலியுறுத்துவது என்பது தெரியவில்லை. தமது பிழையை மறைத்துக்கொள்வதற்காகத்தான் திரு. தொண்டமான் இப்படிக் கூறியிருக்கலாம். வேற்றுமையைத் தொடர்ந்து வளர்க்கும் திரு. பொன்னம்பலமும் தானே அடிக்கடி ஒற்றுமை பற்றி பேசுகிருர் எனவே திரு தொண்டமான் எப்படி இதற்கு விதிவிலக்காக இருக்க முடியும்.

ஒற்றுமையைப் பற்றிப் பேசிய திரு. தொண்டமான் கடந்தமாதம் மலையகத்தில் நடைபெற்றவேலை நிறுத்தத்தின் போது எப்படி நடந்து கொண்டார் என்பதை நாடு அறியும் மலையகத்தில் உள்ள எல்லாத் தொழிற் சங்கங்களும் வேலை நிறுத்தத்தை ஒரு மனதாக ஆதரிக்கையில் திரு. தொண்டமான் சங்கம் மட்டும் தானே தனித்து நின்று அதை எதிர்த்தது. இவர்தான் யாழ்ப்பாணத்தில் ஒற்றுமையைப் பற்றிப் பேசியவர். இ. தொ. கழகம் பற்றி திரு தொண்டமான் யாழ்ப்பாணத்தில் கூறியதற்கும் இதுவே காரணம்.

### பழைய பல்லவி

இந்துப்பல்கலைக் கழகம், வட்டமேசை மாநாடு, யாழ்ப்பாணத் தொகுதி (வட கிழக்கு மாகாணங்களிலல்ல) பொருளாதார முன்னேற்றத்திட்டம பற்றியும் பொ. கட்சிக் கூட்டங்களில் பேசப்பட்டிருக்கிறது. இந்துப் பல்கலைக் கழகத்தை சகல சிங்களக் கட்சிகளும் ஆதரிப்பதாக திரு ஜீ ஜீ ஒரு முழுப் பொய்யையே கூறியிருக்கிருர். கண்டியெடுத்த வகுப்புவாதியான திரு. ஆர். ஜீ. சேனநாயக்கா தவிர வேறு யார் தான் இந்துப் பல்கலைக் கழகத்தை ஆதரிக்கிருர்கள் என்பதை திரு, ஜீ ஜீ. யால் கூறமுடியுமா? கேவலம் பொ கட்சியைச் சேர்ந்த

(7-ம் பக்கம் பார்க்க)



# இந்திய சுதந்திர தின சிறப்பிதழ்

## இந்திய தூதுவரின் சுதந்திர தினச் செய்தி

நீண்ட காலமாக காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்த ஒரு நாட்டு மக்களின் வாழ்வில் பத்தொன்பது வருடங்கள் என்பது அதிக காலமல்ல. அப்படியிருந்தும், அமைதி நிறைந்த இருபது வருடகால இடைவேளை. ஒரு நாட்டை தன் சொந்தக்காலில் நிற்கச் செய்வதற்கு வேண்டிய தேவையான வாய்ப்புகளை அளிக்க முடியும், 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ந் திகதி சுதந்திரம் கிடைத்த பின்பு இந்தியா, தேசிய புனரமைப்பு என்னும் மிகப்பெரிய பணியில் இறங்கியது." இவ்வாறு இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் ஸ்ரீ பீம சென் சச்சார் இந்திய சுதந்திரதினத்தை யொட்டி (ஆகஸ்ட்15) விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளார்.

அவர் அச்செய்தியில் மேலும் கூறுவதாவது!

'1951ம் ஆண்டு திட்டமிடப்பட்டு இதுவரை மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டிருக்கின்றன. பல துறைகளிலும், பிரமிக்கத்தக்க முறையில் வளர்ச்சியடைந்துள்ளோம். முன்னேற்றமடைந்த ஏனைய உலக நாடுகளைப் போல முன்னேறுவதற்காக ஒவ்வொரு தடவையும் பெரிய திட்டங்களைத் திட்டமிட்டு, ஆரம்பப்பணியிலேயே ஊக்குவிக்கப்பட்டுள்ளோம்.

'பொருளாதாரத்தில் பின் தங்கிய சமூகத்திற்காகத் திட்டமிடும் போது, இயல்பாகவே, விவசாயம், கைத்தொழில் இரண்டிலும் முழுக் கவனத்தையும் செலுத்தினோம். ஆகவே எமது படைபலம் எமது தற்காப்புக்கான அளவே இருந்து வந்தது.



தனது அண்டை நாடுகளுடன் சமாதானமாக வாழ்வதற்கு, இராணுவம், விமானப்படை, கடற்படை என்பனவற்றை அதிகரிக்க வேண்டும் என்பதில் இந்தியாவுக்கு நம்பிக்கையில்லை. எல்லா நாடுகளுடனும், சமாதானத்துடனும் சிநேக பான்மையுடனும், அவரவர் நாடுகளினது இறைமைக்கும், எல்லைக்கும் சமாதானமாக உடனிருந்து வாழும் கொள்கைக்கும் மதிப்பளித்து வாழ்வதே இந்தியவின் கொள்கையென்பதை தெட்டத்தெளிவான வார்த்தைகளில் விளக்கியிருக்கிறோம்.

'நாம் நட்புறவை வளர்க்க நம்மாலியன்றதை யெல்லாம் செய்து வந்த போது ஒரு அயல்நாடு, தனது தவறான எல்லைக் கோரிக்கைக்கு ஆதரவாக திடீரென்றுபடை பலத்தை உபயோகித்தது. இது சமாதான வழியில் பொருளாதார அபிவிருத்தி மீது நாம் கொண்டிருந்த ஈடுபாட்டுக்கு ஒரு பேரிடியாக இருந்தது.

'இது நாட்டுக்கு துடிப்பையும் புதிய விழிப்பையும் ஏற்படுத்தியது. பாதுகாப்புத் துறையில் புதிய வழியில் திட்டமிட வேண்டியவர்களானோம். நாட்டுப் பாதுகாப்புக்கு வேண்டிய தேவைகளை கட்டாயமாக கவனிக்க வேண்டியேற்பட்டதால் 1963ம் ஆண்டு முதல் எமது அபிவிருத்தித் திட்டங்கள் புனரமைப்பு செய்யப்பட்டன கடந்த ஆண்டு எதிர்பாராத வகையில், எமது இன்னொரு அயல்நாடு எம் மீது படைபலத்தை உபயோகித்த போதும், அதன் பின்னும் இது இன்னும் அவசியமாகி விட்டது.

'இந்தப் பின்னணியுடன் பார்க்கும் போது, திட்டமிடுதலின் கீழ் நாம் அடைந்த வெற்றிகள் குறிப்பிடக் கூடியவை. எமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அன்றொரு நாள் வானொலியில் பேசும் போது பின்வருமாறு கூறினார்:



'திட்டம் தான் எங்கள் உயிர்... நாம் சாதித்தவை அதிகம் என்று நாம் உரிமை கொண்டாடலாம் என நான் நம்புகின்றேன். அப்படிப் பெருமைப்படுவதற்கு எமக்கு சட்ட ரீதியாக உரிமையுண்டு. பலவகையான தொழில் வளர்ச்சியிலும், உணவுற்பத்தியிலும், நீர்பாசனத்திலும், போக்குவரவு தொடர்பு அபிவிருத்தியிலும், கல்வி, நலத்துறை போன்றவற்றிலும், இன்னும் பல துறைகளிலும் நாம் குறிப்பிடக் கூடியளவு முன்னேறியுள்ளோம்.'



பிரதமர் பின்வருமாறு கூறி எமது கஷ்டங்களையும் உணர வைத்தார்.

'நாம் செய்யக்கூடிய தெல்லாம் செய்து முடித்து விட்டோம் என்றோ நாம் தவன் விடவில்லையென்றோ நான் கூறவில்லை.

'வரட்சி, அந்நியச் செலாவணிக்கஷ்டம் காரணமாக, மிகவும் தொல்லை மிகுந்த நேரத்திற்கூடாக நாம் சென்று கொண்டிருக்கிறோம்.'

அடுத்த பத்தாண்டுகளில் இந்தியா சுயதேவைகளைப் பூர்த்திசெய்யும் நாடாகவும், சுய பலத்துடன் விளங்கக் கூடிய நாடாகவும் இருக்குமென்பதை எமது பிரதமர் சரியாக தீர்க்கதரிசனத்துடன் கூறியுள்ளார். நாமனைவரும் இப்பிரகடனத்தில் ஒன்றுபட்டு நிற்கிறோம்.'

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு எமது அன்பர்களுக்கு உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள்

**மெய்கண்டான்**

திருக்குறட் கலண்டர்களுக்கும்

**தமிழ் - ஆங்கில டயறிகளுக்கும் பெயர் பெற்றவர்கள்**

**மெய்கண்டான்**

தலைமை நிலையம்: கொழும்பு-11.
போன்: 79141

கிளை நிலையம்: யாழ்ப்பாணம்
போன்: 236

# தேர்தலில் நான் போட்டியிடுவதா?

# நடக்கவே நடக்காது

## வதந்திகளுக்கு சிவாஜி மறுப்பு

“எதிர்வரும் தமிழக சட்டமன்றத்தேர்தலில் நான் போட்டியிடப் போவதாக கூறப்படும் வதந்தியில் சிறிதும் உண்மை இல்லை. நான் நடிப்புத் துறைக்கு என்னுலான பணியைச் செய்து கொண்டிருக்கிறேன். அதற்கே எனக்கு நேரம் போதவில்லை. இதற்கிடையில் மற்ற விடயங்களில் நான் எப்படி ஈடுபடமுடியும்?” இவ்வாறு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அளித்த பேட்டியொன்றில் கூறுகிருர்.

எதிர்வரும் இந்தியப் பொதுத் தேர்தலில் தமிழகச் சட்டமன்றத்துக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் நடிகர் திலகம் போட்டியிடக் கூடும் என்று ஒரு வதந்தி அடிபட்டு வருவது நேயர்சள் அறிந்ததே. அதுபற்றி நடிகர் திலகத்திடம் நேரடியாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு சொன்ஞர்.



அவர் மேலும் கூறியதாவது:-

‘நான் நிச்சயமாகத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. அப்படி யார் சொன்னது? எனக்கும் தேர்தலுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. தேர்தலில் ஈடுபடுவதற்கு மக்களுக்கு சேவை செய்திருக்கவேண்டும். நான் என்ன சேவை செய்திருக்கிறேன்? தேர்தலில் போட்டியிட்டால் எனக்குள்ள திரையுலகச் செல்வாக்கைவைத்து வெற்றியடையக் கூடும். ஆனுல் அதன்பின்பு செய்ய வேண்டிய கடமையைச் சரியாகச் செய்யவேணுமே!

‘எனக்கு எனது தொழிலை சரியாகப் படிக்கவே நேரம் போதாமல்இருக்கிறது. இந்த நடிப்புத் துறையிலே உருப்படியாக எதையேனும் செய்யவே நான் விரும்புகிறேன். அதற்கு நான் உருப்படியாக இன்னும் எதுவும் செய்யவில்லை. அதற்காகவே தான் முயன்று வருகிறேன்.’

# புராணப் படத்தில் எம். ஜி. ஆர்.



மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள், புராணப் படம் ஒன்றில் நடிக்கவிருக்கிருர். இப்பொழுது ‘அரச கட்டளை’ என்ற படத்தை தயாரித்துவரும் சத்தியராசா பிக்சர்சார், அடுத்ததாக, ‘இந்திரஜித்’ என்ற படத்தை தயாரிக்கவிருக்கிருர்கள்.

ஈழத்தை ஆண்ட இராவணனின் மகன் இந்திரஜித்தின் இந்த வரலாற்றுக் கதையில் மக்கள் திலகம் ‘இந்திரஜித்’ ஆக நடிப்பார். அவருக்கு இணையாக ஜெயலலிதா நடிப்பார் என்று தெரிகிறது.

# ‘சித்தி’

## இலவச குறுக்கெழுத்துப் போட்டி

சிலோன் என்டர்டெயின்மெண்ட் லிமிட்டெட் நிறுவனத்தினர் அளிக்கும் ‘சித்தி’ படத்தை இலவசமாகப் பார்ப்பதற்கு இப் போட்டி மூலம் திரைப்பட இரசிகர்களுக்கு ஓர் வாய்ப்பு ஏற்படுகிறது. இப் போட்டியில் கலந்துகொள்வதற்கு எதுவிதமான கட்டணமும் செலுத்தப்பட வேண்டியதில்லை. சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்தினதும், என்டர்டெயின்மெண்ட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தினதும், ஊழியர்களையும் அவர்களுடைய நேரடி உறவினர்களையும் தவிர்ந்த ஏனையோர் இப் போட்டியில் தாராளமாகக் கலந்துகொள்ளலாம்.

சுதந்திரன் வாசகர்களுக்கான இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சிலோன் என்டர்டெயின் மெண்ட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தினரே பரிசுகளைவழங்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

**விதிகள்:**

1. சுதந்திரனில் விசேடமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் ‘கூப்பன்’களிலேதான் விடைகள் நிரப்பி அனுப்பப்பட வேண்டும்.
2. ஒருவர் ஒரே உறையில் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு விடையுடனும், சிலோன் என்டர்டெயின்மெண்ட்ஸ் லிமிட்டெட்டாரின் படங்களைத் திரையிடும் படமாளிகைகளில் படம் பார்த்த நுழைவுச்சீட்டின் அடிக்கட்டை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உறையின் மேல் போதுமான தபால் முத்திரைகள் ஒட்டப்பட்டிருத்தல் அவசியம்.
3. முழுக் கட்டங்களும் நிரப்பப்படாத விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
4. போட்டி விடயமாக சுதந்திரனுடனே என்டர்டெயின் மெண்ட்ஸ் நிறுவனத்தாரிடமோ எதுவித கடிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது.
5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

**பரிசுகள்**

முற்றிலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விடைக் கூப்பன்களிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் பரிசுக்குரிய விடைகள் பொறுக்கப்படும். முதலாவது எடுக்கப்படும் விடைக்கு முதல் பரிசும், ஏனைய பரிசுகள் முறைப்படியும் வழங்கப்படும்.

**1 வது பரிசு—6 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

**2 வது பரிசு—4 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

**3 வது பரிசு—3 மேல் வகுப்பு டிக்கட்டுகள்.**

மற்றும்

**3 ஆறுதல் பரிசுகள்—ஒவ்வொன்றும் 2 மேல்வகுப்பு டிக்கட்டுகள் வீதம் வழங்கப்படும்.**

**முடிவுத் திகதி 25-8-66.**

6-9-66 சுதந்திரன் இதழில் முடிவுகள் வெளியாகும்.

விடைக்கான கூப்பன் 13-ம் பக்கத்தில் உள்ளது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

உறையின் இடது பக்க மேல் மூலையில்
‘சித்தி’ இலவசப் போட்டி
என்று எழுதப் பட்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை.

## நாட்டிய விழா

இம்மாதம் 14ம் திகதி மாலை 6.25 மணிக்கு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம், திருமதி. திருச்செல்வம் ஆகி



யோர் தலைமையில் நாட்டிய விழாவொன்று நடைபெற இருக்கிறது. இந் நாட்டிய விழாவுக்கு விசேட விருந்தினராக திரு. ஏபிரகாம் கோவூர் அழைக்கப்பட்டிருக்கிருர்.

பிரபல நாட்டிய ரமணிகளான, வைத்தியநாதன் சகோதரிகள் இந் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிருர்கள். செல்வி தங்கம் அளிக்கவிருக்கும் ‘புறப்பாடு’ என்னும் கதகளி நிகழ்ச்சியும், செல்வி. ருக்மணி, செல்வி. விஜயலட்சுமி அளிக்கும் ‘ஆன்ம எழுச்சி’யும், செல்வி தங்கம் அளிக்கும் பரதநாட்டிய நிகழ்ச்சியும், செல்விகள், ருக்மணி, விஜயலட்சுமி, தங்கம், மூவருமாக அளிக்கவிருக்கும் ‘தசாவதாரம்’ நாட்டிய நிகழ்ச்சியும் சிறந்து விளங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. சம்கார தாண்டவம், கண்டிய நடனம், பறவை நடனம், கீதோபதேசம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

# இந்து மகளிருக்கு தலைநகரில் தனிவிடுதி

## ‘தொடாதே’ நாடகத்தின்போது செல்வி நாதன் விளக்கினர்

“தமிழ்ப் பகுதிகளிலிருந்து வந்து தலைநகரில் தங்கியிருந்து கல்வி கற்கும் இந்து மகளிருக்கு ஒரு விடுதிச்சாலை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது மன்றத்தின் முதல் நோக்கம்” என்று கொழும்பு இந்து மகளிர் மன்றச் செயலாளர் செல்வி சற்சொரூபவதி நாதன் அவர்கள் கடந்த 8ம் திகதி யன்று பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் மன்றத்தின் நிதிக்காக நடைபெற்ற ‘தொடாதே’ நாடகத்தின்போது நன்றியுரை கூறுகையில் தெரிவித்தார்.

உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம் அவர்களினதும் திருமதி திருச்செல்வம் அவர்களினதும் தலைமையில் நடைபெற்ற இந் நாடக நிகழ்ச்சியின்போது மன்றச் செயலாளர் தமது நன்றியுரையில் மன்றத்தின் நோக்கங்களையும் தெளிவுபடுத்தினர். அப்பொழுது அவர் மேலும்கூறியதாவது:-

‘இந்துமகளிர்க்கு வேறு மன்றங்கள் தலைநகரில் இருக்கும்பொழுது புதிதாக ஒரு மன்றம் அவசியமா என்ற கேள்வி சிலர் மனதில் எழுவது தவிர்க்க முடியாதது. கிளைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டுமென்ற நோக்குடன் நாம்இந்தமன்றத்தை அமைக்கவில்லை. தமிழ்ப்பகுதியிலிருந்து வந்து கொழும்பில் தங்கியிருந்து கல்வி கற்கும் இந்துப் பெண்கள் பலர் தங்குவதற்கு வசதியான இடம் இன்றிப் பெரிதும் இன்னலுறுகிருர்கள். ஒழுக்கமான ஆண்களே இருக்கமுடியாத இடங்களில்கூட நமது பெண் பிள்ளைகள் சிலர் அறையெடுத்து இருக்கவேண்டிய நிலை கடந்த ஆண்டில் தோன்றியுள்ளது. இதற்கு ஒரு பரிகாரம் காணும்நோக்கத்துடனேயே நாம் இம்மன்றத்தைத் தொடக்கியுள்ளோம்.

‘ஒவ்வொருமன்றங்களுக்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கலாம், அதேபோன்று எமது மன்றம் இந் நோக்கை கொண்டிருக்கிறது. நாம் விரும்பும் விடுதிச்சாலையை அமைப்பதன் முதற்படியாகவே இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளோம் இந் நிகழ்ச்சியின் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டும் மேலும் வேறு நிகழ்ச்சிகளை நடாத்தியும் நமது நோக்கத்தை விரைவில் செயல்படுத்துவோம்.


“இங்கு வருகை தந்திருக்கும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களும் எமது நோக்கத்திற்கு உதவ உறுதி கூறியுள்ளார். முடிக்குரிய காணியொன்றைப் பெற்றுத்தருவதாகவும் அவர் சம்மதம் கொடுத்துள்ளார். விரைவில் இந்து மகளிரின் இன்னல் நீங்கும்’ என்று கூறினர்.

திருமதி சுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். திரு. திருச்செல்வம்அவர்களும், திருமதி திருச்செல்வம் அவர்களும் நாடகக்கலைஞர்களுக்கு மலர் மாலை அணிவித்துக் கௌரவித்தனர்.

ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தின் 20வது தயாரிப்பான ‘தொடாதே’ நாடகம் இந்நிதிக்காக சில மாற்றங்களுடன் கொழும்பில் 2வது முறையாக மேடையேற்றப்பட்டது. பஞ்சமா பாதகங்களில் ஒன்ருன மதுவை மையப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாடகம் இந்துமகளிர் நிதிக்காக நடைபெற்றதுசாலவும் பொருத்தமானதாக அமைந்திருந்தது.

# 'சித்தி'

## இலவச குறுக்கெழுத்துப் போட்டி விடைக் 'கூப்பன்'



முழுப் பெயர்......................................................

முகவரி......................................................

......................................................

......................................................

......................................:
கையொப்பம்

### இடமிருந்து வலம்.

1. இலோன் என்டர்டெயின்மென்சார் திரைப்பட ரசிகர்களுக்கு அளித்துள்ள இவ்வாண்டின் மிகச் சிறந்த படமிது.
3. 'சித்தி'யின் பெயர்.
5. இவர் இப்படத்தில் ஊமைப் பெண்ணுக நடிக்கிருர்.
7. இந்தக் குழந்தை நட்சத்திரம்கூட என்னமாதிரி நடித்திருக்கிறது 'சித்தியில்'!
9. சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளுக்கு வரவிருக்கும் மற்ெருரு வெற்றிப்படமான 'ஆனந்தியி'ல் நடித்துள்ள கதாநாயகியை அவரின் கணவர் இப்படித்தான் அழைப்பார்.
10. இந்த மனிதர் 'சித்தியில்' மட்டுமல்ல, எந்தப்படத்திலும் கொடுமைக்காரர்தான்!
12. 'சித்தியில், இவர் பாடியுள்ளபாடல்கள் நெஞ்சைப் பிழிகின்றன.
14. 'சித்தி' படத்தைப்பார்த்தவர்கள் 'சித்தி ஒரு......படம் என்று நிச்சயம் புகழுவார்கள்.
16. அறம் அலங்கோலப்பட்டு விட்டது.
17. 'சித்தி'யில், கல்வியின் பெருமையை விளக்க நாகேஷ் ஒரு கவிஞரின் பாடலை எடுத்துக் கூறுகிறரல்லவா? அந்தக் கவிஞர் இங்கு உருமாறியிருக்கிருர்.
20. மாறியிருக்கும் இது தமிழ்ப்படங்களில் இப்பொழுது அதிகரித்து வருவதாக அறிஞர்கள் குறைப்படுகிருர்கள்.
21. சோர்வுள்ள உள்ளத்துக்கு இது மகிழ்ச்சியைக்கொடுக்கும்.

### மேலிருந்து கீழ்.

1. 'சித்தி' படத்தை தயாரித்த கம்பெனியின் பெயர்.
2. யாராலும் வெல்ல முடியாதது என்று கூறப்படும் இது இங்கே மாறிவிட்டது.
4. பிரபல தமிழ் நடிகர் ஒருவர்.
6. ......ரஞ்சகக் காட்சிகளுக்கு 'சித்தியில்' குறைவில்லை.
8. தலைகீழாகக் கிடக்கும் இது சிலரிடம் காணப் படுவதில்லை.
9. விலாங்கு குறைப்பட்டு விட்டது.
11. நாடகக் கணிகை.
12. 'சித்தியில்' நடித்துள்ள பழம்பெரும் நடிகையான இவர் பெயரைச் சுருக்கிக் கொண்டு காணப்படுகிருர்.
13. எத்தனை பெண்கள் இங்கே மாறுபட்டுக் கிடக்கும் இக்கொடுமையால் திருமணமின்றி வருந்துகிருர்கள்?
14. 'சித்தி' படத்தில் பத்மினியின் நடிப்பு......
15. 'சித்தியில் முத்துராமனின் காதலியாக தோன்றும் 'எங்கவீட்டுப் பெண்'ணுன இவர் சுயரூபத்தில் தோன்றுகிருர்.
18. மூத்தாளின் குழந்தைகளிடம் பத்மினி காட்டும் இந்த உணர்ச்சி நம் கண்களை குளமாக்குகின்றது.
19. கீழிருந்து மேலாக வாசித்தால் அரைவாசியாகும்.


## வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்தல்


(11-ம் பக்கத் தொடர்ச்சி)

19-12-1927: ரோஷன் சிங் அலகபாத்தில் தூக்கிலிடப்பட்டார்.

3-5-1930: காஷ்மீர் சாலிமார் தோட்டத்தில் போலீசாருடன் போராடிக்கொண்டே உயிர் நீத்தார் நிகஜச சந்திரராய்.

2-12-1930: கான்பூர் டி. ஏ. வி. கல்லூரியில் போலீசாருடன் போரிட்டுக் கொண்டே சாலிக்ராம் சுகலா இறந்தார்.

6-5-1930: இரண்டாவது சிட்டகாங் ஆயுதக் கொள்ளையில் உயிர் நீத்தவர்கள்: விகாஸ் தஸ்கிதார், தேவி குப்தா, மனோரஞ்சன்சென், இராஜத்சென் ஸ்வதேஸ்ராய், அமரேந்திரநந்த் ஆகியோர்.

2-3-1931: சத்தார்பகத்சிங் ராஜகுரு, சுகதேவ் மூவரும் சாண்டர்ஸ் கொலைக்காக தூக்கிலிடப்பட்டார்கள்.

1931: யதீந்திரராத் தாஸ், பகவத்சிங்கிற்கு ஆயுதப் பயிற்சி கொடுத்தவர், 62, நாள் உபவாசத்திற்குப் பிறகு பார்ஸ்டன் சிறையில் உயிர் நீத்தார்.

1931: ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ஜனநாயகப் படையின் தலைவர் சேனுதிபதி சந்திரசேகர ஆசாத், ஆல்பிரட் தோட்டத்தில் போலீசாருடன் போரிட்டு உயிர் நீத்தார்.

6-6-1931: பட்டமளிப்பு விழாவின்போது பஞ்சாப் கவர்னரைச் சுட முயன்றதாக ஹரி கிருஷ்ணு தூக்கிலிடப்பட்டார்.

1931: சிட்டகாங் ஆயுதக் கொள்ளையில் உயிர் நீத்தவர்கள் ஹரிகோபால், பரவசதாத், உர்தேத்துவிகாஸ், தாஸ்திகர், ஜதீந்தாஸ், குப்தா, மதுசூதன் தத் புலிங் கவிகாஸ்கோஸ், நரேஷ் ராய், திரிபுராசென், ஹரிகோபால்தேகரா, மோதி ஆகியோர்.

## கட்டப்பொம்மன்....

13-12-1933: அம்பிகாசிங், குலாப்சிங், ஜஹாக்கீர்லால், ஆகியோர் இரண்டாவது லாகூர் வெடி வழக்கில் தூக்கிலிடப்பட்டார்கள்.

1940: தனிப்பட்டவர் அறப்போரில் புகழ்படைத்த மக்கள் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டு கொடுமையான தண்டனைகளுக்கு ஆளானுர்கள்.

9-8-1942: 'அன்று எங்கோ 1857 திரும்பிவிட்டதோ'' என்று வெள்ளையர் அஞ்சும் அளவிற்கு இந்தியா வெங்கும் பெரும் புரட்சி சுடர்விட்டு எரிந்தது. நாடெங்கும் தண்டவாளங்கள் தகர்ந்தன! தந்திக்கம்பிகள் பெயர்ந்தன. துப்பாக்கிப் பிரயோகமும் தடியடியும் எங்கும் கோரத் தாண்டவமாடின.

1946-ஆம் ஆண்டு நவகாளியில் இந்து முஸ்லீம் வகுப்புக் கலவரம் எழுந்தது. இந்தக் கலவரத்தினுல் பஞ்சாப் படுகொலையை விட அதிகமான அப்பாவி மக்கள் செத்து மடிந்தனர்.

15-8-1947: அன்று பாரத மணித்திருநாடு அன்னிய ஆட்சியில் இருந்து விடுபட்டு, தாயின் மணிக்கொடியை டில்லிக் கோட்டையிலே பறக்கவிட்டது.


### சர்வகலாசாலை போதனு கழகம்
கொழும்பு-10.
(ஆனந்தா கல்லூரிக்கு எதிரே)

பாலர் வகுப்பு தொடக்கம்
உயர்தர வகுப்புக்கள்
காலை, மாலை நடைபெறும்

மாணவ மாணவிகள் வயதுக் கட்டுப்பாடின்றி எந்த நேரத்திலும் சேர்வதற்கு இடமுண்டு.

கலை, வர்த்தகம், விஞ்ஞானப் பாடங்கள் இடம்பெறும்

சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலம் அனுபவம்பெற்ற பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு வகுப்புக்கள் நடாத்தப்படும்.

மேல் விபரத்திற்கு;

அதிபர்,
ச. போ. க.
540, மருதானை வீதி.
தொலைபேசி: 91699



### சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையே புகைக்கிருர்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

யானை பீடி ஸ்பெஷல்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:

யானை பீடி கம்பெனி,
62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு-12.
தொலைபேசி: 7651

# அலைகடல்தான் ஓயாதோ?

"செங்கை ஆழியான்"

இருள் கரம் விரிக்கத் தொடங்கும் வேளை சாய்கதிரின் தண்ணொளி மென்மையாகப் பூசிய வர்ணமாக முற்றத்தில் படிந்து கிடந்தது. செல்லப்பரின் வீடு மேற்கு நோக்கிய அமைப்பினையுடையது. மத்திய தர வர்க்கத்திற்குரிய பெரிதுமல்லாத, சிறிதுமல்லாத தொரு இல்லம்.

வெளித்திண்ணையில் அமர்ந்து, முற்றத்துத் தென்னையின் இறகாகக்குவிந்து விரிந்த ஓலைகளைப் பார்த்துக் கொண்டிருப்பான், நாகலிங்கம். அதிக உயரமில்லாத செவ்விளநீர் மரமது. கதிர்படும் ஒரு புறத்துப் பளபளப்பையும், மறுபுறத்து நிழற்கருமையையும் கண்ணிமைக்காது பார்ப்பதில் அவனுக்கொரு விருப்பு. வஞ்சகம் செய்யாது தன் வட்டு முழுவதும் குலைகளைத் தாங்கி பூரித்து நிற்கும் அத்தென்னையை பார்க்கும் போதெல்லாம், அவனுக்கு என்னே செல்லப்பரின் குடும்பமே நினைவில் வரும்.

அத்தென்னைக்கு அப்பால் மதிலோரத்தில்பெரியதொரு கொய்யாமரம் உயர்ந்து வளர்ந்து நின்றது. கிளைகளை நன்கு பரப்பி, உருண்டு திரண்டு அதுவளர்ந்திருந்தது. இரண்டு அடி உயரமான அதன் அடிமரத்திலிருந்து, இரு பெருங்கிளைகள் அகன்ற இரு விரல்களின் அமைப்பில் விரிந்துயர்ந்து காய்களுடன் அசைந்தன. அந்த இரு விரல் பிளவில் சில வேளைகளில் பரிமளா ஏறி உட்கார்ந்து ஏதாவது படித்துக்கொண்டிருப்பாள்.

படிப்பின் சுவையைப் பொறுத்து அவளது கால்கள் அசையும். வெளித்திண்ணையில் அமர்ந்திருக்கும்நாகலிங்கம் சில வேளை அச்சிறுமியைப் பார்த்துச் சிரிப்பான். அவள் அங்கிருந்துகொண்டே பலமாகக் கேட்பாள்!

'என் மாஸ்ரர், சிரிக்கிறியள்?'

'சிரிக்கக் கூடாதோ?'

'காரணமில்லாமல் சிரிப்பார்களோ?'

'ஏன், காரணமில்லாமலா நான் சிரித்தேன்?'

அவளது அகன்ற விழிகள் வில்புருவத்தை நோக்கிச் சற்று விரிய, அவள் கேட்பாள்.

'காரணத்தைச் சொல்லுங்களேன்?'

அன்பானவர்களை நேரில் முகத்திற்கு முகம் காணும் போது அவனையறியாமலே, உள்ளநெகிழ்ச்சியால்மலரும் சிரிப்பிற்குரிய அர்த்தத்தை விளக்க எப்படி அவனால் முடியும்?

'பரிமளா, நேரமாகுது, படிப்பமா?' என எழுவான். அவள் மானின் துள்ளலுடன் உள்ளே விரைவாள்.

அவன் ஆசிரியன்; செல்லப்பர் வீட்டில் பரிமளாவிற்கு அவன் ஆசிரியன்.

ஒளியாக முகம் கழுவி, இரு பின்னலிட்டு, ஒரு விரலால் நெற்றியில் - சற்று மேலேறிய நெற்றி அவளுடையது; அதில் சில மயிர்க்கற்றைகள் சிலிர்த்து நிற்கும் - ஒரு குறி விபூதி இட்டிருப்பாள்.

'மாஸ்ரர், நீங்கள் விளங்கப்படுத்தினால் மிக நல்லா விளங்குது. எங்களுடைய பள்ளியிலை உங்களைப் போல நல்லா விளங்கப் படுத்துவதில்லை...'

அவன் சிரித்துக் கொள்வான்.

'ஏன் மாஸ்ரர், சிரிக்கிறியள்?'

- புருவங்கள் நெற்றியில் மேலேற விழுப்பாள்.

'நீ படிப்பிப்பதைக் கவனமாகக் கவனிப்பதில்லை யாக்கும்!'

'நான் அப்பமொக்கா?'

'சச்சீ! அப்படி இல்லைப் பரிமளா! மாணவர்கள் எல்லோரும் கெட்டிக்காரர்கள் தாம். அவர்களுக்கு விளங்கக் கூடிய விதத்தில் படிப்பித்தால் எல்லா மாணவர்களும் முதற் தரமாணவர்கள் தாம்!'

'அப்ப வாத்திமார்தான் படிப்பிப்பது சரியில்லையா?'

'உண்மையில் சில ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கத் தகுதியற்றவர்கள் தாம்...!'

பரிமளா படிப்பதிலும் பார்க்க அவனோடு பேசுவது தான் அதிகம். வலு கெட்டிக்காரி. ஒரு கூடவை சொன்னதைக் கிரகித்துக் கொள்வதில் திறமையானவள்.

அவன் இளைஞன்; சிலபோதுகளில் அவளை அறியாமலேயே அவளை உற்றுப்பார்ப்பான். அவன் தன்னைப்பார்க்கிறான் என்பதை உணர்ந்ததும் அதனைக் காட்டிக்கொள்ளாது புத்தகத்தைப் பார்ப்பாள், அவள்.

அவன் காதலிக்கத் தகுதியற்றவன், ஒருபோதும் காதலிக்க மாட்டான்.

'இல்லை, அண்ணை! நிச்சயமாக இல்லை, ஒரு போதும் அப்படிச்செய்யமாட்டேன்!'

பரிமளா அவனுக்கொரு சாரதா, ஈஸ்வரி.

பரிமளா ஒரு நாள் கேட்டாள்.

'மாஸ்ரர், ஒன்று கேட்பேன். கோபிக்க மாட்டீர்களே?'

அவனுக்கு ஒருகணம் 'திக்' கென்றது. என்னத்தைதக் கேட்கப் போகிறாள், இச் சிறுமி?

'என்ன, பரிமளா?'

'நீங்கள் எப்போது கலியாணம் செய்யப் போகிறீர்கள், மாஸ்ரர்?'

அவன் இனிச் சிந்திக்க வேண்டிய வினாத்தான் அதனைப் பற்றி அவன் சில வேளை சிந்தித்துமிருக்கிறான், தனிமையுணர்வு கசக்கத்தான் செய்கிறது.

'என்ன மாஸ்ரர், பேசாமலிருக்கிறீர்கள்!'

'எனக்கு ஒரு தங்கச்சி இருக்கு. பரிமளா! அவளுக்குக் கலியாணம் முடிந்ததும்...'

பரிமலா சிறிது நேரம் பேசாதிருந்தாள். அவனது மன வெளியிலே எதிர்கால வாழ்வின் இனிய நினைவுகள் குவிந்தன. யாரோ ஒருத்தியுடன் கைகோர்த்து நடப்பது போன்றும், யாரோ ஒருத்தியின் மடியில் தலை சாய்த்துப் படுத்துத் துயில்வது போன்றும்... இனிய ரோசாவின் மணத்துடன் நினைவுகள் கவிந்தன. ஒருத்தியின் கைகளில் தன்னைப் பரிபூரணமாக ஒப்படைத்து விடுவதில் தான் உலக வாழ்வின் அர்த்தமே இருக்கிறது.

'மாஸ்ரர்!' என்று பரிமளா மெதுவாக அழைப்பு விட்டாள். அவன் நிமிர்ந்தான்.

'உங்களுக்கு எத்தனை வயது, மாஸ்ரர்?'

'இருபத் தெட்டு!'

'எனக்குப் பதினைந்து' மாஸ்ரர்!'

அவன் கூறியதை அவளால் நிரணிக்க முடியவில்லை. அவளைப் பற்றிய எதுவித தப்பெண்ணமும் அவனுக்கு இல்லை.

—மெயில் விரைந்து கொண்டிருந்தது. நடுவானத்திற்கும் அடிவானத்திற்குமிடையே, சற்று நடுவானப்பக்கமாக நிலவு தொங்கிக் கொண்டிருந்தது. அவன் யன்னலில் முழங்கை பதித்து உள்ளங்கையில் நாடியை நாட்டி, சற்று நிமிர்ந்த நிலவினைக் கண்களால் மேய்ந்தான். உலர் காட்டு மரங்கள் நிலவுக் கதிர்களில் குளித்தன.

அழவேண்டும் போல இருந்தது.

அவன் மகிழ்வோடு கடைசியாக இந்த மெயில் பிரயாணம் செய்த அந்நாள்; உண்மையில் மகிழ்ச்சிதான் அன்று.

அன்றுதான் இனிய வாழ்வின் ஆரம்பம் என்று நினைத்தான்; அதுதான் முடிவாய் அமைந்தது. அந்நாள்—

திடீரென அவனைத் தேடி அண்ணர் மட்டக்களப்பிற்கு வந்திருந்தார்.

கல்லூரி விட்டு வீடு திரும்பியபோது, அவன் அறையில் அவர் அமர்ந்திருந்தார். குள்ளமான உருவம்; நாகலிங்கத்திலும் பார்க்க உயரம் குறைந்தவர், முகத்திலிருந்த அடர்த்தியான மீசையும், சற்றுச் சிறுத்திருக்கும் இடது கண்ணும் முதலில் பார்ப்பவரை அவர் மீது அபிமானம் கொள்ள வைக்கா. ஆனால், அவர் பேசினால், முதல் அபிப்பிராயம் மாறி விடும்,

'எப்போது வந்தீர்கள்? வந்து கனநேரமா?'

அண்ணர் தம்பியைப் பார்க்காமல் பதில் கூறினார்!

'கொஞ்ச நேரந்தான்...'

எப்படி இடம் கண்டு பிடித்தீர்கள்?'

'விலாசம் இருந்ததே...'

அண்ணர் ஏதோ ஒரு விதமாகப் பேசுவதுபோல அவனுக்குப் பட்டது. பெரும் பிழையைச் செய்துவிட்ட ஒருவன், அதை மறைக்க ஏதேதோ பேசுவானே, அப்போது ஒரு வித பதட்டம் இருக்குமே, அதைப் போல,

நாகலிங்கம் தொடர்ந்தான்!

'ஏதாவது அலுவலாக வந்தீர்களா?'

'உன்னிடம் தான்... தங்கச்சிக்கும், உனக்கும் ஒரு மாற்றுச் சடங்கிற்கு ஒழுங்கு செய்திருக்கிறோம்.... மாப்பிள்ளைக்கு ஈசுவரியைப் பிடித்துக் கொண்டுது, நாளும் வைத்து விட்டோம்...

அவன் எதிர்பாராத செய்தி தான் ஈஸ்வரிக்கும், அவனுக்கும் மாற்றுக் கலியாணமா? அண்மைக் காலங்களில் தனது கலியாணத்தைப் பற்றி அவன் அடிக்கடி சிந்தித்தது உண்மைதான்; ஒருத்தி அன்புடன் சமையலிட்டு சுவையுடன் தருவதையே அவன் இப்போது விரும்பினான். ஒருத்தியுடன் வெளியே உலாவி வர அவன் மனம் இப்போதெல்லாம் விழைகின்றது. உண்மைதான்;

'என்ன கதையாமல் இருக்கிறாய்? மாற்றுச் சடங்கில் உனக்கு விருப்பமில்லையா?...

'அப்படியில்லை... உங்களுக்கு விருப்பமென்றால் எனக்கும் சரிதான் தங்கச்சிக்காக அப்படிச் செய்வதில் எனக்கு மகிழ்ச்சியே, எந்த ஊரிலே பேசியிருக்கிறியள்...'

'வண்ணார் பண்ணையில்...! அடுத்த கிழமை நாள் வைத்துள்ளோம், கலியாண எழுத்து, கலியாணம் எல்லாவற்றையும் ஒன்றாக வைக்கிறது தான் நல்லது. செலவும் குறைவு ...'

வெளியே நாயொன்று குலைத்தபடி ஓடியது அவன அறை யன்னலூடாக வெளியே பார்த்தான்;

கொய்யாமரக் கெவரில் பரிமளா அமர்ந்திருந்தாள். அவளுடைய கால்கள் மெதுவாக ஆடின. ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்.

'பரிமளாவிற்கு இது தெரிந்தால், சந்தோஷப் படுவாளோ?'

'உதார்...?' என்று அண்ணர் வினவினார்.

பரிமத்தா... இந்த வீட்டுக் காரரின் மகள்... அது சரி அப்படி யென்றால் நான் இப்பவே லீவு எடுத்துதுக் கொண்டு வரவேண்டுமா?...'

வேகமாக அண்ணர் குறுக்கிட்டார்!

'தேவையில்லை... எல்லாத்தையும் நாங்கள் கவனிக்கிறோம்... நீ முதல் நாள் வந்தால் போதும்.' முதல் நாள் அவன் மெயிலில் இன்ப நினைவோடு பயணம் செய்தான்; அதுதான் அவனது மகிழ்ச்சியான கடைசிப் பிரயாணம்.

செல்லப்பர் கூறி அனுப்பினார்!

'தம்பி! நீர் என் மூத்த மகன் போல... கலியாணம் செய்து கொண்டு மட்டக்களப்பிற்கு வரும்போது எங்களோடேயே தங்க வேண்டும்...'

அப்போது பரிமளாவின் வின் முகமேன் வாட வேண்டும்? அவள் கஷ்டப்பட்டு எங்கோ வெறிக்கப் பார்த்தது போல அவனுக்கு நினைவு வருகின்றது.

அவனுடைய கலியாணம் பற்றிய பேச்சு வரும் வேளையில் எல்லாம் பரிமளா அவ்வாறுதான் நடந்து கொண்டாள் போலிருக்கிறது. உண்மைதான். அவள் முகம் கருகிப் போய் வெறிக்க எங்கோ பார்க்கத்தான் செய்திருக்கிறாள்.

அது ஒரு சுவையான நினைவுதான்.

அவனோடு சுகந்திமலர் என்னொருத்தி ஆசிரியையாக இருக்கிறாள். நல்ல கௌரவமானகுடும்பத்தைச் சேர்ந்தவள். முதலில் அவள் அக்கல்லூரியில் கடமையாற்றத் தொடங்கிய போது சுகந்திமலரோடு எவ்வித உறவும் இருக்கவில்லை. காலகதியில் சுகந்திமலர் அவனோடு சகசமாகப்பழகத் தொடங்கினாள். இருவருக்கும் எப்படி முதலிற் பேச்சு வார்த்தை தொடங்கியது என்பது அவனுக்கு நினைவில்லை.

நினைவில் நிறுத்த வேண்டியளவிற்கு அவள் அவனைப் பொறுத்த மட்டில் முக்கியத்துவம் பெறவில்லை. ஒரு நாள் செல்லப்பர் சாப்பிடும் போதுதான் கூறினார்.

'தம்பி, உம்மோடை சின்னத்துரையற்றை மகள் சுகந்திமலர் படிப்பிக்கிறாவே?'

அவன் அவரைக் கேள்விக் குறியோடு நிமிர்ந்து பார்க்க அவர்தொடர்ந்தார்! 'ஒன்றுமில்லைத்தம்பி' உம்மிலை அவளுக்கு ஒரு விருப்பம் போலவிருக்கு. அவவுடைய தகப்பன் என்னிடம் உம்மைப்பற்றிக்கேட்டார்.'

நாகலிங்கம் கலகலவென நகைத்தான். சுகந்தமலருக்கு இப்படி ஒரு எண்ணம் இருக்குமென்று அவனுக்குத் தெரியாது. பாவம், நல்ல பெண்.

அவன் சாப்பிட்டுவிட்டு அறைக்குப் போகும் போது பரிமளாவும் பின்னாலேயே வந்தாள்.

'மாஸ்ரர்!' என்றுமில்லாத ஒருவகைப்படபடப்பு அவள் குரலில் தொனித்தது. அவன் அவளைப் பார்த்தான். அவள் உடல் மெதுவாக நடுங்குவது போலத் தெரிந்தது. முகமெல்லாம் வியர்த்து வழிந்தது. கண்கள் எதையோ யாசித்தன.

'என்ன, பரிமளா?'

மௌனம் சாதித்தாள், அவள். தலைகவிழக் கூறினாள்!

'அது உங்களுக்குச் சரியில்லை, மாஸ்ரர்! முந்தி ஆரையோ காதலிச்சவ...' இதைக் கூறுவதற்குள் அவள் பட்டபாடு.

'எனக்குத் தெரியும், பரிமளா! நானென்ன அவளைக் கலியாணம் செய்யவா போறன்?'

பரிமளா நிமிர்ந்து நோக்கினாள். அவள்முகத்தில் செந்தாமரை மலருமா?

கட்டிலில் விழுந்த போது பரிமளாவின் செயல்கள் தாம் நினைவில் எழுந்து மோதின. 'பரிமளா, ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள்? என்னில் அவ்வளவு அன்பா?'

அவன் எவரையும் காதலிக்கமாட்டான். பெற்றோரின்விருப்பப்படிதான் மணம்பான். சுகந்திமலர் எம்மாத்திரம்?

அவளை அவன் விரும்பாமைக்குக் காரணம் முன்பு யாரையோ காதலித்தவள் என்பதா? இல்லை. நாகலிங்கம் அதற்காக ஒருபோதும் ஒருத்தியை வெறுக்கமாட்டான்.

ஒருத்தியை ஒருவன் விரும்புவதும், ஒருவனை ஒருத்தி விரும்புவதும் இயற்கையின் தேவையும் நியதியுமாக இருக்கும் போது யாரில் பிழை கூறுவது? காதலிப்பவர்கள் எல்லாரும் மணம் செய்கின்றார்களா? வேறுபட்ட மனவுணர்வுகளும், சமூகக்குறுக்கீடுகளும் தடைகளாகநிற்கும் போது காதல் தோல்வியில் முடிவதும் நியதியாகி விட்டது. உணர்வுகள் காதலின் தோல்வியோடு அழிவதில்லை; அதன் பின்பே ஆரம்பமாகின்றன. காதலில் ஏமாந்தவள் குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றவளல்லள் என்று எப்படிக் கூறமுடியும்?

அவனுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது! உடல் வளர்ந்த நிலையிலே எவரும் தவறிழைக்கவே செய்கின்றனர், தவறு ஒரு முறையாயின் மன்னிக்கக் கூடியதே.

சுகந்திமலரும் அத்தகைய ஒருத்தியாக இருக்கலாம் அவனேன் அவளைப் பற்றி எண்ண வேண்டும்?

- பரிமளா மென்குரலில் பாடுவது கேட்டது. அவன் அப்படியே தூங்கிப் போனான்.



# 'மீண்டும் வருவேன்'

—o—

## ஈழத்தவருக்கு ம.பொ.சி. செய்தி

"இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்காக குறிப்பாக வம்சாவழித் தமிழர்களுக்காக இந்தியாவில் என்னால் செய்யக் கூடிய பணி ஏதாவது இருக்குமேயானால் அதனைக் குறைவின்றிச் செய்வேன் என்பதை தங்கள் ஏட்டின் வாயிலாக இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு கூறி மீண்டும் இலங்கை வருவேன் என்பதையும் தெரிவித்துக் கொண்டு விடை பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்" என்று கடந்த 8-8-66-ம் திகதியன்று இரத்மலானை விமான நிலையத்தில் வைத்து நமது நிருபரிடத் கூறிய பிரியாவிடைச் செய்தியில் தமிழகம் தமிழரசுத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானக் கிராமணியார் தெரிவித்தார்.



சுதந்திரன் மூலம் ஈழமக்களுக்கு விடுத்த விசேட பிரியாவிடைச் செய்தியில் அவர் கூறியிருப்பதாவது:

'எனது இலங்கை வருகை வெற்றிகரமாக முடிந்ததாகவே நான் நம்புகிறேன். வடக்கு மாகாணத்துக்கு செல்லாதது ஒருகுறைதான். உடல் நலக்குறைவே அதற்குக்காரணம். இம் முறை பெரும்பாலும் மலையகத்திலேயே சுற்றுலா செய்தேன். இதனால் மலையகத்தில் வாழும் தமிழர்களின் பிரச்சனைகளை அதிக அளவில் அறிந்து கொள்ள முடிந்தது.

'இந்திய வம்சாவளியினரின் எதிர்காலம் மகிழ்ச்சி தருவதாக இல்லை என்பதை முன் எப்போதையையும் விட இலங்கை வந்துள்ள இப்போது அதிகமாக உணர்கின்றேன். இந்திய - இலங்கை அரசாங்கங்கள் அந்த மக்களிடம் கருணை காட்டி தங்களுக்குரிய கடமையைசெய்ய வேண்டும் என்றும் கருதுகிறேன்.

'பொதுவாக ஈழத்தமிழர்களின் எதிர்காலம் சிறந்து விளங்க வேண்டுமென்பது எனது பிரார்த்தனை. தமிழர்கள் - சிங்களவர்கள் ஆகிய இரு இனத்தவரிடையேயும் தோன்றியுள்ள மொழிப் பிரச்சனை, பிரதேச உரிமைப் பிரச்சனை பரஸ்பர நல்லெண்ணத்துடன் சமரசமாகத் தீர்க்கப்படுமென்றே இன்னமும் நம்புகின்றேன். அதற்கான சூழ்நிலை உருவாகி வருவதாகவும் உணர்கின்றேன்.

'இந்திய வம்சா வழியினர் ஒன்றுபட்டு உழைத்தால் தோட்டத் தொழிலாளரின் அவல நிலை நீங்குவதுடன் கட்டாய வெளியேற்றத்தை தடுக்கவும் இன்னும் வாய்ப்பிருப்பதாகவே நான் நம்புகிறேன். அப்படியே ஈழத்தமிழர்களும் ஒரு கொள்கையின் கீழ் ஒன்றுபட்டு முன்னேற முயன்றால் எதிர்காலம் அவர்களின் கையிலேயே இருக்கும்.

'மீண்டும் இலங்கை வரும் வாய்ப்பை, இறைவன் அருள்வானென்றே நம்புகிறேன். இலங்கை தமிழர்களுக்காகவும் குறிப்பாக இந்திய வம்சா வழியினருக்காகவும், இந்தியாவில் என்னால் செய்யக்கூடிய பணி ஏதாவது இருக்குமேயானால் அதனைக் குறைவின்றிச் செய்வேன் என்று கூறி விடை பெற்றுக் கொள்ளுகிறேன்.

# சிங்கள மக்களின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கிறேன். (Queyroz) எழுதிய 'The Temporal and Spiritual Conquest of Ceylon' என்ற நூலின் முதற் பகுதியன் 50-ம் பக்கத்திலிருந்து சில பகுதிகளைப் படித்துக் காண்பித்தார்.)

### தமிழர் தாயகம்

'இந்நூலின்படி யாழ்ப்பாண அரசு என்பது திருகோணமலைவரை நீண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இதே போன்று ருய[illegible] ஆசிய சஞ்சிகையிலிருந்து மட்டக்களப்பு பன்னமப்பகுதியும் தமிழர் பரம்பரைப் பகுதியென்பதை நிலைநிறுத்த முடியும்.

'நாம் அதிக தூரம் செல்லத் தேவையில்லை. இந்த நாட்டிலே வாழ்கின்றோம். இந்த நாட்டுப் பிரசைகள் நாங்கள். நாம் தமிழைப் பேசுகிறோம். தொடர்ந்தும் பேசுவோம். நாம் தனித்தன்மையுடன் வாழப் போகின்றோம். நாம் பிறநாட்டு ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாக கூறுகிறார்கள், அது முற்றிலும் தவறு. இந்திய தி. மு. கழகத்துடன் எமக்கு எந்தவகையிலும் தொடர்பு கிடையாது.

### கல்முனை மாநாடு

'இச் சந்தர்ப்பத்தில் திரு. கரணகொடாவின் மற்றுமொரு கேள்விக்கும் விளக்கம் கூற விரும்புகிறேன். கல்முனை மாநாட்டில் நாம் ஏன் தேசியக் கொடியை பறக்க விடவில்லை என்பது அவரது கேள்வி. மட்டக்களப்பிலிருந்து கல்முனை வரை பிரதமர் செல்லும் பாதைகளிலிருந்த 40 பந்தல்களிலும் தேசியக் கொடி பறந்தது. மாநாட்டில் தேசியக் கொடியைப் பறக்க விடுவது நமது வழக்கமல்ல. எம்மிடம் கட்சிக் கொடி இருக்கிறது. இது எமது வழமையான கொடி.

'எம்மிடம் ஒரு கொடியே உண்டு. அதுதான் தமிழரசுக் கொடி. அதைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள். பிரதமர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. 100,000 மக்களால் பிரதமர் வரவேற்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். இத்தனைக்கும் கல்முனை 20,000 மக்களைக் கொண்ட பட்டினமாகும்.

'கிழக்கு மாகாணம் முழுவதுமே நாட்டை ஒன்றுபடுத்திய பிரதமரை வரவேற்கத் திரண்டு நின்றது. அவரின் பணியின் சிறப்பால் சகல இன மக்களும் அவரை வரவேற்றார்கள். அங்கு திரண்டு நின்றவர்களில் 40 விழுக்காட்டினர் முஸ்லிம்கள் என்பதை இங்கு திரு. ஹமீம் இல்லாத போதிலும் அவருக்குக் கூறி வைக்க விரும்புகிறேன்.

'நான் எனது உரையை முடிக்க முன் எதிர்க்கட்சியினரின் திருத்தங்களை நிராகரிக்குமாறு இச் சபையைக் கேட்டுக் கொள்வதுடன், நாம் இங்கு தொடர்ந்திருப்போம் மீண்டும் வாக்காளரின் ஆதரவைப் பெற்று வருவோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன்."

அனைவருக்கும்
எமது இந்திய சுதந்திரதின வாழ்த்துக்கள்

சாரதாஸ்

196, மெயின் வீதி, கொழும்பு-11.
யோர்க் வீதி, கொழும்பு-1.
தொலைபேசி: 2740

## வெற்றி முரசு கொட்டும் 3வது வாரம்!!



| | | |
|---|---|---|
| எம்பயர் (கொழும்பு) | செல்லமகால் (கொழும்பு) | வின்சர் (யாழ்ப்பாணம்) |
| இம்பீரியல் (மட்டக்களப்பு) | நெல்சன் (திருமலை) | கிங்ஸ் (பதுளை) |

**சிவாஜிகணேசன், சாவித்திரி, தேவிகா, முத்துராமன்,**
நாகேஷ் கே. பி. சுந்தராம்பாள், டி. ஆர். மகாலிங்கம்,
டி. எஸ். பாலையா, மனோரமா, ஜி. சகுந்தலா, சம்பந்தம்,
சாரங்கபாணி, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்

# திருவிளையாடல்

(ஈஸ்ட்மன் கலர்)

**7வது வாரம்!! கெபிட்டல் திரையில்**
**எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி**
நடித்த


# "பூமாலை"

**எம்பயர் தியேட்டரில்**

50 அல்லது மேற்பட்ட பாடசாலைப் பிள்ளைகள் கொண்ட கோஷ்டியினர் எந்தவகுப்பிற்கும் ரூபா 1/10 விசேட சலுகைக் கட்டணத்தில் அனுமதிக்கப் படுவர்.

**இரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்று ஏறுநடை போடும் 3-வது வெற்றி வாரம்!**
**அவள் துன்பத்துக்கோர் எல்லையுண்டோ என ஏங்கி நின்றாள்...**
**ஈற்றில் துன்பத்தின் எல்லையிற்தான் இன்பம் என்றாள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சென்ட்ரல் (மருதானை) | | | ஈரோஸ் (பமன்கடை) | |
| றாணி (யாழ்ப்பாணம்) | ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) | ஜோதி (திருகோணமலை) | ஓடியன் (கண்டி) | சிகிரி (பண்டாரவளை) | லிபேர்ட்டி (ஹட்டன்) |



சித்ரா
புரொடக்சன்ஸாரின்

# சித்தி

திரைக்கதை வசனம்-டைரெக்ஷன்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

திரையுலகத் தாரகை
பத்மினி

காதல் மன்னன்
ஜெமினிகணேசன்

எம். ஆர். ராதா முத்துராமன், விஜயநிர்மலா, புதுமுகம் விஜய ஸ்ரீ
நாகேஷ், வி. கே. ராமசாமி, குழந்தை நட்சத்திரம் ராணி
ஆகியோர் திறம்பட நடித்தது.

இசை: மெல்லிசை மன்னன் எம். எஸ். விஸ்வநாதன். பாடல்கள்: கவியரசு கண்ணதாசன்.

வார நாட்களில் குளிர்மை ஊட்டப்பெற்ற லிபர்ட்டியில் (கொள்ளுப்பிட்டி)
காலை 10, மணிக்குக் காண்பிக்கப்படும்.

பெண்ணினம் போற்றிவரும் பொன்னோவியம்!
இன்றே குடும்பத்தோடு சென்று பார்த்து மகிழுங்கள்!

## விரைவில் எதிர்பாருங்கள்!



| | |
|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) |
| நவா (கும்பனித்தெரு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) |
| விஜயா (மட்டக்களப்பு) | சிறீகிருஷ்ணா (திருமலை) |
| விஜிதா (அட்டன்) | மொடர்ன் (பண்டாரவளை) |

# பழநி

திரைக்கதை, டைரக்ஷன்: **பீம் சிங்**
இசை: **விஸ்வநாதன் ராமமூர்த்தி**
பாடல்கள் **கண்ணதாசன்**
வசனம்: **சோலைமலை**

சிவாஜி கணேசன், எஸ். எஸ். இராசேந்திரன், முத்துராமன், எம். ஆர். ராதா,
டி. எஸ். பாலையா, ஸ்ரீராம், தேவிகா, நாகேஷ், புஷ்பலதா, ஆகியோர் நடித்தது

**3 வது வாரம்**
**கெப்பிட்டல்**
(கொழும்பு)



**"சன் ஆவ் இந்தியா"**
(இந்தி)
**சினிமாஸ்கோப்**
**ஈஸ்மன் கலர்**



இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1966-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ஜே. ஆர். வடபகுதிக்கு விஜயம்

## பொ. கட்சி....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம் அவர்களே இன்றுவரை இந்துப் பல்கலைக்கழகத்தை ஆதரிப்பதாக ஒரு வார்த்தை கூற வில்லை. இந்த நிலையில் சிங்களக் கட்சிகள் அதைத்தும் ஆதரிப்பதாக திரு. ஜீ ஜீ. பொய் மூட்டைகளை அவிழ்த்துவிடுகிறார். இந்துப்பல்கலைக்கழகம் பற்றிய அவரின் ஏனைய வாதங்களுக்கு ஏற்கனவே பல கடவைகள் இப்பத்திகளில் விளக்கம் கூறியிருப்பதால் நாம் மீண்டும் அதுபற்றி ஆராயத் தேவையில்லை.

வட்டமேசை மாநாடு பற்றியும் மீண்டும் பிரஸ்தாபித்திருக்கிறா திரு ஜீ.ஜீ. அவரே பாராளுமன்றத்தில் [Hansard 1181, 1182 — 26-1-66; (சுதந்திரன் 12-2 66 முதற் பக்கம்)] வட்டமேசை மாநாடு பிரச்சினையைத் தீர்க்காது என்று கூறிய பின்னர் மீண்டும் அது வேண்டுமென்று கூறுவது உமிழ்ந்த எச்சிலை மீண்டும் உண்பது போன்று இருக்கிறது. இப்பிரச்சினை பற்றியும் இப்பத்திகளில் நாம் பலமுறை விளக்கியுள்ளோம்.

பொருளாதார அபிவிருத்தி பற்றியும் இக்கூட்டங்களில் பேசப்படுகிறது. யாரை ஏமாற்றத் திரு. ஜீ. ஜீ. முற்பட்டிருக்கிறார்? இராசாங்க அமைச்சர் சில மாதங்களுக்கு முன்னர் வட மாகாணப் பிரதிநிதிகளை அழைத்து வட மாகாண அபிவிருத்திக்குத் திட்டம் சமர்ப்பிக்கும்வண்ணம் கேட்டபொழுது திரு. ஜீ. ஜீ. கொடுத்த திட்டம் தான என்ன? மலசலகூடம் கட்டப் பணமும், முடிக்குரிய காணியை வீடு கட்டுவதற்கும் கொடுத்தால் போதும் என்று திட்டம் சமர்ப்பித்தார் திரு. ஜீ. ஜீ. இன்று ஏதோ தொழிற்சாலைகள் பற்றித் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார் செயல்முறையில் சமர்ப்பிக்க முடியாத திட்டங்களை தீர்மானத்தில் போட்டு என்ன பயன்?

### தமிழ் ஊழியர் பிரச்சினை

இக்கூட்டங்களில் திரு. ஜீ. ஜீ. கூறிய பொய்யுரைகள் பல. அரசாங்க ஊழியர் பற்றிய அமைச்சரவைத் தீர்மானங்களுக்குத் தானே காரணம் என்று கூறியிருப்பதுடன் இதுபற்றிச் சில தீர்மானங்களையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழ் அரசாங்க ஊழியர்கள் ஜீவமரணப் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கையில் திரு. ஜீ. ஜீ. மக்களை மறந்து "கலை கலை"யாகப் மணம் உலமுத்துக்கொண்டிருந்தார். பிரபல வழக்கறிஞர் என்று கூறிக்கொள்ளும் திரு. ஜீ ஜீ. அரசாங்க ஊழியர் பிரச்சினையில் உண்மையான அக்கறையிருந்திருந்தால் கோடீசுவரன் வழக்கிற்கு உதவியிருக்கலாம். இன்று கோடீசுவரன் வழக்கின் பிரதம வழக்கறிஞரான திரு. மு. திருச்செல்வம் தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதியாக அமைச்சரவையில் இருக்கிறார். தமிழ் ஊழியர் பிரச்சினையைத் திரு. திருச்செல்வம் புரிந்திருப்பதிலும் பார்க்க வேறு யாரும் தெளிவாகப் புரிந்திருக்கவில்லை. அதுமட்டுமன்றி இப்பிரச்சினையில் அவரை விட வேறு யாரும் கரிசனைகொண்டிருக்கவும் முடியாது. ஆகவேதான் திரு. திருச்செல்வத்தின் பணியில் பெருமை காண திரு. பொன்னம்பலம் இப்பொழுது முற்பட்டிருக்கிறார்.

தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை யிட்டு தமிழரசுக் கட்சி எடுத்தவரும் நடவடிக்கைகள் நாடறிந்ததாகும். ஒவ்வொரு அமைச்சர்களையும் தமிழரசுக் கட்சித் தூதுக்குழு எத்தனை தடவைகள் பேட்டி கண்டிருக்கிறது! எத்தனை மாநாடு நடத்தியிருக்கிறது என்பதை நாடு அறியும். எத்தகைய முயற்சியும் எடுக்காது அமைதியாக இருந்துவிட்டு பாராளுமன்றத்தில் ஒருசில மணிகள் எதிர்க்கட்சியைத் தாக்கிப் பேசும்பணியை மட்டும் மேற்கொண்டுள்ள திரு. ஜீ. ஜீ. தேசிய அரசாங்கத்தின் சாதனைகளை தனது என்று சொந்தம் கொண்டாட முற்பட்டிருக்கிறார் அவரின் சாதனை ஐ நா. சென்று வந்ததுதான. அதுவும் ஐ. நா. செல்லமுன்னர் நடைபெற்ற முற்றவெளிக் கூட்டத்தில் "தமிழர் பிரச்சினை பற்றி ஐ. நா. வில் பேசுவேன்" என்று பொய் கூறிச் சென்றார்.

காலனித்துவ கால அரசியல் வாழ்க்கை நடாத்தும் முதலாளி திரு. ஜீ ஜீ யால் தமிழர் பிரச்சினை பற்றித் தூது செல்லவும், பேட்டி காணவும், மாநாடு நடத்தவும் முடியும் என்று நாம் எதிர்பார்ப்பது தவறுதான். அவர் 'பெரிய மனிதர்' இச் சிறு வேலைகளை அவர் செய்யக்கூடாது. பொய்யும்பேசக் கூடாது. தேசிய அரசாங்கத்தினது (தமிழரசாரின் சாதனை என்று கூறத் தேவையில்லை. காரணம் தமிழரசுக் கட்சியில்லாமல் தேசிய அரசாங்கம் இல்லை) சாதனைகளை தனது சாதனை என்று கூறுவதை இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

### மாநாட்டு மரபு

நடைபெற்றது பொ. கட்சி மாநாடு என்று அவர்கள் கூறுவதால், மாநாடு எப்படி நடத்துவது என்பதைப் பற்றியும் சில வார்த்தைகள். மாற்றுக் கட்சிகளைத் தாக்குவது பணியல்ல. வேண்டுமானால் கட்சிப் பிரச்சாரக்கூட்டங்களில் அதைவைத்துக் கொள்ளலாம். மாநாடு என்பது கட்சியின் கடந்தகால சாதனைகளை உண்மையின் வழிநின்று விரித்துரைப்பதற்கும் எதிர்கால திட்டத்தை வகுத்து தெளிவுபடுத்துவதற்கும் பயன்படும்ஒன்றாகும். கடந்த கால சாதனைகள் இல்லாவிட்டாலும் எதிர்கால திட்டங்களையாவது (ஏட்டளவிலாவது) விளக்கலாம். உண்மையான மக்கள் கட்சிக்கு மாநாட்டில் மாற்றுக்கட்சிகள் மீது வசைபாட நேரம் இருக்காது. எனவே மாநாடு என்று ஒன்றை கூட்டினால் சற்று கண்ணியத்துடன் நடந்து மாநாடு என்பதன் மரபைக் காப்பாற்றும் வண்ணம் திரு. ஜீ. ஜீ அவர்களை விநயமாக வேண்டுகிறோம்.

## தங்கம் எங்கே?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிக்க அகலை நன்கொடையாகக் கொடுப்பதாகவும் அறிவித்திருந்தார். இது நடந்து ஒரு வருடமாகிவிட்டது. இது வரை தொழிற்சாலை உருவாகவுமில்லை. மாலைக்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது. மக்கள் பலரும் விபரமறிய கடந்த 7, 8, 9 ம் திகதிகளில் யாழ்ப்பாணப் பகுதியில் ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டார்கள். மாலை பற்றிய விபரத்தை அறிய நமது நிருபர் முயன்றதாகவும் ஆனால் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் எழுதியுள்ளார்.

## தமிழரசு வாலிபர் மாநாட்டில் கலந்து கொள்வார்

இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எதிர்வரும் 23ம் திகதி முதல் தடவையாக வடக்கே செல்கிறார். இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியினரின் 11வது மாநாட்டில் கலந்துகொள்ளும் வண்ணம் வாலிப முன்னணியினர் விடுத்த அழைப்பை ஏற்றே இராசாங்க அமைச்சர் இவ் விஜயத்தை மேற்கொள்ளவிருக்கிறார். காங்கேசன் துறைத் தொகுதியிலுள்ள மாவிட்டபுரம் என்னுமிடத்தில் நடைபெறும் இம் மாநாட்டில் தமிழ் நாட்டு இலக்கியப் பேச்சாளர்கள் சிலரும் கலந்து கொள்வார்கள் என்று தெரிகிறது.

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியினரின் 11வது தேசிய மாநாடு இத்திங்கள் 21, 22, 23ம் திகதிகளில் காங்கேசன் துறையில் உள்ள மாவிட்டபுரம் என்னும் இடத்தில் நடைபெறவிருக்கிறது. இலக்கிய மாநாடு, தொழிலாளர் மாநாடு, அரசியல் மாநாடு என்று மூன்று பிரிவுகளாக இம்மாநாடு நடைபெறும். இலக்கிய மாநாட்டில் தென்னிந்திய தமிழறிஞர்கள் இருவர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலக்கிய மாநாட்டில் வட-கிழ மாகாணங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களுடன் மலையக எழுத்தாளர்களும் கலந்து கொள்வார்கள்.

தொழிலாளர் மாநாட்டில் மொழிவழித் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் அரசியல் மாநாட்டில் தமிழரசுத் தலைவர்களுடன் இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தம்பதிகள் கலந்து கொள்வார்கள். தேசிய அரசாங்க அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் திரு ஜெயவர்த்தன முதல்தடவையாக யாழ்ப்பாணம் செல்கிறார். அவருடன் வேறு சில எம். பி.களும் செல்வார்கள் என்று தெரிகிறது.

மூன்றாம் நாள் நிகழ்ச்சியான அரசியல்மாநாடு காங்கேசன்துறைப் பட்டினசபை முன்றலில் நடைபெறும். இம் மாநாட்டையொட்டி சைக்கிள் ஊர்வலம் ஒன்றும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொ. கட்சி கூட்டத்துக்கு சென்ற அமைச்சர்கள் சிலர், நயினாதீவிலுள்ள நாகதீபத்துக்குச் செல்ல முடியாது போனது குறித்து கருத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் தமிழரசு வா. மு. மாநாட்டில் கலந்துகொண்ட பின்பு நாகதீபத்துக்கு செல்ல விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

## இறுதிச்...

(III-ம் பக்கத் தொடர்ச்சி)

செயல்படுத்தினவர்கள் இந்தியப் புரட்சிவீரர்களே!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கலைத்து விடுவதற்காக நான் பிரதமராகவில்லை' என்று சர்ச்சில் அன்று 'ஜம்பம்' அடித்துக்கொண்டாலும், ஆகஸ்டு போராட்டமும், யுத்தமுடிவில் ஏற்பட்ட நிலைமையும் வெள்ளையர் ஆட்சி இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தின.

இந்திய சுதந்திரத்தின் விளைவு இலங்கையிலும் எதிரொலித்தது. இந்தியாவுக்குச் சுதந்திரம்வழங்கப்பட்ட பின்னர் இலங்கையைக் கட்டியாள முடியாதென்பதை பிரிட்டிஷ் ஆட்சியாளர் உணர்ந்தனர். இந்தியா சுதந்திரம் பெற்றதும், அதன் தாக்கம் இலங்கையைக் கடுமையாகப் பாதிக்குமென்பதையும் அதன் விளைவாக இலங்கையின் அடிமை விலங்கு நொறுங்குமென்பதையும் அறிந்த பிரிட்டிஷார் இலங்கைக்கும் டொமினியன் அந்தஸ்தை (பூரண சுதந்திரத்திலும் குறைவானது) வழங்க முன்வந்தனர்.

கத்தியின்றி இரத்தமின்றி மிக எளிதாக இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததற்கு யார் என்ன காரணத்தைக் கூறினாலும் இந்திய சுதந்திரம்—குறிப்பாக 'வெள்ளையனே வெளியேறு!' இயக்கமே அடிப்படைக் காரணமாகும். இந்தியச் சுதந்திரத்தின் மீதே இலங்கைச் சுதந்திரம் தங்கியுள்ளதென்பதும் இந்தியா அடிமைப்பட்டால் இலங்கையும்அடிமைப்படும் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

—:0:—

## வேலூரில்...

(IV-ம் பக்கத் தொடர்ச்சி)

10-7-1806-ம் நாள் நடைபெற்ற இவ்வேலூர் கலவரம் 29-3-1857-ல் நடைபெற்ற பெரும் சிப்பாய்க் கலவரத்திற்கு ஒரு ஒத்திகை என்ற ஒரு வரலாற்றாசிரியரின் கூற்று முற்றிலும் பொருத்தமானதாகும் அன்னிய ஆட்சியை எதிர்த்து முதலில் கிளர்ந்தெழுந்தவன் தென்னாட்டான். இந்த உண்மையை யார் திரை போட்டு மறைத்த போதிலும், வேலூர்க்கலவரப் பற்றிய சிறு வரலாற்றுக் குறிப்பு என்றும் உண்மையை உலகுக்கு உணர்த்திக் கொண்டே இருக்கும். முதற் கிளர்ச்சி தென்னாட்டில் தோன்றியதற்கு காரணம் உண்டு. தென்னாட்டு மக்கள் பாரம்பரிய வாழ்க்கை முறையைக் கொண்டவர்கள். அவர்களின் நாகரிகப் பண்பாடு பழமையானது. அதற்கு எதிரான ஒன்று திணிக்கப்படும் நேரத்தில் கிளர்ச்சி தோன்றுவது இயற்கையே.



# கட்டப்பொம்மன் முதல் காந்திஜி வரை

18-8-1798: பாஞ்சாலங் குறிச்சியில் வெள்ளையரை எதிர்த்து முதல் முழக்கம் துவங்கியது.

16-10-1799: விடுதலை வீரனை கட்டபொம்மன் கயத்தாறு புளிய மரத்தில் தூக்கிலிடப்பட்டான்.

22-10-1801: போரில் புலியான சின்ன மருது தூக்கிலிடப்பட்டான்.

27-10-1801: 'கீழ்த்திசை நிம்மராட்' என்று வெள்ளைத்துரைமார்களே ஏற்றிப் போற்றும் பெரிய மருது தூக்கிலிடப்பட்டான்.

10-7-1806: வேலூரில் திப்புவின் மைந்தர்கள் இந்தியப் படையினரின் உதவி கொண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வேலூர் புரட்சியைத் துவக்கினர்.

29-3-1857: மங்கள பாண்டே லெப்டினென்ட் பங்கைக சுட்டார்.

8-4-1857: மங்கள பாண்டே தூக்கிலிடப்பட்டார்.

10- -1857: மீரத் எழுச்சி

11-5-1857: டில்லி சுதந்திரமடைந்தது.

22-5-1857: அலிகார் சுதந்திரமடைந்தது.

30-5-1857: அயோத்தி சுதந்திரமடைந்தது.

4-6-1857: கான்பூர் சுதந்திரமடைந்தது.

4-6-1857: ராணி ஜான்ஸி போர் துவக்கிய நாள்.

29-7-1857: குமார சிம்மன் போர் துவக்கிய நாள்

30-7-1857: பீர் அலி தூக்கிலிடப்பட்டான்.

24-9-1857: டில்லி ஆங்கிலேயரிடம் மீண்டும் சிக்கியது. நானு ராயன் மறைந்தான்.

26-4-1858: குமாரசிம்மன் உயிர் துறந்தான்.

18-6-1858: ஜான்ஸி ராணி குவாலியரில் எதிரிகளுடன் போரிடும் போது உயிர் நீத்தாள்.

7-4-1859: தாந்தியா தோபே வஞ்சனையால் சிறை பிடிக்கப்பட்டார்.

18-4-1859: மாலை 4-மணிக்கு தாந்தியாதோபே தூக்கிலிடப்பட்டார்.

20-8-1862: நானாவின் மைத்துனன், சுதந்திரப் போரின் கடைசி வீரன் கான்பூரில் தூக்கிலிடப்பட்டான்.

பிப்ரவரி 1883: புரட்சி இயக்கத்தின் முதல்வன் வாசுதேவ பலவந்த பட்கே ஏடன் சிறையில் பிரிட்டிஷாரின் கொடுமையால் உயிர் துறந்தார்.

பெப்: 1885: பஞ்சாபின் புரட்சி வீரர் ராம்சிங் குக்கா பர்மாவுக்கு நாடு கடத்தப்பட்டு உயிர் துறந்தார்.

பெப்: 1857: தாமோதர பற்தசாபேகர் தூக்கிலிடப்பட்டார்

பெப்: 1889: டேவிட்சகோதரர்களைக் கொன்றதற்காக பாலகிருஷ்ண சாபேகரும் வாசுதேவ சாபேகரும், ரானடேயும் தூக்கிலிடப்பட்டனர்.

பெப்: 1899 குதிராம் போஸ், கன்யலால்தத், சுதிநதீரபக ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்

16 ஆக. 1909: கர்ஸன் வைலியை இங்கிலாந்தில் கொன்றதற்காக மதன்லால் திங்ரா தூக்கிலிடப்பட்டார்.

1910 ஆனந்தலட்சுமண் கன்ஹரே, கிருஷ்ணஜி, கோபால் கார்வே, விநாயகராவ் தேஷ்பாண்டே ஆகியோர் கலெக்டர் ஜாக்சனைக் கொன்றதற்காகத் தூக்கிலிடப்பட்டனர்.

5-10-1914: வைஸ்ராய் ஹார்டிஞ்ச்மீது குண்டு போட்டதற்காக மாஸ்டர் அமீர் சந்த், பிஹாரி, குமார் பிஸ்வாஸ், பாயிபால முகுந்த் ஆகிய நான்கு பேர்களும் மரண தண்டனை விதிக்கப்பட்டனர். வாஞ்சி அய்யர் கலெக்டர் ஆஷைச் சுட்டுத் தன்னையும் சுட்டுக் கொண்டார்.

16,17-9-1914: குமாகாட்டமரு என்னும் கப்பலில் தேசபக்திகொண்ட சீக்கியர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் நடந்த சண்டையில் 18 சீக்கியர் மரணமடைந்தனர்.

1914: பகத்சிங், மதன் சிங் இருவரும் சேர்ந்து ஹாப்கின்ஸைச் சுட்டனர் சர்தார் மேவாசிங் தூக்கிலிடப்பட்டார்.

செய்ததற்காக தூக்கிலிடப்பட்டார்கள்.

13-8-1916: கதர் இயக்கத்தை ஆரம்பித்த சுந்தா சிங்கும், காசிராமும் தூக்கிலிடப்பட்டார்கள்.

15-11-1916: லாகூர் சதி வழக்கில் சர்தார்சிங், விஷ்ணுசிங் பிங்ளே, சர்தார ஜகத்சிங், ஹரிநாம்சிங் ஆகியோர். தூக்கிலிடப்பட்டார்கள்.

17-5.1917: இரண்டாவது லாகூர் சதி வழக்கில் பலவந்தசிங், டாக்டர் மதுராசிங், பந்தாசிங் ரங்காசிங், வீரசிங், ஆகியோருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. மொத்தத்தில் இந்த வழக்குகளில் 28 இராணுவத்தினர் மீரத்திலும், டில்லியிலும் தூக்கிலிடப்பட்டனர்.

> 1796ம் ஆண்டில் வெள்ளையருக்கு எதிராக முதற் குரல் கொடுத்தவன் பாஞ்சாலங் குறிச்சி தந்த கட்டபொம்மன். அவனைத் தொடர்ந்து 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் திகதி இந்தியா சுதந்திரம் அடையும் வரை சுதந்திரக் கிளர்ச்சியில் ஆங்காங்கே பலியாகியவர்களின் விபரம் திகதிகளுடன் ஓரளவு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

1915: சுபி அம்பா பிரசாத் வெள்ளைடருடன் பெர்ஷியாவில் போரிட்டு உயிர் நீத்தார்.

16-9-1915: பாலாசூரில் வெள்ளையரோடு நடந்த போரில் யதிந்திர நாத் முகர்ஜி சித்தபரா' சௌத்திரி இருவரும் இறந்தனர்.

16-9-1915: பண்டிட் மோகன்லால் பத், நாராயணசிங், ஹரநாம் சிங் ஆகியோர் பாமாவில் புரட்சி

15-6-1918: நளினி பகச்சி, தரணி மஜூம்தார் ஆகிய இரு பெண்களும், டாக்காவில் போலீசாருடன் போராடும்போது இறந்தார்கள்.

1919: மைனபூர் புரட்சி வீரர் பண்டிட் கந்தாலால் தீஷித் குவாலியர் சிறையிலிருந்து தப்பினர். ஆனால் பிறகு ஆஸ்பத்திரியில் உயிர் நீத்தார்.

1-9-1923: பாபர் அகாலி தல் இயக்கத்தின் தலைவர்களான கர்மசிங், பிஷன் சிங் உதயசிங் மஹேந்திராசிங் ஆகிய எல்லோரும் பொமேலியில் போலீசாருடன் போரிட்டபோது உயிர் துறந்தார்கள்.

12-12-1923: மூந்தேயிரில் போலீசாருடன் போரிட்டுக் கொண்டே பந்தாசிங் உயிர் துறந்தார்

1924: சென்னையிலிருந்து வந்த ராமராஜு பொடாபா என்னுமிடத்தில் இராணுவத்தோடு போரிட்டு உயிர் நீத்தார்.

1924: டேயைக் கொன்றதாக கோபி மோகன்சா தூக்கிலிடப்பட்டார். மீரத் சதி வழக்கு நடக்கும் போது தண்டிராஜ் பந்த தெங்கடி இறந்தார்.

8-6-1924: பாரியாம் சிங்லயால் பூரில் போலீசாருடன் போரிட்டு உயிர் நீத்தார்.

25-6-1925: நன்னுசிங்கின் பாக்கெட்டிலிருந்து குண்டு வெடித்து. ஹார்ட்டன் என்பானும், ஐந்து சிப்பாய்களும் அவரும் இறந்து விழுந்தார்கள்.

27-2-1926: லாகூர் வெடிகுண்டு வழக்கில் ஈடுபட்ட கிஷன்சிங் கட்கஜ், தாம்சிங், சந்தசிங், நந்தசிங், திலீப்சிங் கர்ணசிங் ஆகிய எல்லாரும் லாகூர் மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டார்கள்.

17-12-1927: கோண்டாவில் ராஜேந்திர லஹிரிது தூக்கிலிடப்பட்டார்.

17-12-1927: பைசாபாத்தில் அஸ்பானுள்ளாகான் தூக்கிலிடப்பட்டார்.

19-12-1927: கோரக்பூரில் பண்டிட்ராம் பிரசாத் தூக்கிலிடப்பட்டார்.

(9-ம் பக்கம் பார்க்க)


வந்துற்ற துயர்கள் யாவும் வந்த வழியே பறந்திட இன்றே என் உதவியை நாடுங்கள்!

குறிப்பு: கடிதங்கள் கம்பளை விலாசத்திற்கே எழுதப்படல் வேண்டும்.

ஆலோசனை இலவசம்

| கொழும்பில் சந்திக்கும் நாட்கள் | கல்யாணம் — காதல் | கம்பளையில் சந்திக்கும் நாட்கள் |
|---|---|---|
| செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி | கிரகதோஷம் — கீர்த்தி குடும்பத்தகராறு கூடுதல் லாபம் — கெடுதல் கேடுகள் - கைராசி - கொடிய நோய்கள் கோபதாபங்கள் | ஞாயிறு, திங்கள் |
| முகவரி:- ஸ்ரீ சங்கராஜ ராவத்த, மருதானை, — கொழும்பு-10 | கௌரவ வாழ்வு சம்பந்தமாக கடிதமூலமும், நேரிலும் பயனடைந்தோர் தொகை பல்லாயிரம்! | முகவரி:- 208, கண்டி ரோட், கம்பளை, — போன்: 454 |

அருத எண்ணெய்

பல்லாண்டு காலமாக பல்லாயிரக்கணக்கான பாவனையாளர்களுக்கு பயன் நல்கி வரும் ஒரு அற்புதமான கூந்தல் தைலம்!

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட, ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த எண்ணெய் அறுபதாம் பச்சை எனும் தமிழ் மூலிகையையும், வேறு ஆயுர்வேத மூலிகைகள் நாற்பத்தி நான்கினையும் சேர்மானமாகக் கொண்டது!

உஷ்ணமான உடல் உள்ளவர்களுக்கும், உஷ்ணப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கும் அதிசயிக்கத்தக்க பலன் அளிக்கவல்லது!

இதனை தலையில் தேய்த்த மாத்திரத்தில்...

கூந்தல் அடர்த்தியாகவும், நீளமாகவும் வளரும்.

தலைமயிர் உதிர்வதும், நரைப்பதும் நிற்கும்.

மூளைக்குக் குளிர்ச்சியும், கண்களுக்குப் பிரகாசமும் உண்டாக்கும்.

நீங்காத ஜலதோசமும், பீனிசமும் நீங்கும்.

அதுமட்டுமா?

கண் — தலை — காது — மூக்கு சம்பந்தப்பட்ட சகல வியாதிகளும் குணமாகும்!

தேவை! ஏஜன்஡ி இல்லாத எல்லா ஊர்களிலும் சோல் ஏஜண்டுகள் தேவை. விபரம் கோரி விண்ணப்பிக்கவும்.

தயாரிப்பாளர்: பி. எம். ஸ்ரீசாநாயக்க,

— மகா மாந்திரீக கலாநிதி —

அருத எண்ணெய் தொழிலகம்

கம்பளை. போன்: 454

# இறுதிச் சுதந்திர போராட்டத்தின் மறைமுகத் தலைமை

இன்று இந்தியா அடிமைநாடாக இருந்தால், இலங்கையும் அடிமை நாடாகவே இருந்திருக்கும். இந்தியா சுதந்திரம் பெற்றதால், இலங்கையும் அதனைப் பெற்றது. இந்தியாவுக்கு விடுதலையைப் பெற்றுக்கொடுத்த சுதந்திரப்போராட்டங்களே இலங்கைக்கும் விடுதலையைப் பெற்றுக் கொடுத்தன. ஆதலின் இந்தியசுதந்திரத் தினத்தன்று அடிமைவிலங் கொடித்த பாரதக் கதையை (விடுதலைப்போரின் வீர வரலாற்றினை)ச் சற்று திரும்பிப் பார்த்தல் அவசியமாகும். அதனால் புதிய உத்வேகத்தையும் புத்துணர்ச்சியையும் நாம் பெறலாம்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வரலாறு ஒரு நீண்ட சரித்திரமாகும். 1857ல் பொங்கிய சிப்பாய்க் கலகமே சுதந்திரப்போரின் ஆரம்பத் திப்பொறி. பின்னர், முதலாவது உலக யுத்தம் இறுதிவரையுள்ள காலம் பிரிட்டிஷ்ஏகாதிபத்திய வாதிகளிடம் சில சலுகைகளைப் பெறுவதற்காகக் 'காவடிப் போராட்டம்' நடத்திய கால கட்டமாகும்.

## காவடிப் போராட்டம்

அக்காலத்தில் மாநாடுகள் கூட்டியும், தீர்மானங்கள் நிறைவேற்றியும் வெள்ளை எஜமானர்களிடம் காவடி தூக்கியும், மகஜர் சமர்ப்பித்தும் தாழ்ந்து பணிந்து சலுகைகளை யாசித்ததால், அதனை 'காவடிப் போராட்டம்' என்று கூறுதல் தவறாகாது.

இந்தப் போராட்டத்துடன் இணைந்ததுதான் இந்திய தேசிய காங்கிரஸின் ஆரம்ப வரலாறு.

யுத்தம்முடிந்து, 'ரௌலட் சட்டம்' பிறந்ததும் 'காவடிப் போராட்டத்துக்கும்' முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆபிரிக்காவில் போயர் யுத்தத்தின்போதும், 2 வது உலக யுத்தத்தின்போதும் வெள்ளையர்களுக்கு நல்லெண்ணத்துடன் உதவி புரிந்த காந்தி அடிகளின் மனமும் மாறியது. அதன் விளைவு காங்கிரஸ் ஸ்தாபனம் புதிய பாதையில் திரும்பியதுதான்.

## புதிய திருப்பம்

இந்தக் கட்டத்திலிருந்து தான் தொடங்கியது மக்களின் போராட்டம். மக்களின் போராட்டங்களைக் கண்டு வெள்ளையர் வெருண்டனர். அடக்குமுறைகளை அள்ளிவீசினர். அடக்குமுறையின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க மக்களும்வீறுகொண்டெழுந்தனர். விளைவு, வெள்ளையர் வெளியேறியதுதான்.

முதலாவது உலக யுத்த முடிவுடன் தொடங்கிய மக்கள் போராட்டம் 2வது உலக யுத்த முடிவுடன் முடிந்தது. அடிமைத்தளையும்அறுந்தது-நாடு விடுதலை பெற்றது.

## பகிரங்கத் தலைமை

சுதந்திரப் போராட்டங்களுக்குக் காங்கிரசே தலைமை தாங்கியது.ஆம், 'பகிரங்கத்' தலைமை காங்கிரஸ் கையிற்றான் இருந்தது. இப்போராட்டங்களுக்கு ஒவ்வொரு கட்டத்திலும் வெவ்வேறு உருவம் கொடுத்துவந்தார் காந்திஜி.

ரௌலட் சட்ட எதிர்ப்பு, பஞ்சாப் படுகொலை, கிளாபத் இயக்கம், வரிகொடா இயக்கம், சைமன் கமிஷன் பகிஷ்காரம், உப்பு சத்தியாக்கிரகம்,ஒத்துழையாமை இயக்கம், தனிப்பட்டோர் சத்தியாக்கிரகம், ஆகஸ்டுப் போராட்டம் ஆகிய மக்கள் போராட்டங்கள் காங்கிரஸ் தலைமையில் ஒன்றன்பின் ஒன்றாகக்கிளர்ந்தெழுந்தன.

## சமரசப் பேச்சின் விளைவு

போராட்டங்களிடையே சமரசப் பேச்சு வார்த்தைகளை நடத்தவும் காங்கிரஸ் தவறவில்லை. காந்தி—இர்வின் ஒப்பந்தம்,வட்டமேசை மாநாடு, பதவி ஏற்றல் முதலிய சமரசப் பாதைகளிலும் காங்கிரஸ் சென்றது. சமரச முயற்சிகள் சுதந்திரத்தைக் கொண்டு வராவிட்டாலும், சுதந்திரப் போராட்டங்களுக்கு ஊக்கமளிக்க உதவின. அதற்கு மட்டுமா அவை உதவின? சுதந்திரம் பெறும் நாளை தள்ளிப்போடவும் அவை உதவின.

சமரச முயற்சிகள் செய்யப்படாதிருந்தால் 1947க்கு சில ஆண்டுகளுக்கு முன்பே இந்தியா சுதந்திரம் பெற்றிருக்கும் என்பதே எனது கருத்து.

இந்திய சுதந்திரப் போராட்டங்களுக்கு அளிக்கப்பட்ட 'பகிரங்கத்' தலைமையைப்பற்றி கூறும்போது 'மறைமுகத்' தலைமையைப் பற்றியும் குறிப்பிடவேண்டுமல்லவா?

## பயங்கரச் செயல்கள்

மக்கள்போராட்டங்களின் ஆரம்பகாலத்தில் பயங்கரவாதச் செயல்கள் நாட்டிலே ஆங்காங்கு தலைதூக்கின. அஞ்சா நெஞ்சம் படைத்த பாரத இளஞ் சிங்கங்கள் இப் பயங்கரச் செயல்களில் துணிவுடன் ஈடுபட்டனர்.

ஆணவம் கொண்ட வெள்ளை அதிகாரிகளை சுட்டுத்தள்ளியோ வெடிக்குண்டு வீசியோ, எமனுலகம் அனுப்புதல், ஏகாதிபத்திய ஆதிக்க ஸ்தானங்களை வெடிவைத்து தகர்த்தல், சட்டசபை என்ற பெயரால் அன்றிருந்த 'கண்துடைப்பு'ச் சபைகள்மீது

**கே. இராமசாமி**

குண்டுவீசுதல் போன்றபயங்கரச் செயல்கள் அன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நடுநடுங்க வைத்தன. வங்காளம், பஞ்சாப் மாநிலங்களிலே பெரும்பாலும்இவை நடைபெற்றன. இத்தகைய மிதமிஞ்சிய வீரச் செயல்களின் விளைவாகவே பகவத்சிங், ராஜகுரு, சுகதேவ் போன்ற மாவீரர்கள் தூக்கில் தொங்கினர்.

இந்த வீரர்களின் உயிர்த் தியாகத்துக்கு இன்றும் பாரதம் அஞ்சலி செலுத்துகிறதெனினும், பயங்கரச்செயல்கள் மக்களிடம் செல்வாக்கு பெறவில்லை.மக்கள் போராட்டங்கள் வளர, வளர பயங்கரச் செயல்கள் மாண்டு மடிந்துவிட்டன.

## மறைமுகத் தலைமை

பயங்கரவாதத்துடன் சம்பந்தப்படாத ஒரு புரட்சி இயக்கம் நாட்டிலேவளர்ந்து வந்தது இந்த இயக்கத்திலே பல கோஷ்டிகள் பல்வேறு சித்தாந்தங்களைத் தாங்கிக் கொண்டு ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பின்றி நாட்டின் பல பகுதிகளிலே இயங்கிவந்தன. ஒவ்வொரு கோஷ்டிக்கும் தலைசிறந்த புரட்சிவாதிகள் தலைமை தாங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

சோசலிஸ்டுகள் (காங்கிரஸ் சோசலிஸ்டுகள்), கம்யூனிஸ்டுகள், கம்யூனிஸ்டு அல்லாத புரட்சிவாதிகள் என்று இப்புரட்சிக் கோஷ்டிகளை மூன்று பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அவர்கள்சுதந்திரப்போராட்டங்களில் தீவி பங்குகொண்டனர். போராட்டங்களின்போது காங்கிரசுடன் சேர்ந்து நின்றனர். சுதந்திரப் போராட்டங்களின் மேற்பக்கம் காங்கிரஸ் என்றால், உட்பக்கம் புரட்சிவாதிகளாவர். நாட்டின் விடுதலைக்காக உயிர்த்தியாகம் உட்பட எல்லாவித தியாகங்களையும் செய்வதில் அவர்கள் முன்னணியில் நின்றனர். ஏகாதிபத்தியவாதிகளிடம் சிக்காமல் தலைமறைவாக இருந்து போராட்டங்களை உந்திச் சென்றதில் அவர்களுக்கு நிகர் அவர்களாகவே இருந்தனர்.

## ஆகஸ்டுப் போராட்டம்

இறுதிப் போராட்டமும் தீர்க்கமான போராட்டமுமான ஆகஸ்டு போராட்டத்தின் போதுதான் புரட்சிவாதிகள் நாடுமுழுவதும்தங்களின் கைவரிசையைக் காட்டினர். இந்தியக் கம்யூனிஸ்டுகளைப் பற்றியும் சில குறிப்புகளை இங்குகூறுதல்அவசியமாகும்.

இந்தியக்கம்யூனிஸ்ட்கட்சி சட்டவிரோத மாக்கப்பட்ட பின்னர், அவர்கள் காங்கிரசில் சேர்ந்து காங்கிரஸ்சோசலிஸ்ட் கட்சியினூடாக இயங்கிக்கொண்டிருந்தனர். 2வது உலகயுத்தத்தின்போது சர்ச்சில் ஸ்டாலினுடன்கைகோத்துக்கொண்டதும் அரசாங்கத்தை ஆதரிக்க ஆரம்பித்தனர் இந்தியக் கம்யூனிஸ்டுகள். அதன் விளைவாக கட்சியின் தடை நீக்கப்பட்டுஅவர்கள் பகிரங்கமாக இயங்கினர்.

ஆகவே அவர்கள் ஆகஸ்டு போராட்டத்தை எதிர்த்தும் புரட்சி இயக்கத்தைக் கண்டித்தும், புரட்சிவாதிகளைக் காட்டிக்கொடுத்தும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குச் சேவகம் புரிந்தனர். ஆனால் புரட்சி இயக்கத்தின் இயக்கம் அதனால் தடைப்படவில்லை. புரட்சிவாதிகள் ஆகஸ்டு போராட்டத்துக்கு இறுதிவரை உயிரூட்டிக் கொண்டிருந்தனர்.

## "வெள்ளையனே வெளியேறு"

1942 ஆகஸ்டு 9ந் திகதி (இந்திய வரலாற்றில் மறக்க முடியாத நாள்) பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், அன்றிரவே காந்திஜி உட்பட காங்கிரஸ் தலைவர்கள் திடீரெனக்கைது செய்யப்பட்டனர். உடனே நாடெங்கும் பொங்கியது புரட்சி. அடுத்து மாநில, மாவட்ட, நகர காங்கிரஸ் தலைவர்கள் திடீர் திடீரென கைது செய்யப்பட்டனர். இதனால் மக்களின் எழுச்சியின் வேகம் மேலும்அதிகரித்தது.

மக்கள் தாமாகவே எழுச்சி பெற்றனர். எழுச்சிக்கான எத்தகைய ஏற்பாடுகளையும் காங்கிரஸ் முன் கூட்டியே செய்யத் தவறிவிட்டது. போராட்டத் திட்டங்களை மக்களுக்குக் கொடுக்கவும் தவறிவிட்டது. அதற்கான அமைப்புகளை உருவாக்கவும் தவறிவிட்டது. ஏன்? காங்கிரஸ் மக்களின் எழுச்சியை எதிர்பார்த்திருக்கவில்லையா? 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம்நிறைவேற்ற முன்பு மக்களின் நாடித்துடிப்பை சரிவர உணரத் தவறிவிட்டதா?

## திட்டமில்லை—தலைமையில்லை

காரணம் எதுவாக இருப்பினும், காங்கிரஸ் தலைமை முற்றாகச் சிறைக்குள் சென்றுவிட்டதால், மக்களின் எழுச்சிக்குத் தலைமைதாங்கி வழிகாட்ட யாரும் வெளியே இருக்கவில்லை. அதற்கான ஏற்பாடுகளுமிருக்க வில்லை; இதனால் ஒரு பயங்கரமான நிலைமை உருவாகியது. ஆகவே தலைமையற்ற மக்கள் ஆங்காங்கு தங்களுக்குத் தாங்களே தலைமை தாங்கிக்கொண்டு, பல்வேறு அவசரத் திட்டங்களைத் தாங்களேதீட்டிக்கொண்டு செயலில் இறங்கினர்.

இதே நிலைதான் தமிழ்நாட்டிலும் நிலவியது. திருநெல்வேலி மாவட்டத்தில் குலசேகரம் பட்டணம் உப்பளத்தின்மீது படையெடுப்பு (இதில் ஒரு வெள்ளையன் கொல்லப்பட்டான்), இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை நீதிமன்றத்தின்மீது படையெடுப்பு, கோயமுத்தூர் விமான நிலையத்தைத் துவம்சம் செய்தல் போன்ற போர் நடவடிக்கைகளில் மக்கள் தீவிரமாக இறங்கினர். இதுபோன்ற நடவடிக்கைகள் தேசமெங்கும் நடைபெற்றன.

சிறைகள் நிரப்பப்பட்டன. ஆனால் இத்திடீர் எழுச்சி அடங்கியதும் அடுத்து என்ன செய்வது என்று மக்கள் திகைத்தனர். திட்டமும் இல்லை—தலைமையுமில்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக அவசர அவசரமாக நாடெங்கிலும் தங்களின் ஸ்தாபன அமைப்புகளை பலப்படுத்திய பல்வேறு புரட்சிக் கோஷ்டிகள் புரட்சித் திட்டங்களுடன் தீவிரமாகச் செயலாற்றத் தொடங்கினர்.

## புரட்சிக் கோஷ்டிகள்

நாடெங்கிலும் புரட்சிக் கோஷ்டிகள் சங்கிலித்தொடர்போல இணைக்கப்பட்டன. இதில் முன்னணியில் நின்று திறமையாகச் செயலாற்றிய குழு ஜயப்பிரகாஷ் நாராயணன், திருமதி. அருணா ஆசப் அலி முதலியோர் தலைமையில் இயங்கிய காங்கிரஸ் சோசலிஸ்ட்கட்சிதான். அடுத்து வங்கம், மத்திய பிரதேசம், பம்பாய், தமிழ்நாடு முதலிய இடங்களில் இயங்கிவந்த டிராஸ்கியக் கோஷ்டிகளையும்,கேரள சோசலிஸ்ட் கட்சியையும், சௌமியேந்தர நாத் தாகூரின் புரட்சிவாதக் கம்யூனிஸ்ட் கட்சியையும், இதர மாநிலங்களில் இயங்கிவந்த புரட்சிக்கோஷ்டிகளையும் கூறலாம்.

காங்கிரஸ் தலைமை சிறையினுள் தவம் கிடந்ததால் இந்தப் புரட்சிவாதிகள் தான் மக்களுக்குத்திட்டம்கொடுத்தனர்—வழிகாட்டினர். திடீர் எழுச்சி தணிந்து பின்னரும் ஆகஸ்டுப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர்.

சுருங்கக்கூறின், இந்திய சுதந்திர இறுதிப் போராட்டத் தீயை அணைய விடாமல் இறுதிவரை அதனை ஏந்திச் சென்றவர்கள் இந்தப்புரட்சி வீரர்களே.

## அகிம்சைப் போரல்ல

ஆகஸ்டுப் போராட்டத்துக்கும் இதர சுதந்திரப் போராட்டங்களுக்குமுள்ள ஒரு பெரிய வித்தியாசம் ஆகஸ்டுப்போராட்டம் அகிம்சாப் போராட்டமாக இல்லாதிருந்ததுதான். வேறு வார்த்தைகளில் கூறினால் காங்கிரஸின் 'வெள்ளையனே வெளியேறு!' தீர்மானத்தை

(7-ம் பக்கம் பார்க்க)

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ANANDA MEDICAL HALL · TRADE MARK · 174 SEA STREET COLOMBO 11

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்திய சாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# அன்னிய ஆட்சிக்கு எதிராக வேலூரில் வெடித்த முதல் புரட்சி

அன்னிய ஆட்சிக்கு எதிராக பாரத நாட்டில் முதல் எழுந்த கிளர்ச்சி வேலூர்க் கலவரம். இக்கிளர்ச்சிக்கான அடிப்படைக்காரணம் மேலை நாட்டுக் கலாசாரத் திணிப்பே. இந்த உண்மையை வரலாற்று ஆசிரியர்கள் சிலர் நேரடியாகத் தரிசிக்க மறுக்கிறார்கள். கிளர்ச்சிக்கு பல காரணங்கள் கற்பிக்கப்படுகிறது. வேண்டாதவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மை என்ன என்பதை இங்கு கட்டுரை ஆசிரியர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

## கலாசாரத் திணிப்பே காரணம்

ஒரு இனம் மற்றொரு இனத்திற்கு அடிமைப்பட்டுவிட்டால் அந்த இனத்தின் வாழ்க்கையும் அடிமைப்பட்டு விடுகிறது. வாழ்க்கை அடிமைப்பட்டு விடுகிறதென்றால், அடிமைப்பட்ட இனத்தின் பண்பாடு, கலாசாரம், எண்ணப்போக்கு அனைத்தும் இரவல் மயமாகி விடுகிறதென்பதே பொருள். அடிமைப் பட்ட இனம் தாம் இரவல் வாழ்க்கை வாழ்கிறோம் என்பதை எப்பொழுது உணரத் தலைப்படுகிறதோ அப்பொழுதுதான் அதற்கு விமோசனம் உண்டு, விடுதலை கிடைக்கும்.

இந்திய நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டபொழுது அதன் வாழ்க்கையும் அடிமைப்பட்டுவிட்டது. அந்த அடிமை வாழ்க்கையின் தாக்கம் மக்கள் மத்தியில் ஏற்பட்டதும் விடுதலை உணர்வும் தலை தூக்கத் தொடங்கியது. ஆங்கிலேய ஆட்சியின் வருகையை எதிர்த்து ஆங்காங்கே போராட்டங்கள் நடைபெற்றன. இப்போராட்டங்கள் ஆண்டுக்கணக்காக நீடித்ததும் உண்டு. ஆண்டுக்கணக்காக ஆங்கிலேய ஆட்சியின் வருகையை எதிர்த்துப் போரிட்டவர்கள் ஈற்றில் தோல்வியடைந்தார்கள்.

ஆங்கிலேய ஆட்சியின் வருகையை எதிர்த்து நடைபெற்றபோராட்டங்கள் அனைத்தும் விடுதலைப் போராட்டங்கள் என்று வரையறுத்துக் கூறிவிட

*பூங்குன்றன்*

முடியாது. அடிமைப்பட்ட இனம் தனது அடிமை நிலையை நீக்க தொடுக்கும் போராட்டமே உண்மையான விடுதலைப் போராட்டமாகும்.

இந்த வரையறையுடன் இந்திய நாட்டு விடுதலைப் போராட்ட வரலாற்றை ஆராயும்பொழுது 1806ம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற கலவரமே பாரத துணைக்கண்டம் முழுவதிலும் நடைபெற்ற முதலாவது விடுதலைக் கிளர்ச்சி எனக்கூறலாம். வேலூர்கலவரத்தின் பின்னணி ஒருவகைக் கலாச்சாரத் திணிப்புக்கு எதிரான கிளர்ச்சி என்றே முடிவு கட்டக் கூடியதாக இருக்கிறது.

### கலாசார திணிப்பு

ஆங்கிலேய ஆதிக்கம் இந்தியாவின் பெரும்பகுதியில் ஓரளவு காலூன்றிய நிலையிலேயே இக்கலவரம் ஆரம்பமாகியது. அதிகார ஆதிக்கத்தைக்காலூன்றிய அன்னிய ஆட்சி கலாசாரத்திணிப்புக்கு தன்னைத் தயார்ப்படுத்தியது. கலாசாரத் திணிப்பின் பரிசோதனை முதலில் சிப்பாய்கள் மத்தியில் ஆரம்பமாகியது.

சிப்பாய்களின் உடைகளில் மாற்றம் செய்வதுடன், அவர்கள் அணிந்திருக்கும் காதணி போன்றவற்றை அகற்ற வேண்டுமென்றும், தாடி வளர்ப்பதை நிறுத்த வேண்டும் என்றும், மீசையை சிறிதாககத்தரித்து அலங்காரம் செய்ய வேண்டுமென்றும் இராணுவதளகர்த்தர்கள் முடிவெடுத்தனர். அத்துடன் தலைப்பாகை போன்ற ஒருவகைத் தொப்பியையும் இந்த வீரர்கள் தலையில் போட்டுக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிடப்பட்டார்கள். இந்த முடிவு இந்திய வீரர்களான சிப்பாய்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

### மயக்கம்

காதணி போன்றவற்றை அணியக் கூடாது என்ற கட்டளை சிப்பாய்களை சிந்திக்கத் தூண்டியது. அன்று நிலவிய சாதி அடிப்படையிலான அணிகளுக்கும் இடமில்லாது போனது. இந்த வெளித்தோற்ற மாற்றங்கள் மேலைப் பண்பாட்டின் திணிப்பு என்பதை வீரர்கள் தெளிவாக உணர்ந்தனர். இது கிளர்ச்சிக்கு வித்திட்டது.

ஏனைய இடங்களை விட இக் கிளர்ச்சி வேலூரில் வெடித்துக் கிளம்பியதற்கு வேலூர் திப்புவின் மைந்தர்களும்ஓரளவு துணையாக இருந்தனர். ஆனால் சில வரலாற்று ஆசிரியர்கள் வரையறுத்துக் கூறுவது போன்று இக் கிளர்ச்சிக்கு வேலூர் திப்புவின் மைந்தர்களை முழுக்க முழுக்க காரணமாக இருந்தார்கள் என்று கூறுவது தவறு. வரலாற்று ஆசிரியர்கள் இக் கிளர்ச்சியில் திப்புவின் மைந்தர்களுக்கு கூடிய முக்கியத்துவம் கொடுப்பதற்கு அன்றைய சில சம்பவங்களே காரணம். புரட்சி அடக்கப்பட்டதும் திப்புவின் மைந்தர்களை முதலில் வேலூரிலிருந்து அகற்றி சென்னைக்குக் கொண்டு வந்தார்கள். சென்னையிலிருந்தும் அவர்கள் கிளர்ச்சியைத் தூண்டலாம் என்ற காரணத்தினால் அவர்கள் கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டார்கள். இவர்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவமே வரலாற்று ஆசிரியர்களின் மயக்கத்திற்குக் காரணமாக அமைந்திருக்கிறது.

### தவறான முடிவு

திப்புவின் மைந்தர்களுக்கு அதிகப்படியான முக்கியத்துவத்தைக் கொடுத்துப் புரட்சியின் உண்மையான காரணத்தைப் புரிந்துகொள்ளத் தவறியமையினாலேயே அன்று சென்னை கவர்னராக இருந்த வில்லியம் பென்றிங்கும் (William Bentinck) சென்னை இராணுவதளகர்த்தராக இருந்த ஜோன் கிருடொக் (John Gradock)கும் அவர்கள் வகித்த பதவிகளை விட்டு உடன் திரும்புமாறு அழைக்கப்பட்டனர்.

இக் கிளர்ச்சியை கிறிஸ்தவ மதத்திணிப்பின் எதிர் நடவடிக்கை என்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். காதணிகளை அணிய விடாது தடுப்பதும், வர்ண சின்னங்களை நீக்கும்படி நிர்ப்பந்திப்பதும் கிறிஸ்தவ மதத்தை திணிக்கும் நோக்கத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கையாகவே சிப்பாய்கள் கருதினார்கள் என்று இவ்வரலாற்று ஆசிரியர்கள் சிலர் கருதுகிறார்கள்.


### நேரான காரணங்கள்

வரலாற்று ஆசிரியர்கள் முரண்பட்ட முடிவுகள் எதனைக் கூறிய போதிலும் கிளர்ச்சியின் அடிப்படை நோக்கம் என்ன என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்திய சிப்பாய்களின் வாழ்க்கை முறைக்கு மாறுபட்ட ஒரு வாழ்க்கை முறையைத் திணித்ததின் விளைவே கலவரம். கலவரம் ஏதோ சலசலப்பாக முடிந்து விடவில்லை. ஆங்கிலத்தளபதிகள் பலரின் உயிரையே இக்கலவரம் கவர்ந்தது. ஆனால் கலவரத்தின் பின்னர் இந்திய சிப்பாய்கள் துன்புறுத்தப்பட்டார்கள். பலர் சிறைப்படுத்தப்பட்டார்கள். ஆர்காட்டிலிருந்து கிலிப்ஸை (Gillespie) விரைந்து கலவரத்தை அடக்கி ஒழுங்கை நிலைநாட்டினான்.

வேலூர் வீரர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், அவர்களைத் துன்புறுத்திய முறையும் ஏனைய பகுதிகளில் அத்தகைய சம்பவங்கள் தலைதூக்குவதைத் தடுத்து நிறுத்தியது நேரடிக் கலாசாரத் திணிப்பும் ஓரளவு நிறுத்தப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)

பண்டைக்காலத்து அழகின் ரகசியத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்



தூய சந்தன எண்ணெயினால் உங்கள் அழகுக்கு மெரு கூட்டுங்கள்

சோப்புகளில் ராணி, ராணி சந்தன சோப்






ராணி

அசோக்கமாலா இலங்கை சரித்திரத்திலேயே இடம்பெற்றஅழகு ராணி. அவளின் கவர்ச்சியான அழகு, துட்டகைமுனு என்ற அரசனின் மகன் சாலியா என்னும் இளவரசனின் இதயத்தையே கொள்ளை கொண்டது. இத்தகைய இயற்கை அழகு வாய்ந்த அசோக்கமாலாவை "பஞ்ச கல்யாணி" என்றழைத்தனர். அசோக்கமாலாவின் பெயரையே ஓர் அழகான பூந்தோட்டத்திற்குச் சூட்டினர். இத்தகைய அழகின் மர்மம்என்னவாயிருக்கும்? அசோக்கமாலாவின் அழகின் மர்மத்தை, பகிர்ந்து கொள்ளுங்கள்—
இம்மர்மம் ஒவ்வொரு ராணி சந்தன சோப்பிலும் காணப்படுகிறது. இச்சோப்பில் மட்டும்தான் சுத்தமான சந்தன எண்ணெய் சேர்க்கப்பட்டுள்ளது. ஈழத்தேய அழகு மங்கைகளின் அழகின் மர்மம் இதுவேயாகும். அதனால் நீங்களும் அழகான மேனியைப் பெற்று பெருமை கொள்ளுங்கள்

ஏக விநியோகஸ்தர்கள்.
மல்லர், பிப்ஸ் (சிலோன்) லிமிட்டெட்.

இது சுவதேஷி இன்டஸ்ரீயல் ஸ்தாபனத்தாரின் ஓர் தயாரிப்பு



அத்துடன் குழந்தைகளுக்கும்............
தாய்மார்களே! பூப்போன்ற மிருதுவான குழந்தையின் சருமத்தை ராணி பேபி சோப்பினால் பாதுகாருங்கள்




GRANTS 56

# சுதந்திரப் போரில் வ. உ. சி. பங்கு

## சிறை சென்று செக்கிழுத்து செந்தமிழ் வளர்த்த வீரர்

இந்தியத்துணைக்கண்டத்துமக்களுக்குசுதந்திரக் கனலை மூட்டியவர்களின் வரிசையில் தமிழ் நாடு தந்த வ. உ. சிதம்பரம்பிள்ளைக்கு தனியிட முண்டு. 'கப்பலோட்டிய தமிழர்' என்று எல்லோராலும் அழைக்கப்படும் திரு. வ. உ. சி. அவர்கள் இந்திய சுதந்திரப் போரில் ஆற்றிய தொண்டு அளப்பரியது. திரு. வ. உ. சிதம்பரனாரின் வாழ்வில் நடைபெற்ற உருக்கமான சம்பவங்களை அவரது மூன்றாவது மகனான திரு. வ. உ. சி. சுப்பிரமணியம் இங்கு தருகிறார்.

**வ. உ. சி. சுப்பிரமணியம்**

புதுச்சேரியில் பகவான் அரவிந்தர் மாளிகையில் தேசபக்தர்கள் பலர் ஒருங்குகூடி உரையாடிக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு நடுநாயகமாக விளங்கினார் ஸ்ரீ அரவிந்தகோஷ். என் தந்தைசிதம்பரம்பிள்ளை அவர்கள், அரவிந்தருக்கு அருகில் உட்கார்ந்து 27 மொழிகளில் பத்திரிகைகள் ஆரம்பிப்பது பற்றிய ஒரு பெரும் திட்டத்தைப்பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்மிக்க சிரத்தையுடன்.

உடனிருந்த பாரதி-தம்பக்கத்திலிருந்த ஸ்ரீனிவாஸாச்சாரியாரைச் சுட்டிக்காட்டிக் கொண்டே, 'பிள்ளைவாள், நாங்கள் ஒரு பத்திரிகையை நடத்த படும் கஷ்டமே சொல்லமுடியாது. நீங்கள் 27 பத்திரிகைகள்-அதுவும் 27 வெவ்வேறு மொழிகளில் நடத்தத் திட்டமிடுகிறீர்களே! அதற்கு எவ்வளவு பணம் வேண்டும்? எவ்வளவு ஆள் வேண்டும்? இடம்தான் எங்கே? இதுஎங்காவது நடக்கிற காரியமா?' என்று சிரித்தவாறே கேட்டார்.

### பிள்ளைக்கு வந்த ஆவேசம்

திட்டத்தை விளக்கி வைப்பதில் வெகுவாக ஈடுபட்டிருந்த பிள்ளையின் காதில் இச்சொற்கள் விழுந்தனவோ-இல்லையோ; வந்துவிட்டது ஆவேசம் பிள்ளைக்கு. நாற்காலியிலிருந்தெழுந்தார். கை முஷ்டிகளை உயர்த்திக் கொண்டு 'ஒரு பத்திரிகையைக்கொண்டு ஒருஊரையே ஆளலாம் என்றால் 27 பத்திரிகைகளைக்கொண்டு ஏன் உலகை ஆளமுடியாது?' என்று சடசடவெனக் கர்ஜித்தார். பின்னர்தான் கேட்டவர் யாரெனப்பார்த்தார். தமது 'மாமனாரான' பாரதி. பிள்ளையவர்கள் ஆவேசம் "கலகல" வென்ற சிரிப்பாக மாறியது. மீண்டும்நாற்காலியில் உட்கார்ந்தார். கடல் முழுதும் கப்பல்விட நிதி திரட்டிய பிள்ளைக்கு 27 மொழிப் பத்திரிகைகள் அற்பமாய்த் தோன்றியிருக்கலாம் போலும்.

ஆனால் நம் மக்களின் துர்பாக்கியமோ தமிழ்நாட்டின் கெட்டகாலமோ பிள்ளையவர்களின் கனவு கனவாகவே போய்விட்டது. என்றாவது மீண்டும் அவரது கனவு பலிதமாகுமோ என்னமோ?

### தந்தையை எதிர்த்தார்

நம்முடைய கப்பலோட்டிய தமிழர் ஒட்டப்பிடாரம் சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தன்னுடைய வக்கீல் வாழ்க்கையைத் துவக்கினார். ஒரு வழக்கில் பிள்ளை வாதிக்காகவும், அவர் தந்தையார் பிரதிவாதிக்காகவும்வழக்காடினார்கள். அவ்வழக்கில தம் தந்தையைப் பிள்ளையவர்கள் தோற்கடித்தார்! தந்தைக்கெதிராகத் தனயன் வழக்கிட்டு வென்றமை ஒட்டப்பிடார வட்டாரத்தில் இன்றும் ஆச்சரியத்துடன் ஒரு 'கதை'யாக வழங்கிவருகிறது. 'இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும்சொல்'லைத் தமது தந்தைக்கு வாங்கித் தந்தபிள்ளையைப்பெற்ற அவரது தந்தையார் உலகநாதம்பிள்ளை எத்தகைய பெருமையடைந்திருப்பார்!

சிதம்பரனார் பேரும் புகழும் அடைய எண்ணி அவரது நண்பர்கள் அவரைத் தூத்துக்குடிக்கு அழைத்தனர். அவரும் அங்கு சிறிது காலம் வக்கீல் தொழில் புரிந்தார். இந்த சமயத்தில்தான் சுதேசிய வித்து சிதம்பரனாரின் மனத்தில் விழுந்தது.

1905ல் கர்ஸான் பிரபுவங்கத்தைப் 'பாகிஸ்தான்' செய்தார். அதன் விளைவு என்ன? நாட்டில் எங்கும் சுதந்திரக் கனல் வீசிற்று. அந்நிய நாட்டுச் சாமான்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. சுதேசியம் வளர்ந்தோங்கிற்று. சுதேசியம் சுதேசியம் எங்கும் சுதேசியம்! நாட்டு விடுதலையில் ஆர்வம் கொண்ட பிள்ளை, தூத்துக்குடியில் ஒரு தரும சங்க நெசவுச் சாலை நிறுவினார். சுதேசி பண்டகசாலை ஏற்படுத்தினார். இப் பண்டகசாலையில் விற்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் சொந்த நாட்டில் செய்யப்பட்டவையே. இது முதல் பிள்ளையவர்கள் சுத்த சுதேசிய வீரராகமாறிப் பொதுக் கூட்டங்கள் கூட்டுவித்து வந்தே மாதர முழக்கம் செய்து வந்தார். சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்வதைத் 'தூ' வெனத் தள்ளச் சொன்னார்.

சுதேச வியாபாரிகள் அந்நிய சப்பல்கம்பெனியில் அவமதிக்கப்படுவதையும் பெரும் பொருள் இழப்பதையும் கண்ட பிள்ளைக்கு ஏன் நாமே ஒரு நாவாய்ச் சங்கம் தோற்றுவிக்கக் கூடாது எனத் தோன்றியது. பல வியாபாரிகளிடம் இதற்கெனப் பணம் கோரினார். நமது வியாபாரிகள் இத் தொழில் லாபம் தருமேவென ஐயங்கொண்டு நேரில் பொருள் தருவதாகக் கூறி 'இப்போ; பிறகு' எனக் கடத்தினர். இஃதுபிள்ளைக்கு மிக்க வேதனையளித்தது.

### கப்பல் கம்பனி

இதற்கிடையில் அப்போது தூத்துக்குடியிலிருந்த பக்கிரி முகம்மதுராவுத்தர் என்னும் முஸ்லிம் பெரியார் முதலில் துணிந்து கப்பல்கம்பெனிக்கு பொருள் தந்தார். அந்நிதியையும் ஏட்டு குருநாத ஐயர் முதலியோர் தந்த நிதியையும் கொண்டு முதலில்பிள்ளையவர்கள் சுதேசிக் கப்பல் கம்பெனிதோற்றுவித்து, 'ஷாலயன்', 'இப்ஸ்விச்' என்ற இரு கப்பல்களை வாடகைக்கு அமர்த்தி நடாத்தினார். ஒரே மாதத்தில் கம்பெனிக்கு ரூபா 20,000 லாபம்கிடைத்தது. பின்னர் எல்லோரும் பணம் கொடுக்க முன்வந்தனர். 1905-ம் வருஷம் சுதேசிக கப்பல் கம்பெனி நிறுவப்பட்டது. 1906 அக்டோபர் 16ந் தேதி பதிவுசெய்யப் பெற்றது. கப்பல் கம்பெனிக்கு எஸ். எஸ். காலியோ, எஸ். எஸ். லாவோ என்ற இரு கப்பல்கள் சொந்தத்தில் வாங்கப்பட்டு சிறப்புற நடைபெற்றது. பிள்ளையவர்களுக்கு கப்பல்கம்பெனியில் நம்மவர்கள் போதிய ஆதரவு தரவில்லை என்பதே எண்ணம்.

பிள்ளையவர்கள் அரசியல் வாழ்வில் தீவிர முற்போக்குடைய திலகர் கட்சியைச் சேர்ந்தவர். 1907ல் நடைபெற்ற சூரத் காங்கிரஸில் திலகருக்குப் பேராதரவாக இருந்த இருவர் சுப்ரமணிய பாரதியும், சிதம்பரம்பிள்ளையுமேயாவர். அப்பொழுது தான் பிள்ளையவர்களுக்கு அரவிந்தகோஷ், லஜபதிராய் முதலிய பல தலைவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. சூரத் காங்கிரஸுக்கு தூத்துக்குடியினின்று சென்னை வழியாக நேரே சூரத் நகருக்கு ஸ்பெஷல் ரயிலில் அமிதவாதிப் பிரதிநிதிகள் சென்றமைகுறிப்பிடத்தக்கது. இம் முயற்சிகளுக்கெல்லாம் காரணகர்த்தா பிள்ளையேதான்.

### வெள்ளையர் வெருண்டனர்

பலவகையிலும் நாட்டு மக்கள் முன்னேறி வருவதைக் கண்ட தூத்துக்குடி வெள்ளையர் வெருண்டனர். நகரில் இருக்கப் பயந்து தூத்துக்குடிக்கு அருகிலுள்ள முயல் தீவில் இரவைக் கழிப்பதும், பகலிலும் பந்தோபஸ்துடன் ஊருக்குவந்து போவதுமாயிருந்தனர். வெள்ளைக்கப்பல் கம்பெனிக்குப் போட்டி ஏற்பட்டது கண்டும், பொங்கி வரும் சுதேசி வேகத்தைக் கண்டும் ஆங்கிலேயர் ஆர்ப்பரித்து பிள்ளையையும், அவரது சகாக்களையும் ஒழித்து விட முடிவு கட்டினர். வெள்ளை அரசாட்சியும்அவர்களுடன் சேர்ந்துகொண்டு அடக்குமுறைப் பேயாடியது.

1908-ம் வருடம் மார்ச் 9-ம் தேதி யன்று பிள்ளைமீது ராஜத் துவேஷ வழக்குத் தொடரப்பட்டது அதே வருடம் பல இடங்களிலும் பிப்ரவரி 23, 26, மார்ச் 1, 3 ஆகிய தேதிகளில் பேசிய பிரசங்கங்கள் எல்லாம் ராஜத் துவேஷமானவை என சர்க்கார் வழக்குத் தொடங்கினர். மார்ச் மாதம் 11ம் தேதி பிள்ளை, சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

### தண்டனை ஏற்றார்

இந்த ராஜ துவேஷ வழக்கை விசாரிப்பதற்கென்றே தனியாக நியமிக்கப்பட்ட அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் பின்னே (A. F. Pinhey) சிதம்பரனாருக்கு இரு குற்றங்களுக்கும் இரண்டு ஆயுள் பரியந்த தீவாந்திர தண்டனையும், சிவாவுக்குப் பத்து வருட தீவாந்திர தண்டனையும் விதித்தார்.

அப்பீலில் பிள்ளையவர்கள் தண்டனை ஆறு வருடமாகக் குறைக்கப்பட்டது. பிள்ளையவர்கள் தமது தண்டனையில் பெரும்பகுதியைக்கோயமுத்தூர்சிறையிலும், கொச்சிநாள் கண்ணனூர்ச் சிறையிலும் கழித்தார்.

### தமிழ்த் தொண்டு

சிறையிலிருந்த நாளையில் சிதம்பரனார் தமிழ்மொழி முன்னேற்றத்தில் வெகுவாக ஈடுபட்டிருந்தார். சிறையிலேயே 'மனம்போலவாழ்வு', 'மெய்யறம்', 'மெய்யறிவு' முதலிய நூல்களை எழுதியுள்ளார். தெய்வநூலாகியதிருக்குறளுக்கு இவர் ஒரு உரை எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் திருக்குறளை உரையுடன் மொழிபெயர்க்க முயன்றார். இவ்வெண்ணம் என்ன காரணத்தினாலோ நிறைவேறாது போயிற்று. பிள்ளையவர்கள் தமிழில் பல நூல்கள்இயற்றியுள்ளார்.

1912-ம் வருடம் டிசம்பர் மாதம் தமது தண்டனையைக் கழித்துவிட்டுப் பிள்ளையவர்கள் கண்ணனூர்ச் சிறையினின்றும் விடுதலையானார். 1922-ம் வருடம் மீண்டும் வக்கீலாக கோவில்பட்டியில் தொழில் நடத்தி வந்தார். சிறையிலிருந்து விடுதலையானவுடன் வறுமைப்பட்ட பிள்ளை நெல் வியாபாரம், அரிசி வியாபாரம் முதலியனவும் செய்துவந்தார். திலகர் பெருமான் அக்காலத்தில் தமது சிஷ்யரான சிதம்பரம் பிள்ளைக்கு மாதாமாதம் ரூ. 50 விதம் அனுப்பி உதவி புரிந்தார். இச் சமயத்தில் காந்திஜீயும் தென்னாப்பிரிக்காவில் நிதி திரட்டி பிள்ளையவர்களுக்கு உதவியதுகுறிப்பிடத்தக்கது.

### மறைவு

வ. உ. சிதம்பரம் பிள்ளை தமது பிற்காலத்தில் வக்கீல் தொழிலை விட்டுவிட்டார். வக்கீல்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது பிள்ளையவர்கள் 'வக்கிலாய் நின்று வழிப்பறியே செய்கின்ற திக்கிலார்' எனக் கூறியுள்ளார். கடைசிக் காலத்தில் தமிழன்னைக்குத் தொண்டு செய்வதையே கொண்டு அரசியல் வாழ்வினின்றும்வறுமைகாரணமாகவும், கொள்கை வித்தியாசம் காரணமாகவும் விலகி நின்ற என் தந்தையார் 1936-ம் வருடம் நவம்பர் மாதம் 18-ம் தேதிஇரவு 12 மணிக்குத் தூத்துக்குடியில் காலமானார். அவரது ஊன் உடம்பு மறைந்ததென்றாலும் 'கப்பலோட்டிய தமிழர்' என்று அவருடையதியாகத்தால் நிறுவப்பட்ட புகழுடம்பு மட்டும் தமிழகம் இருக்கும் அளவுமென்றும் அழியாது நின்று நிலவும்.

(நன்றி: கலை.)


## அவசியமுள்ளவர்கள் யார் ?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-

**பண்டார மந்திராச்சாரியார்**
அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்.



எங்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கைக்காரர்கள் அனைவருக்கும்

**இந்திய சுதந்திரதின வாழ்த்தை சமர்ப்பிக்கிறோம்!**

● நீடித்த பாவனைக்கு உத்தரவாதமானது ரவி

**'பிரஷ்'களே!**

உங்களுக்குத் தேவையான எந்த வகையான பிரஷ்களுக்கும்

**ரவி பிரஷ் இண்டஸ்ட்ரீஸ்**

63, கெய்சர் வீதி, கொழும்பு-11

தொலை பேசி: 2269




வைகவுண்ட் விமானம் விண்ணைக் கிழித்தவாறு வானம் பாடியின் இலாவண்யத்துடன் பறந்து கொண்டிருந்தது. வெண் பஞ்சு மேகத்திரைகள் விமானத்தின் கண்ணாடி யன்னல்களை மூர்ச்சத்துடன் வெகு வேகமாக முத்தமிட்டன. பனிச்சிகரங்களை வெட்டி ஊடறுத்துச் செல்லும் யந்திர கெதியில் விமானம் நடுநிலை பிறழாமல் அந்தரத்தே அசைவறறு நிற்பது போல எந்தவித அலுங்கல் குலுங்கலில்லாமல், சாதகப் பட்சியின் விரைவுடன் முன்னேறிக் கொண்டிருந்தது. ஜன்னல்களில் நீர் முத்துக்கள் கோத்திருந்தன.

லிஸியின் பார்வை ஒரு கணம் ஜன்னலுக்குவெளியே வெட்டியது வசந்த காலத்தில் கடல் நீரில் மிதக்கும் பனிப்பாளங்களாக, வெண்புகார் மலைகளிடையே நீல வானத்துண்டு பளிச்சிட்டு மறைந்தது. ஒரேயொரு கணம். அதற்கிடையில் எத்தகைய அபூர்வ-அழகுக்காட்சி நிறைவான காட்சி.

இதுபோல் தான் மனித வாழ்வா?

அவள் கண்களை ஏதோ இருட்டிக் கொண்டு வருவது போன்ற பிரமை. கண்களை இறுக மூடிக் கொண்டாள். மீண்டும் கண்களைத் திறந்து கொண்ட போது -

பயங்கரமான அந்த மலைச் சிகரங்கள் நிறைந்த பாதையில் விமானம் தடுமாறிக் கொண்டிருந்தது.

'ஓ!' - அவள் இதழ்கள் குவிந்து வியப்பை வெளியிட்டன. புகார்ப்போர்வையில் முடங்கிக்கிடக்கும் ஏதாவது சிகரத்தில் மோதிவிட்டால்.-

இது தான் மனித வாழ்வா?

வசந்தகாலத்தின் குளிர்மையும் - கோடை காலத்தின் வெம்மையுமாக!

அவள் உடல் சிலிர்த்து விறைத்தது,

அவள் அடுத்த ஆசனங்களை நோக்கினாள். அங்கு அவள் தந்தை மிஸ்டர் ருெபேட்சனும் மிஸிஸ் ருெபேட்சனும் ஏதோவொரு புதிய அமெரிக்கச் சஞ்சிகையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு நிசிராந்தையாக வீற்றிருந்தனர். அவர்களுக்கு அருகில் அவள் தம்பி யோன்சனும் தனது விளையாட்டு - பொம்மைக் கட்டைகளைக்கொண்டு புதிய புதிய வீடுகளைக் கட்டிக்கலைத்து... விளையாடிக் கொண்டிருந்தான். அவன் வளர்ந்ததும் கட்டிடக்கலையில் நிபுணத்துவம் பெறப் போகிறான்.

மனித வாழ்வையும் இந்தப் பொம்மை வீட்டைப் போல... அழித்தும்... ஆக்கியும் புதிதாக அமைக்க முடியுமா?

'ஓ! மைகாட்!' - இடதுகையின் பெருவிரலையும் சுட்டுவிரலையும் அகட்டி விரித்து அதன் இடைவெளியில் நெற்றியை அழுத்திக் கொண்டாள்.

அவள் நெஞ்சில் நினைவு மேகங்கள் வந்து குவிந்து, சரிகின்றன.

அவளின் இந்த இந்திய பிரயாணத்தை நினைக்க நினைக்க அவளுக்கே வியப்பாக இருக்கும் போது, அவள் பெற்றோர்களுக்கு எப்படி இருந்திருக்க வேண்டும்?

தாயும் தந்தையும் தமது பிரத்யேக அறையில் தனிமையில் உரையாடிக் கொண்டிருந்த அந்த அகால வேளையில், தான் அநாகரிகமான நிலையில் அவர்கள் அனுமதியில்லாமல் நசுங்கிய ஆடைகளுடனும், கலைந்த தலையுடனும் 'பட'ரென ஒசையெழ கதவைத்திறந்து சென்றும், அவர்கள் அவளை வியப்புடன் நோக்கியதும், அவளை அவமானத்திலாழ்த்துகிறது.

சே! என்ன மாதிரி நடந்து கொண்டேன்?

'டாடி! நானும் உங்களோடு இந்தியாவுக்கு வரப் போகிறேன்.'

'Really?' - மிஸ்டர்ருெபேட்சன் வியப்புடன் கேட்கிறார்.

'நிச்சயமாக?' - என்றவாறு அவள் விறைப்புடன் நிற்கிறாள். அவரால் நம்ப முடியவில்லை. இந்தியாவைப் பற்றி ஏராளமாகவும், பயங்கரமானதாகவும் எண்ணுகின்ற, நேற்றுவரை இந்தியாவுக்குத்தான் வரப்போவதில்லை எனத் திடமாகக் கூறியவள் இப்படிச் சொல்லுவதென்றால்...

'ஏன்... லிஸி அது மந்திரவாதிகளும் பாம்புகளும் ஏராளமாக இருக்கும் இடமாச்சே!...' என்று கேலியாக அவளைக் கேட்கிறார்.

'பரவாயில்லை'... - என்றபோது அவள் கோதுமை முகம் 'பீச்'சின் நிறமாக மாறுகிறது.

'அங்கு பிச்சைக்காரர்கள் தான் அதிகம்!'

'இருக்கட்டுமே!'

'அங்கு உனக்கேற்ற நண்பர்கள் இருக்கமாட்டார்கள். பொழுது போவது பெரும் பாடாக இருக்கும்!'

'டாடி! டாடி! எனக்கு எல்லாம் தெரியும்! என்னை எதுவும் கேட்க வேண்டாம்!... என்னை அழைத்துச் செல்வதில் ஏதாவது தடை இருந்தால் சொல்லுங்கள்...'

'Oh! my sweet girl! dont be Angry? டேவிட்டின் விருப்பத்தைக் கேட்டாயா?...'

'அவரைக் கேட்க வேண்டிய அவசியமில்லை.'

'அவசியமில்லையா!' ஏன் லிஸி, ஏதாவது அவனுடன் மனஸ்தாபமா!' அவன் மிக நல்ல பையனாச்சே!. என்று கவலையுடன் அவளை நோக்குகிறார்.

'அவள் ஆத்திரத்துடன் கத்தினாள்: 'அவரா நல்லவர், மோசக்காரர்... இல்லாவிட்டால் என் கண் முன்னாலேயே அவளுடன்... அந்த மேரியுடன்... நான் நான் அவரை மனப்பூர்வமாக வெறுக்கிறேன் டாடி!...'

'Is it?.' — அவரால் நம்ப முடியவில்லை.

'டாடி!. என்னிடம் இது பற்றி எதுவும் பேச வேண்டாம்!.' — என்று கூறிவாறு அவள் விரைந்து தன்னறைக்குச் சென்று விடுகிறாள்.

மிஸ்டர் ருெபேட்சன் கவலையிலாழ்ந்தார். அவர் உள்நாட்டு உயர்தர அதிகாரியாக இருந்தவரை, அரசாங்கம் இந்தியாவின் அமெரிக்க தூதுவராக நியமித்திருந்தது. அதனால் அவர் உடனடியாக இந்தியாவுக்குச் செல்ல வேண்டியவரானார். மூத்த மகன் தனது பட்டப் பரீட்சை முடியும் வரை எங்கும் வர முடியாது என்று கூறிவிட்டான். இரண்டாவது மகள் லிஸியோ இந்தியா என்றாலே மிகுந்த அருவருப்புக் கொண்டிருந்தாள். அது மட்டுமல்லாமல் அது பற்றிக் கேவலமாகவும் வேளியேயும் கூறித் திரிந்த அவளா இந்தியா வருவாள்' மந்திர தந்திரக்காரரும்... பாம்புகளும் பிச்சைக்காரரும் நிறைந்த வரண்ட பூமி என்ற எண்ணமே நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்தது. அவளது எண்ணத்துக்கு உரமளிப்பது போன்று வெளிநாட்டவர் சிலர் எழுதிய இந்திய விஜயம் பற்றிய நூல்களும் விளங்கின.,

'வீட்டுவாசலிலே சாக்கடைகள் ஓடுகின்றன. அவற்றுன் துர் நாற்றம், அவற்றருகே பிறந்த மேனிச் சிறுவர்கள் விளையாடுகின்றனர், வீட்டுச் சுவர்களிலே விருட்டி தட்டியிப்பார்கள்... எங்கும் ஒரே துர் நாற்றம்...' — இவற்றைப் பற்றியெல்லாம் படிக்கும் போது அவளுக்கு குமட்டிக் கொண்டு வரும்.

'க்... வாக்!... வ்... வாவ்!...

மிஸ்டர் ருெபேட்சனுக்கு இந்தியாவுக்குச் செல்லுமாறு உத்தரவு வந்ததும் பிரச்சினையாக நின்றவள் இந்த லிசி அவளுக்கும் அவளது நண்பன் டேவிட்டுக்கும் மணமாக இருந்தது. ஆனால் திடீர் உத்தரவினால் எதுவும் செய்ய முடியாதவாறு இருந்தது. அப்படிப் பட்ட லிசியே டேவிட்டை விட்டு இந்தியாவுக்கு வருகிறேனென்றால் இவருக்கு வியப்பாக இராதா?...

அன்றிரவுக்குள் அவளுக்கு என்னதான் நடந்தது?

மெரிலாண்ட் கிளப்'பில் நடந்த நிகழ்ச்சி அவளுள் அனலை வாரிக் கொட்டுகின்றது.

அவளும் டேவிட்டும் அன்றிரவு அங்கு சந்தித்திருந்தார்கள். அவனும் அவளும் தந்தையின் இந்தியப்பயணத்தால் அதிகம் பேச இருந்தது. எங்கும் மெல்லிய மேனாட்டு இசைபரவிக் கொண்ருக்க... கண்ணாடி மதுக் கிண்ணங்களின் கிளிங் ...இனிங் ஓசையும் புத்தம் புதிய ஆடைகளின் சலசலப்பும் நவீன வாசனைத் திரவியங்களின் மனதை மயக்கும் நறுமணமும்... எங்கும் ஒரே இன்பப் பிரவாகம்...

நடன வாத்திய இசை முழங்கலாயிற்று.

ஓ!, அவளுக்கு மிகவும் பிடித்தமான இசை!, உடலின் நரம்புகளை முறுக்கேற்றி உடலையே குலுக்கவைக்கும் இசை!.

அவனும் அவளும் ஜோடி சேர்ந்தார்கள்.

கால்கள் நடனமாட... அவன் இதழ்கள்... அவளின் இதழ்கள்... கண்ணின் மடல்களை... வாளிப்பான கழுத்துக்களை... மென் தோள்களை ஸ்பரிசித்துக் கொண்டிருக்க... அணைப்பின் கரங்களின் இறுக்கமதிகமாகின்றன.

அவனும் அவளும் இசையுடன் இணைந்து...

இசை நின்றது. அவர்கள் தங்கள் ஆசனத்தில் வந்து அமர்ந்தார்கள். இருவர் வாத்ழ்துக்களுடன் மதுபானங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. கொஞ்சம் அதிகமாகவே அவளது நீள் வட்ட முட்டை வடிவ மதுக்கிண்ணத்தில் அவன் உருவே மிதந்து. வழிந்தது,

அடுத்த இசை முழங்கியது.

அவன் எழுந்தான். அவளும் எழுந்தாள்.

'ஹாய்!, டேவிட்!.' ... என்றபடி ஒரு எழிற்கரம் அவன் முன் நீண்டது. அவன் நிமிர்ந்தான். அவளின் ஆபீஸ் தோழி, 'நான் உங்களுடன் ஜோடி சேரலாமா?...'

அவன் அவளை பார்த்தான். மறு விநாடி புதிய தோழியுடன் சென்றான். அவளையும் இன்னொருவர் அழைத்தார்.

அவளால் நடனத்தை இரசிக்கவே முடியவில்லை. நடனமாடியவாறு அவர்களையே வட்டமிட்டு நோக்கியபடி இருந்தாள். நடனம் முடிவடையும் தறுவாயில் அவர்களைக் காணவில்லை. அவர்கள் நடனமாடிக்கொண்டே அடுத்த ஹாலுக்குச் சென்றிருக்க வேண்டுமென எண்ணினாள். நடன இசை முடிந்து அவள், வெளியே வந்து பார்த்தபோது—

தனது தோழியின் அணைப்பில் அவன் ஆழ்ந்து...

அவளுக்கு என்ன நடந்தது என்றே புரியவில்லை. ஒரே களேபரமாகிவிட்டது. அவள் தனது காரை எடுத்துக் கொண்டு கிளம்பும் போது டேவிட் ஓடி வந்தான். 'லிசி'... நான் சொல்வதைக் கேள்... உண்மை புரியாமல்...' —அவள் அக்ஸிலேட்டரை வேகமாக அழுத்தினாள்.

,மாடம்! என்ன வேண்டும் காபியா.. டீயா... சொக்லட்!—' ஏயர் ஹொஸ்டலின் உபசரணை அவளை இவ்வுலகுக்கு கொணர்ந்தது. அவள் காபியை அருந்தியபோது டேவிட் என்ன சொல்ல முற்பட்டிருப்பான்? நான் தான் அவசரப் பட்டு விட்டேனோ? என்ற சிந்தனையும் எழுந்தது.

விளை நிலத்தை நோக்கி கீழிறங்கும் வெட்டுக் கிளியாக விமானம் இறங்கிக் கொண்டிருந்தது.

## (2)

**இது** தான் இந்தியாவா?.

—விமான நிலையத்தில் கால் வைத்ததும் அவளுக்கு எழுந்த எண்ணம், பின்னர் வியப்பாக மாறலாயிற்று. விமான நிலயத்தில் தூதரக உத்தியோகத்தர்கள் மரியாதையுடன் வரவேற்றார்கள். அவர்களுக்கு டில்லி மாநகரில் பிற நாட்டினர் மிகுதியாக வாழுகின்ற பகுதியில் இடம் பிடித்திருந்தமையால—அவளுக்கு தான் பிற நாட்டிலேயே இருப்பதான உணர்வு ஏற்படவில்லை. ஆயினும், ஒரு புறம் வெளி நாட்டினருக்கே, உரித்தான பரபரப்புச் சூழலும், மறுபுறம் கீழைத் தேசத்திற்கே சொந்தமான அமைதியும் இழையோடுகின்ற அழகு அவளைக் கவர்ந்தது.

அவர்கள் தூதரகத்தில் பதவி வகிக்கும் கிருஷ்ணராமையர் அவர்கள் இல்லத்திற்கு அருகிருந்தமையால், அவர்களின் நட்பு அவளுக்கு கிட்டியது. அவர்கள் விட்டிலிருந்த பண்பாட்டு முறை அவளை வியப்பிலாழ்த்தியது. வெளியே எவ்வளவு உயர் பதவி வகித்தாலும் வீட்டில் வயது வந்த பெற்றோர்களுக்கு அவர்கள் கொடுக்கும் பய பக்தி உணர்வும், பிள்ளைகளின் நல்வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் சிறப்பாக மண விசயத்தில் பெற்றோர் எடுக்கும் பெருமுயற்சியும், கணவனிடம் மனைவியினது அன்பு கலந்த பதி பக்தியும்' தெய்வ உணர்வும், குடும்பத்தில் ஒருவருக்கு ஏற்படுகின்ற இன்ப துன்ப நிகழ்ச்சிகள் எல்லாரையும் பாதிப்பதையும் கண்டபோது — உலக ஒற்றுமை இங்கிருந்து தான் உற்பத்தி யாகிறது என்ற எண்ணமும் எழுந்தது.

பஞ்சசீலக் கொள்கை நிலவ இந்த வாழ்க்கை முறையே காரணம் எனத் திடமாக நம்பினாள்.

அதேவேளையில் தனது சொந்தப் பிரச்சினை பற்றி தனது பெற்றோர் அதிக சிரத்தை எடுக்காதற்கு காரணம் சிரத்தை இன்மை காரணமல்ல. நமது வாழ்க்கை முறையே காரணம் என்ற எண்ண வலைகள் மனதிலே வட்டமிட்டன.

அவள் எதிர் பார்த்துவந்த மாதிரி பொழுது போவது கஷ்டமானதாக இருக்கவில்லை. கிருஷ்ணராமையரின் மகள் சீதா அவளுக்கு நெருங்கிய தோழியாகிவிட்டாள். அவள் கான்வெண்டில் படித்தவள்.

தென்னிந்தியாவைச்சேர்ந்த குடும்பமாயினும், வட இந்தியாவில் நீண்ட காலம் வசித்த காரணத்தால் பல மொழிகள் தெரிந்திருந்தது. அவள் கான்வெண்டில் படித்திருந்தாலும் தனது தமிழ் பண்பாட்டை மிகவும் போற்றி வந்தாள்.

லிசிக்கு அவளின் தோற்றமே மிக அழகாக விளங்கியது. கருநாகம் போன்ற நீண்ட ஜடை, நீள்வட்ட முகத்தில் மின்னும் பொட்டு, பூ, அவளின் சேலை, ஆபரணங்கள் எல்லாமே வசீகரித்துவிட்டன.

இந்தியக் கலைகள் பற்றிய விபரங்களுக்கும் அவளுக்கு விளக்கம் அன்று கிடைத்தது. அன்று கோகுலாஷ்டமி தினம். ஊரே பரபரப்பில் சூழ்ந்திருந்தது. ஊர் முழுதும் கண்ணன் லீலை'களை நடித்துக் காட்டிக்கொண்டிருந்தார்கள். அது லிசியை மிகவும் வசீகரித்தது. மகிழ்ச்சியுடன் கூறினாள்! இது எங்கள் நாட்டு நடனம்போலுள்ளது! அதற்கு சீதா கொடுத்த கொடுத்த விளக்கம்—

(VII-ம் பக்கம் பார்க்க)

# கிழக்கும் மேற்கும்

(VI-ம் பக்கத் தொடர்ச்சி)

'அப்படியல்ல. உங்கள் நடனம்...ஏன் எல்லாக் கலைகளுமே மனதின் இச்சைகளை ஒரு வெறியாக வெளியேற்றி அந்த வெறியையே நாலு பேருக்கு முன்னால் நாகரிகமற்ற முறையில் காட்டும் கலைகளாக விளங்குகின்றன. இதனை ஒரு சாதாரண குடிகாரன் செய்து விடலாம். ஆனால் எங்கள் கண்ணன் ராதை நடனமோ தெய்வீகமானது. பாவனைகள் மூலம் மனித இயக்கத்தின் உயிர் நாடியின் தத்துவமாக விளங்குமே அன்றி, வாழ்க்கைத் தத்துவத்தையே பாழாக்கிவிடாது. இதனால்தான் நாம் வாழ்க்கையையே தவமாகக் கொள்ள...நீங்கள் ஒரு வெறியாடலாகக்கொள்கிறீர்கள்.. வாழ்க்கையைப் பதப்படுத்தாத கலைகளே நம்மிடம் இல்லை!'

ஒரு கணம் மெரிலாண்ட் நிகழ்ச்சி அவள் மனதில் திரையிட்டது அது தெரிந்து தான் சீதா இப்படிக் கூறினளோ என்று அவள் முகத்தைப் பார்த்தாள். அவள் முகத்தில் அமைதியே குடிகொண்டிருந்தது.

கோடை விடுமுறையின் போது இருவருமாக இந்தியாவைச் சுற்றிப் பார்க்க புறப்பட்டார்கள். புதிய புதிய திட்டங்களினால் இந்தியா பெற்று வரும் முன்னேற்றம் அவளைத் திடுக்கிட வைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக பக்ரா-நங்கல் திட்டம் அவளை வியப்பின் எல்லைக்கே கொண்டு சென்றது.

எல்லோராக் குகை...எலிபெண்டாக் குகை... அஜந்தாக் குகை...கண்ட அவள் ஓ!...இது கலை நாடு என இதழ் குவித்தாள். பயணம் தென்னிந்தியா வரை நீண்ட போது...

தஞ்சைப் பெருவுடையார் கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில்...அலை கடல் ஓரத்தே கலையரங்கம் நடத்தும் மகா பலிபுரம்...

எல்லாவற்றையும் பார்க்கப் பார்க்க, இது காறும் இந்தியாவைப் பற்றி அவள் வைத்திருந்த எண்ணங்கள் பழம் சுவரின் தரைப் பொடிகளாக உதிர்ந்தன.

அவர்கள் மகா பலி புரம் போய் விட்டு திரும்பும் போது ஒரு குடிசையிலிருந்து ஒரு பெண் அலறும் ஓசை கேட்டது. அவர்கள் காரை நிறுத்திவிட்டு குடிசைக்குள் நுழைந்த போது ஒருவன் குடித்துவிட்டு மிருகத்தனமாக தனது மனைவியை அடித்துக்கொண்டிருந்தான். அவர்களைக் கண்டதும் அவன் உறுமிக்கொண்டே தள்ளாடி தள்ளாடியவாறு வெளியேறினான். அவர்கள் அப் பெண்ணைத் தூக்கி உதவி செய்யும் போது அவள் கூறினாள்.

'அம்மா'...அவர் குடிவெறியில் போறார். எதிலாவது அடி இடி படப் போறார். அவரைப் பாருங்கம்மா!''

—அவள் கூறியதை விசிக்கு சீதா மொழி பெயர்த்த போது விசி வியப்பின் உச்சிக்கே போய்விட்டாள்.

திரும்பவும் காருக்கு வந்ததும் விசி கேட்டாள். "ஏன் இவள் விவாகரத்து செய்யக் கூடாதா?''

'செய்தால் பிரச்சனை தீர்ந்துவிடுமா என்ன?... விசி நீங்கள் கேட்கிறது எனக்குப் புரிகிறது. இங்கு ஒருத்திக்கு ஒருவன் என்ற நீதியே உண்டு. அவன் நல்லவனோ கெட்டவனோ? அதுவே அவளுக்கு வாழ்வு. அதனை விட மேலான வாழ்வு உண்டு. என்ற எண்ணம் இங்கு ஒருத்திக்கும் எழாது. அவனைத் திருத்தி வாழவே முனைவாள். மேலும் இப்படி விவாகரத்து செய்து கொண்டே போனால் அதற்கு முடிவேது. மனித மனம் தான் எல்லையற்றதாயிற்றே. அத்துடன் விவாகரத்து தம்பதிகளை உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக பலவீனப் படுத்திவிடுகிறது. இப்படி ஒரு வழியிருப்பதனால், ஒரு அற்பக் குறையும் 'கணநேர பலவீனமும் விவாகரத்தை அதிகரிக்கச் செய்து விடுகிறது...அதனால் எத்தனை வாழ்வை மேற்கொண்டா நிறைவு என்பதே ஏற்படாது போகிறது.'—சீதா நிறுத்தினாள்.

விசியின் மனதிலே எத்தனையோ எண்ணப் புயல்கள் வெடித்தன.

(3)

'டாடி! நான் மீண்டும் அமெரிக்கா போகப் போகிறேன். டேவிட்டை பார்க்காமலிருக்க முடியவில்லை!'—என்று அவள் சொன்னபோது அவர் திகைத்தாலும் வரவேற்கவே செய்தார்.

'இந்தியா பிறநாட்டிடம் கடன் கேட்டால் அது பெருகிவரும் குடிப் பெருக்கத்தாலான பொருளாதாரப் பிரச்சனையாலேயே!... ஆனால் வாழ்க்கைப் பிரச்சனைக்கு நாம் முடிவு காண இந்தியாவிடம்...ஏன் கீழைத் தேசங்களிடம் கடன் வாங்க எவ்வளவோ இருக்கிறது. அதன் அளவு அளவிட முடியாதது. ஆமாம் கொஞ்சமல்ல...நிறைய...நிறைய—அவள் விமானத்தில் ஏறும் போது இவ்வாறு எண்ணமிட்டாள். விமானம் காளிதாசனின் தூதுவிடுத்த மேகமாகிப் பறந்தது.

# தந்தை நேருஜி பற்றி

பண்டித நேரு, நாட்டின் சுதந்திரத்தை மீட்பதில் ஆற்றிய பங்கினோடு மூன்று பெரிய சாதனைகளை சாதித்திருக்கிறார். அவை மூன்றும், திட்டமிடப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப நாட்டைத் தயார்ப்படுத்துதல், ஜனநாயக வழிமுறைகளை நிலை நாட்டுதல், கூட்டுச் சேராக் கொள்கை, என்பன.

திட்டமிடப்பட்ட பொருளாதாரக் கொள்கையைச் சுதந்திரம் பெற பல காலங்களுக்கு முன்பே, நேருஜி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்குள் புகுத்தினார்.

'அந்த நேரத்தில் இதுமிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது. ஏனெனில் பலரால் இதன் முக்கியத்துவத்தை உணரமுடியவில்லை. ஆகவே அதை எதிர்த்தார்கள். முழுக்க முழுக்க நேருவின் தீர்க்கதரிசனத்தினலே தான், இந்தியா சுதந்திரம் அடைந்த நேரம், இந்தியாவிடம் உறுதியான பொருளாதாரக் கொள்கை இருக்க முடிந்தது. அதனாலேயே, காலங்கடத்தாமால் உழைப்பில் இறங்கவும் முடிந்தது.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டன. ஆனால், சீன ஆக்கிரமிப்பால் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் நடத்துவதில் தடங்கல்கள் ஏற்பட்டன.

நேருஜி ஜனநாயகத்தில் மாறுத நம்பிக்கை வைத்திருந்தார். அவர் அப்படி நம்பிக்கை யுடையவராயிருந்திராவிடில், எப்பொழுதோ ஒரு சர்வாதிகாரியாகியிருக்க முடியும்.

இந்தியா ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் நிரம்பிய ஒரு பெரிய நாடு. இந்நாட்டில் நவீன ஜனநாயகத்தை ஏற்படுத்துவது மிகவும் கஷ்டமான முயற்சி தான். நேருஜியின் தலைமைக்கு ஓர் எடுத்துக்காட்டே இந்திய அரசியற் சட்டம். சுதந்திரம் அடைந்த பின், இந்தியா மூன்று பொதுத் தேர்தல்களைக் நடத்தி முடித்துவிட்டது. ஜனநாயக மரபுகளும் நிலைத்து நின்று விட்டன.

இந்தியா சுதந்திரம் அடைந்த நேரம் உலகம் இரு முகாம்களாகப் பிரிந்து நின்றன. இந்திய நாடு இந்த இரு முகாம்களில் எப்பக்கமும் சாராது நடுநிலை நின்று, ஒவ்வொரு பிரச்சனையிலும், நியாயம் எங்கிருக்கிறதோ, அதை ஆதரித்து சுதந்திரமாக செயலாற்ற வேண்டும் என்று நேருஜி தீர்மானித்தார். இதனல், உலகம் எதிர் நோக்கும் பிரச்சனைகளில் இந்தியா தலையிடாமலிருக்கும் என்பது அர்த்தமல்ல.

# மகள் இந்திரா காந்தி


வாசகர்களுக்கு எமது இந்திய சுதந்திரதின வாழ்த்துக்கள்!

தேசமெலாம் புகழ் பெற்றது

- சிந்தனைக்கு மகிழ்ச்சியும், உடலுக்கு உற்சாகமும் தருவது
- சோம்பலை நீக்கி சுறு சுறுப்பைத் தருவது

எல்லோரும் விரும்புவது

செய்யது பீடி

கை தேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு சுத்தமான புகையிலையினால் தயார் செய்யப்பட்ட செய்யது பீடியை உபயோகித்து மனமகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுங்கள்.

செய்யது பீடி டிப்போ

192, பழைய சோனகதெரு, கொழும்பு—12.

தொலை பேசி: 78001

# திட்டமிடுதல் மூலம் இந்தியாவின் முன்னேற்றம்

ஒரு நாட்டின் அரசியற் சுதந்திரத்திற்குத் திட்டமிட்ட பொருளாதாரம் தோன்றாத் துணையாகும். பாரதநாடும் 1951-ம் ஆண்டு முதல் நன்கு திட்டமிடப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமே முன்னேறி வருகிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை ஏற்கனவே நிறைவேற்றியிருக்கும் பாரதம் இப்பொழுது நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான ஒழுங்குகளைப் பரந்துபட்ட முறையில் மேற்கொண்டுவருகிறது.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சகல வாய்ப்புக்களையும் பயன்படுத்தி, இதுவரை நிறைவேற்றப்பட்ட மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் போதும் இடப்பட்ட மூலதனத் தொகையுடன் கூடியதாக இது உருவாகும் என்று தெரிகிறது.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஏனைய மூன்றாண்டுத் திட்ட காலமான கடந்த பதினைந்து ஆண்டு காலத்தில் சிமெந்தி, மின்சாரம், தொழிற்சாலை எந்திரங்கள் முதலியவற்றில் பெற்ற முன்னேற்றத்தின் இரட்டிப்பானதாக அமையும் என்று நம்பப்படுகிறது.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பின்னர் பாரத துணைக்கண்டம் சுய பலத்தில் நிற்கக்கூடிய நிலையை எய்துவதுடன் ஏனைய துறைகளில் எத்தகைய இன்னலோ இடாப்பாடோ இன்றி முன்னேறுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


## திட்டமிடுதல்

1951-ம் ஆண்டு சித்திரைத் திங்களில் முதலாவது ஐந்தாண்டுத் திட்ட அமுல் ஆரம்பமாகியது. இன்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பூர்த்தியாகும் நிலையை அடைந்திருக்கிறது. இந்தப் பதினைந்து ஆண்டு கால இடைவேளைக்குள் பாரத துணைக்கண்டம் அடைந்திருக்கும் முன்னேற்றம் அளப்பரியது.

முதலாவது ஐந்தாண்டு (1951 — 56) திட்ட காலத்தில் சுமார் ரூபா $33\frac{1}{2}$ லட்சம் கோடி செலவிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது இடப்பட்ட மூலதனம் முதலாவது திட்ட காலத்தின் தொகையைப் போல் இருமடங்காகும். ரூபா $68\frac{1}{2}$ லட்சம் கோடி இரண்டாவது திட்ட காலத்தில் தேவைப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்ட காலத்தில் பொதுத் துறை மூலதனம் ரூபா $83\frac{1}{2}$ லட்சம்கோடியும், தனியார் துறை மூலதனம் ரூபா 45 லட்சம் கோடியும் செலவிடப்பட்டிருப்பதாக இப்பொழுது மதிக்கப்படுகிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் சுமார் 230 லட்சம் கோடி செலவிடப்பட்டிருக்கிறது.

## தொழில்துறை வளர்ச்சி

தொழிற்றுறை வளர்ச்சிக்காக முதலாவது திட்ட காலத்தில் சுமார் 4 லட்சம் கோடியும், இரண்டாவது திட்ட காலத்தில் சுமார் $16\frac{1}{4}$ லட்சம் கோடியும் செலவிடப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்ட காலத்தில் 26லட்சம் கோடி செலவிடுவதாக திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் இதுவரை 30லட்சம் கோடி செலவிடப்பட்டிருப்பதாக கணக்கிடப்படுகிறது.



ரூர்கேலா எண்ணைத் தொழிற் சாலையின் ஒரு தோற்றம்.

கடந்த பதினைந்து ஆண்டு காலத்துள் பொறியியல், எரிபொருள், சிமெந்தித் தொழில் துறைகளில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

ஏனைய தொழில்துறைகள் இக் காலகட்டத்துள் எட்டு விழுக்காடு வளர்ச்சியை அடைந்திருக்கும் பொழுது முன் சொன்ன துறைகள் பதினைந்து முதல் இருபத்தைந்து விழுக்காடு வளர்ச்சியை அடைந்திருப்பது ஒரு சாதனையாகும்.

## பதினைந்து ஆண்டில்

முதலாவது திட்ட காலத்தில் நாட்டில் ஏற்கனவே இயங்கிய தொழில்களைச் சீர்படுத்துவதும், நுகர்வோர்க்கு வேண்டிய வசதிகளைச்செய்து கொடுப்பதுமே முக்கிய இலக்காக அமைந்திருந்தது. இந்த இலக்கு பூரணமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இரண்டாவது திட்ட காலத்தில் உற்பத்தி பெருக்கம் முக்கிய இலக்காக அமைந்தது. இதற்கு இருந்த தொழிலகங்களை விரிவுபடுத்தியதுடன், புதிய தொழிலகங்களும் தொடங்கப்பட்டன.

இரண்டாவது திட்ட காலத்தில் அலுமினியம், சிமெந்தி, மருந்து வகைகள், சணல், தொழிற்சாலை உபகரணங்கள் தேவைக்கும் அதிகப்படியாக உற்பத்தி செய்யப்பட்டது.

மூன்றாவது திட்ட காலத்தில் உணவு உற்பத்தி முக்கிய இலக்காக அமைந்தது. அத்துடன் முக்கிய தொழில் துறைகளை விரிவுபடுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்ட காலத்தில் நோக்கம் பூரணத்துவப்பட்டபோதிலும் இயற்கை ஒத்துழைக்க மறுத்தமையால் இத்திட்ட காலத்தின் இறுதி ஆண்டு (1965 — 66) நாடு என்றும் கண்டிருக்காத ஒரு பெரும் நெருக்கடியை உருவாக்கியது. சீனப் படையெடுப்பும் இதற்கு ஒரு தடையாக இருந்தது.

தொழில்துறை வளர்ச்சியில் ஒருசேர நோக்குகையில் மின்சார எந்திரங்கள், மின்

யில் சில துறைகளின் வளர்ச்சி அதன் இலக்கை அடையவில்லை என்றாலும் வளர்ச்சி பிரமாதமானது என்பதை மறுக்க இயலாது. பருத்தி, உருக்கு, இரயில் தளபாடங்கள், சிமெந்தி, சீனி, கடுதாசி ஆகியவற்றின் உற்பத்தி குறிப்பிடக்கூடியளவு அதிகரித்திருக்கிறது. அதே போன்று எந்திர உபகரணத் தொழிலும் குறிப்பிடக் கூடியளவு வளர்ந்திருக்கிறது.



பழம் பெரும் சிற்பக்கலையின் எடுத்துக் காட்டாக விளங்கும் எல்லோரா காளி கோயிலின் கற்றூண்.


சார விசிறிகள், ஈருருளிவண்டிகள், தையல் மெசின், வானொலி உபகரணங்கள் போன்றவற்றின் உற்பத்தியும் முன்னேற்றமடைந்திருக்கிறது.

மூன்றாவது திட்ட காலத்தில் எரிபொருள் துறை வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும்.

உலகப் படத்தில் இந்தியாவும் எண்ணெயுள்ள நாடு என்று குறிப்பிடுமளவிற்கு நிலைமை மாறியிருக்கிறது. அலுமினிய உற்பத்தியிலும் இன்று இந்தியாவிற்கு உலக சந்தையில் ஒரு இடம் உண்டு.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றியிலேயே இந்தியாவின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. ஏனைய மூன்று திட்டங்களையும் போன்று இத்திட்டமும் பூரண வெற்றி பெற்றால் பாரத துணைக்கண்டம் தன்னிறைவு பெற்றுவிடும்.


# சென் அந்தனீஸ் நிறுவனங்கள்




**சென் அந்தனீஸ் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ் லிமிட்.,**

516 ஸ்கின்னர்ஸ்றோட், தெற்கு, கொழும்பு 10.